ஏபிஎம். இத்ரீஸ்

# கலைபடும் மௌனம்

உரையாடல்



நமது பண்பாட்டு வெளியில்
சமய வாதங்களும்
கல்விமுறைகளும் கால
ஓட்டத்தில் ஏற்படுத்தியிருக்கும்
இறுகிய மனப்பாங்குகள்,
மெளனப்படுத்தல்கள்,
கலாச்சாரக் காவல்கள் மூலம்
நமது அசைவியக்கத்தை
தடைப்படுத்தி இருக்கும்
வரலாற்றுக் கட்டத்தில் இந்த
உரையாடல் அவற்றை
கலைத்தபடியும் உடைத்தபடியும்
போருக்குப் பிந்திய அல்லது பின்
இன அரசியல் சூழலில்
சகஜீவனத்திற்கான
திசைவழிகளையும் தேடிச்
செல்கின்றது.

காகம்

# கலைபடும் மௌனம்

அனைத்து சமூகமாற்ற செயற்பாட்டாளர்களுக்கும்

ஏபிஎம். இத்ரீஸ்

# கலைபடும்
# மௌனம்

காகம்

***KALAIPADUM MOUNAM***

*Edited by*

*A.B.M. IDREES*

*Cultural Dialouge • First Edition: 2012 • Pages: 148*
*Size: 115x175mm • Publishing Serial No: 26 • Published by: Kaham,*
*Mahmood Alim Road, Valaichenai-05 - 30400*
*Tel.: 94 777 141649 • Email: abmmedia@gmail.com*
*Website: abm-media.com*
*Copyright: Author*
*Designed by: abm-media*
*Printed by: AJ Print, Station Road, Dehiwela*
*ISBN: 978-955-0697-06-9*

***Price: Rs. 300.00***

காகம் - உயிர்ப்பைத் தேடும் வேர்கள் என முன்பு அறியப்பட்டது.

# உரையாடல் பற்றி

நமது பண்பாட்டு நிறுவனங்கள் அல்லது அரசாங்கம் போன்றவை அதிகாரத்தை முறைப்படுத்திக் கொண்டு பல்வேறு நுண் அதிகார வலைப்பின்னல் மூலம் மக்களின் மேல் பிரயோகித்து வருகின்றன. அவற்றில் கண்காணிப்பு, ஒழுங்கு படுத்தல் போன்றதுதான் இந்த மௌனமாக்கலாகும். அதாவது அதிகாரம், மௌனத்தை உற்பத்தி செய்கின்றது. அதிகாரத்தைச் சார்ந்த அனைத்து மையங்களும் அதற்கெதிரான அத்தனை விளிம்புநிலையான மற்றமைகளையும் மௌனமாக்குவதன் மூலம் தனது அதிகார இருப்பை தக்கவைத்துக் கொண்டிருக்கின்றன. எனவே எம்மீதான அதிகார இருப்புகளுக்காக நாம் குரலற்ற, செயலற்ற மௌனிகளாக ஆக்கப்பட்டுள்ளோம். எனவே அதிகாரச் சூழலில் பொதுவாக கவிந்திருக்கும் மௌனத்தைக் கலைப்பது, அதை உடைப்பது அதன் முன்நிபந்தனையாகின்றது. இதுதான் கலைபடும் மௌனம்.

அதிகாரத்தின் ஆகப்பெரிய பிரச்சினை அதன் புலப்படும் தன்மையும் புலப்படாத் தன்மையும்தான். அரசு, ராணுவம் போன்றவை அதிகாரம் தெளிவாகப் புலப்படும் களங்களாகும். ஆனால் சமூகம், பண்பாடு, மரபு, கல்வி, பால்நிலை, உணவு, ஆரோக்கியம் போன்றவற்றில் இழையோடும் நுண் அதிகாரங்கள் கண்ணுக்குப் புலப்படாதவை. எனவே இந்தப் பண்பாட்டுச் சூழலில் அதிகாரத்திற்கு எதிரான போராட்டம் என்பது அதிகாரம் என்னவென்பது பற்றிய புரிதலில்தான் உள்ளது. அதாவது

கல்வியில் மௌனமாக்கல் இருக்கிறது. பண்பாட்டில் மௌனமாக்கல் இருக்கின்றது. அதிகாரம் என்ன வகையான சமுதாய உறவுகளிலிருந்து உற்பத்தியாகிறது என்பதை இஸ்லாத்தின் மூலாதாரப் பிரதியான அல்குர்ஆனும் குறித்துள்ளது. பிர்அவ்னியம் குரல் கட்டமைக்கும் அதிகாரம், ஹராம் ஹலால் என்பவற்றுக்கிடையிலான பல விடயங்கள் அதில் தெளிவு படுத்தப்பட்டுள்ளன.

நமக்கு அருகிலுள்ள எல்லாமே மாறிக் கொண்டிருக்கின்றன. நாம் மட்டும் மாறாமல் இருக்க முடியுமா? நம்மை நாமே மாற்றிக் கொள்ளாத வரை இறைவனும் நம்மை மாற்றமாட்டான். நமது பண்பாட்டு வாழ்க்கையிலும் நமது செயற்பாட்டிலும் நமக்கு இருக்க வேண்டிய மிக முக்கியமான ஊடாட்டம் என்பதே நாம் யாராக முதலில் தொடங்குகிறோமோ அதிலிருந்து வேறாக மாறிவிடுவதுதான். எந்த முன் தீர்மானங்களுடனும் வாழ்க்கையை அணுக முடியாமல் இருக்கின்றது. அது அனைத்துக் கற்பிதங்களையும் முன்முடிவுகளையும் தகர்த்துக் கொண்டும் முன் சென்று கொண்டிருக்கிறது. எந்தக் கோட்பாடும் தீர்வும் நிரந்தரமானது அல்ல. புனிதப் பிரதிகள் அப்படியே இருக்க வியாக்கியானங்கள் மாறியபடியே இருக்கின்றன. இணைந்த, முரண்பட்ட மனங்கள் சந்தித்துக் கொள்ளும் போது எவ்வாறு தம்மைப் பகிர்ந்தபடி நமது பண்பாட்டுக்குள் இருக்கும் நுண் அதிகார அடுக்குகள், சிடுக்களையும் அதில் கவிந்திருக்கும் மௌனங்களையும் உடைத்தபடி செல்வதை இந்த உரையாடலில் நீங்கள் அவதானிக்கலாம்.

இவ்வுரையாடலைச் சாத்தியமாக்குவதற்கு எமக்கு உதவிய அஷ்ஷெய்க் ஆரிபீன், அஷ்ஷெய்க் ஸஜீத், அ.வா. முஹ்சின் மற்றும் அவர்களது நண்பர்களுக்கும்

இந்நிகழ்வுக்கு போக்குவரத்து வசதியைச் செய்து தந்த பொறியியலாளர் பளுல் ஹக் அவர்களுக்கும் இந்நிகழ்வை ஒருங்கிணைத்த முஹம்மத் றிழா அவர்களுக்கும் எனது நன்றிகளைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

ஏபிஎம் இத்ரீஸ்
13.12.2011



திருகோணமலை சந்திப்பொன்றை 2010 ஒக்டோபர் 2-3 திகதிகளில் ஏபிஎம் மீடியா ஒழுங்கு செய்திருந்தது. அதில் கலகம், இல்மா நண்பர்களுடனும் மற்றும் அ.வா. முஹ்சின் அவர்களுடனும் நிகழ்த்திய உரையாடலை இங்கு தொகுத்திருக்கிறோம்.

**ஏபிஎம். இத்ரீஸ்:** முதல் நாகரிகம் இந்த ஆசியப் பிராந்தியத்திலிருந்தே நகர்கிறது. ஆப்ரஹாமின் அல்லது மொசபத்தேமிய நாகரிகம் முதல் நாகரிகமாக இருக்க முடியாது. அதற்கு முந்தியும் ஒரு நாகரிகம் இருந்திருக்க வேண்டும். ஏனென்றால் ஆப்ரஹாம் இஸ்லாமிய சிந்தனையில் ஆதமுக்குப் பிறகு வரும் ஒரு தூதர்தான். அதற்கிடையிலும் நிறைய தூதர்கள் இருக்கிறார்கள். நூஹுக்குப் பிறகு வரும் ஒரு தூதர்தான் அவர். அப்படியானால் நூஹ் வரையான சமூகம் எங்கு வாழ்ந்தது என்றொரு கேள்வி இருக்கிறது. இதனை துஷ்யந்தி என்பவர் என்னுடன் தொலைக்காட்சி நிகழ்ச்சி ஒன்றில் உரையாடினார். பின் இன அரசியல் அல்லது பிரபாகரனது மரணம், முள்ளிவாய்க்கால் நிகழ்வுகள் அதற்குப்பிறகு நாம் அடைந்திருக்கும் நிலை, இப்போது ஏற்பட்டுவரும் சிங்களப் பெருந்தேசியவாதம் சுற்றுலா என்ற பெயரிலும் தொழில்துறை அபிவிருத்தி என்ற பெயரிலும் இந்த இடத்தை ஆக்கிரமித்து செல்லும் நேரம் சிறுபான்மைச் சமூகங்களுக்குள் ஏற்பட்டிருக்கும் ஒரு பயங்கர மௌனம் இதிலிருந்து உரையாடலைத் தொடங்கினால் நல்லது என்பது எனது கருத்து. இதனை நீங்கள் எப்படிப் பார்க்கிறீர்கள்? உங்களை நீண்ட நாட்களாகச் சந்திக்கக் கிடைக்கவில்லை. பேசிப்படவுமில்லை.

ஒரு கட்டத்தில் எனக்குள் உள்ளார்ந்த சோர்வு ஏற்பட்டது. எதை எழுதுவது? எது அடுத்தகட்டம் என்ற ஒரு குழப்பநிலை இருந்தது. அடையாளம் தேவையா அல்லது இல்லையா? அடையாளத்தை எந்தளவுக்கு எடுத்துக் கொள்வது என்பதில். நீங்கள் ஒருவகையான ஆட்களைத்தான் சந்திக்கிறீர்கள். நான் இன்னொரு அமைப்பிலிருந்து வேலை செய்தபடியால் எங்களால் விடுபட்ட, கவனிப்பாரற்று விளிம்பு நிலைக்குத் தள்ளப்பட்டவர்களை எல்லாம் தேடித்தேடி கண்டுபிடித்து போகும் சூழலில் ஒருவர் கேட்கமுடியும் அடையாளத்தைப் பற்றியே எப்போதும் பேசிப்பேசி இருப்பதா? அந்த இடங்களில் சில நேரம் பதில்சொல்ல முடியாமல் போகும்.

இங்கு என்னவென்றால் எனது புரிதலில் இஸ்லாத்தை நான்கைந்தாகப் பார்க்க முடியும். ஒன்று போக் இஸ்லாம் - நாட்டார் இஸ்லாம். இன்னொன்று கல்ச்சரல் இஸ்லாம் - பண்பாட்டு இஸ்லாம். இன்னொன்று செக்கியூரல் இஸ்லாம் - மத நீக்கம் செய்யப்பட்ட இஸ்லாம். இன்னொன்று லிபரல் இஸ்லாம் - தாராளவாத இஸ்லாம். இன்னொன்று இருக்கிறது வைதீக இறுக்கம் கொண்ட நவீனத்துவ நோக்கில் உள்ள ஒரு நிறுவனமயப்பட்ட, அதிகாரபூர்வமான சஊதி வழி இஸ்லாம். இப்படி நாலைந்து செல்நெறி நமக்குள் இருக்கிறது. இந்த வைதீக நிலைப்பட்ட, நிறுவனமயப்பட்ட, நவீனத்துவ நோக்குடைய இந்த அதிகாரபூர்வமான இஸ்லாத்தால் விளிம்பு நிலை இஸ்லாம் ஒரு எலி-பூனை விளையாட்டொன்றிற்குள் உட்பட்டிருப்பதாக நினைக்கிறேன். இந்த அதிதீவிர இஸ்லாம் குர்ஆனில் இருக்கிறதா? ஹதீஸில் இருக்கிறதா? என்று சொல்லி பிரயோகிக்கும் மத்ரஸா கல்வி முறை, என்ஜிஓ நிறுவனங்களின் அதிகாரத்திற்குள்ளால் உள்ளூர், நாட்டார் இஸ்லாத்திற்கு பேரச்சம் ஒன்று ஏற்பட்டு வருகிறது. மையத்தில் ஒன்று இருக்கும் போது மற்றவற்றை விளிம்புக்குத் தள்ளும். இந்த விளிம்பு நிலை இஸ்லாத்தின் கருத்தியலை எமது உரையாடலுக்கு எடுத்துக் கொள்ளலாம். நாம் பேசிவரும் பூர்வீகம்தான் இது. அல்லது அதன் பின்னணிதான் இது. இப்படி ஒரு வரலாற்றுக் காலகட்டத்தில், திருப்புமுனையில் இந்த விடயம் முக்கியத்துவம் பெறுகிறது.

நான்கைந்து மாத எனது உரையாடலில் மணவர்களுடனும் வெளியிலுள்ள சகபாடிகள், உறவுகளுடனும் இந்த விளிம்புநிலை இஸ்லாம் என்ற கருத்தியலை முன்வைத்தால்தான் பூர்வீகமாக இருந்தாலும் சரி சோனக இலக்கியமாக இருந்தாலும் சரி நமது கலை, கலாசார, பண்பாட்டு அம்சமாக, மீட்டுருவாக்கம் செய்யப்பட வேண்டியவையாக இருந்தாலும் சரி திரும்பக் கொண்டு போகும். ஏனென்றால் ஒரே நேரத்தில் ரஸூலுல்லாஹ் எல்லாவற்றுக்குமான பதில் தன்மையைக் கொண்டிருப்பதை

நாங்கள் பார்க்க முடியும். நாட்டார் தன்மையையும் நாம் காணமுடியும். எல்லா சஹாபாக்களும் அபூபக்கர், உமரின் தரத்தில் இருக்கவில்லை. நூறுவீதம் முழு டெக்ஸ்டையும் விளங்கி முழுமையான ஒருவராக எல்லோரையும் மாற்ற வேண்டும் என்ற பிடிவாத நிலைக்கு ரஸூல் (ஸல்) அவர்கள் இருக்கவில்லை. அந்தந்த மக்களின், இனக்குழுக்களின், கபீலாக்களின் பண்பாட்டு அம்சங்களையும் மரபுகளையும் வழக்காறுகளையும் ஜீரணித்துக் கொண்டுதான் ஒரு மாற்றத்தை நோக்கி நகர்ந்திருக்கிறார்கள். அழிக்கவில்லை. அப்படியான நிலையில் இவர்கள் சொல்வது மட்டும்தான் சரி மற்ற எல்லாம் பிழை என்பது, நாம் பேருவலைப் பின்னணியில் இருந்து பார்ப்பது போல் பூர்வீகக் குடிகள் வெளியில் இருந்து வந்த சிந்தனையை தள்ளுகிறார்கள். இதுதான் இப்போது என்னிடம் உரையாடல்கள் மூலம் தோன்றியிருக்கும் கருத்தோ அல்லது மாற்றமோ.

எனவே நாங்கள் இப்போது வெளியீடுகள் பதிப்புவேலைகளில் கூடுதல் கவனமெடுத்திருக்கிறோம். ஒரு புத்தகம் கொண்டுவருவதை விட்டுவிட்டு பத்துப் பத்துப் புத்தகங்களாக கொண்டுவர எண்ணியிருக்கிறோம். முதலீட்டாளர்கள், எழுத்தாளர்கள், விநியோகஸ்தர்களை இணைத்து இதனை சாத்தியப்படுத்தலாம் என்று தோன்றுகிறது. எழுத்தாளரே எல்லாவற்றையும் செய்யும் நிலை மாறிவருகிறது. அந்த யுகம் இப்போது இல்லை. எழுத்தாளனின் சுமை குறையவேண்டும். அப்போதுதான் நல்ல நல்ல படைப்புகளை அவனிடமிருந்து நாம் எதிர்பார்க்கலாம். எமது பயணம் இவை எல்லாவற்றையும் உள்ளடக்கியதாகவே இருக்கிறது. நாம் இப்போது இங்குதான் நிற்கிறோம். நீங்கள் உரையாடலைத் தொடக்கினால் நன்றாக இருக்கும்.

**அ.வா. முஹ்சின்:** அண்மைக்காலங்களில் உங்களுக்கிடையில் அனேக சந்திப்புகள் நடந்திருக்கு என்று நினைக்கிறேன். சந்திப்புகள் கூடுதலாக நடக்கிறது என்றால் ஏதோவொரு

தேவை, அல்லது ஒரு மன அரிப்பு எல்லோருக்குள்ளேயும் இருக்கிறது. ஒவ்வொரு பகுதியில் உள்ளவர்களுக்கும் இருக்கிறது. சந்திப்புகளில்தான் ஒவ்வொரு வகையான கருத்துகள் மெல்ல மெல்ல நகர்ந்து ஒரு வடிவத்தை அடைகிறது. முடிவுகளுக்கும் நம்மை இட்டுச் செல்கிறது.

எனது தனிப்பட்ட வாழ்க்கை அனுபவத்திலிருந்து பார்க்கின்ற போது சமுகத்திலிருக்கும் பல அம்சங்களும் உதாரணமாக, பொருளாதாரம், கலாச்சாரம், அரசியல், மதம் என்று எதுவாக இருந்தாலும் அவை அவற்றுக்குரிய முறைசார்ந்தே இயங்க வேண்டும். ஒவ்வொன்றுக்குள்ளேயும் ஊடாட்டம் இருப்பதும் ஒவ்வொன்றும் இன்னொன்றைப் பாதிப்பதும் வேறு. அதேநேரத்தில் ஒவ்வொன்றுக்கும் தனித்தனியான விதிகளும் தனித்தனியான போக்குகளும் அம்சங்களும் இருக்கிறன. பொதுவாக என்ன நடக்கிறது என்றால் இலக்கியத்தோடு தொடர்புபடுபவர்கள் அவர்களது இயல்பான சாத்தியம் என்னவென்றால் எல்லாவற்றையும் விமர்சனபூர்வமாக புரிந்து கொள்ளும் தன்மை அவர்களுக்கு வருகிறது. தாங்கள் எழுதுவதாலும் மற்றவர்கள் தங்களது படைப்புகளை விமர்சிப்பதாலும் இது உருவாகும். இதனால் என்ன நடக்கிறது என்றால் படைப்பிலக்கியத்தில் அவர்களுக்கு இருக்கும் ஆர்வம் எல்லாவற்றிலும் தலைப்போடும் அல்லது எல்லாவற்றையும் தங்களுக்குள் உள்வாங்குகின்ற போக்கில் அந்த நிலை வெளிப்படப்பார்க்கும். அவங்களே அரசியல் செய்யும் ஒரு ஆளாக அல்லது அவங்களே அரசியல் கருத்தைச் சொல்லும் ஆளாக அல்லது அரசியல் போராட்டம் செய்யவேண்டும் என்று நினைக்கின்ற ஒரு ஆளாக மாறுவர். இதனால் ஒன்றையும் அவர்களால் செய்ய முடியாது போகும். ஏனென்றால் அரசியலை அரசியல்வாதிதான் செய்ய வேண்டும். இலக்கியவாதி அரசியலைச் செய்ய முடியாது. அது அதற்கென்றே இருக்கிறது. அரசியலில் பேணும் ஒழுக்கம் என்பது இலக்கியவாதிக்கு ஒவ்வாதது. அந்த அரசியலை ஏற்றுக்கொள்கிறோமா என்பது வேறுவிடயம்.

எதை நாம் செய்யப் போனாலும் அதற்கென்று ஒரு குறிப்பிட்ட முறைமை இருக்கிறது. அந்த முறைமைக்குள்ளால் போவதற்கு கிட்டத்தட்ட நூறுவீத உழைப்பும் அர்ப்பணிப்பும் ஈடுபாடும் தேவைப்படும். நாம் இப்போது எல்லாவற்றிலும் காலை வைத்து எல்லாவற்றையும் தொடும் ஒரு ஆளாக இருப்பதால் கடைசியில் ஒன்றுமே செய்யமுடியாத ஒரு நிலை இருக்கிறது. எல்லோருடனும் பகைமைக்குரிய ஒரு ஆளாக நாம் மாறுகிறோம். பாப்லோ நெரூடாவை அல்லது மாக்ஸிம் கோர்க்கியை எடுத்துப் பார்த்தால் இவர்களுக்கும் அரசியல் இல்லாமல் இல்லை. அல்லது தர்வீஷ், எட்வர்ட் ஸயீத் போன்றவர்களை பார்த்தாலும் அரசியல் இல்லாமல் இல்லை. ஆனால் இலக்கியத்தில் அவர்கள் படைத்த ஆளுமை இருக்கிறதே அந்த ஆளுமை அரசியல் சிந்தனையை, கருத்தை ஏற்குமளவுக்கு அவர்களைப் பாதிக்கவில்லை. அவர்கள் எல்லோருடனும் தங்களது உறவை வளர்த்துக் கொள்ளும் ஆளாக இருந்தார்கள். மாக்ஸிம் கோர்க்கியின் வரலாற்றை எடுத்துப் பார்த்தால் லெனினோடும் நல்ல உறவை வைத்திருக்கிறார். ஸ்ரெஸ்கியோடும் நல்ல உறவு. அதேபோல் லெனினை எதிர்ப்போரோடும் நல்ல உறவை வைத்திருக்கிறார். சில நேரங்களில் லெனினோடு பிரச்சினைப்படும் ஒரு ஆளாகவும் இவர் இருக்கிறார். ஆனால் இலக்கியம் என்று வரும்போது அவருக்கு நிகராக அந்தக்காலத்தில் இல்லாத அளவுக்கு ஒரு ஆளுமையாக இலக்கிய இயக்கத்தையே கொண்டு போகிறார்.

நான் இதை ஏன் சொல்ல வருகிறேன் என்றால் எங்களால் உள்ளூர் அரசியல்வாதிகளிடமோ அல்லது தேசிய அரசியலில் உள்ளவர்களிடமோ உரையாட முடிவதில்லை. நாம் பகையாகவே நினைத்துக் கொண்டிருக்கிறோம். அந்த அரசியலில் எங்களுக்கு உடன்பாடில்லை. ஆகவே அதை விமர்சனத்திற்குட்படுத்துகிறோம். ஒரு கட்டத்தில் நேரடியாகவோ, மறைமுகமாகவோ நாங்களே அவர்களை விமர்சிக்கிறோம். கிட்டத்தட்ட உறவாடவே முடியாத ஒரு

உறவாக அது மாறிப்போகிறது.

இலக்கியவாதிக்குப் பின்னால் யாரும் இல்லை என்பதால் ஒரு புத்தகத்தை வெளியிடவோ கூட்டம் ஒன்றை நடத்தவோ முடிவதில்லை. நான் இங்கு சொல்லவருவது எங்களுடைய பாத்திரம் என்ன என்பது. நாம் யாராக இருக்க விரும்புகிறோம்? என்பது. என்னை எடுத்துக் கொண்டால் நான் நூறுவீதம் அரசியல் பிராணி. எனது வாழ்க்கையே அரசியல் ஊடாகத்தான் தொடங்குகிறது. இன்று அது முழுக்கவே மாறிவிட்டது. இந்தத் தேர்தலில் யார் வென்றார்கள் என்ற அறிவுகூட இல்லை. ஆனால் நான் செய்வதும் ஒரு அரசியல்தான். நான் அதனைப் பிரயோகிக்கும் வடிவம்தான் வேறுபடுகிறது. ஒட்டுமொத்த அரசியலையும் நமது சமூக சூழலையும் வைத்துப் பார்க்கும் போது அது இயல்பானதாகவே தோன்றுகிறது.

ரஸுலுல்லாஹ் யுத்தவெற்றிக்குப் பிறகு மக்காவாசிகளுக்கு கூடுதலான கனீமத் பொருட்களை விநியோகிப்பதும் மதீனாவாசிகள் அதிருப்தியடையும் போது 'நான் உங்களுடனேயே இருக்கிறேன்' என்று கூறுவதையும் மிகச்சிறந்த உதாரணமாக நாம் கொள்ள முடியும். இதில் படிப்பினை என்னவென்றால் ரஸுலுல்லாஹ் அவர்கள் யாருடன் எவ்வாறு அணுகுவது என்பதை போதித்திருக்கிறார்கள். நடைமுறையில் சில உறவுகளைப் பேணுவதற்கு இது முன்மாதிரியாகும். நாமோ ஒருவருக்கொருவர் பகைமையை வளர்த்துக் கொண்டிருக்கிறோம். ஆனால் அவர்களிடம் நம்மைவைத்து உழைத்த பணம் இருக்கிறது. செல்வாக்கு இருக்கிறது. ஆட்பலம் இருக்கிறது. அவர்களும் நாமும் ஏதோ ஒரு விதத்தில் இயங்குகிறோம். இதில் சரியும் தவறும் இருக்கிறது. நாம் மாத்திரம் சரி என்பதை நாம்தான் முடிவுசெய்கிறோம். எனது மனைவிகூட நான் செய்வதை சரி என்று சொல்லவில்லை. உறவினரும் அப்படித்தான். இது பொதுவான சமூக மனநிலை.

ஒரு புத்தகத்தை வெளியிடுவதில் நாம் எதிர்கொள்ளும் சிரமத்தை ஒரு அரசியல்வாதி நினைத்தால் இலகுவாக்கலாம். ஆயிரம் புத்தகங்களை வாங்கி விநியோகிக்கும் பலம் அவர்களிடம் இருக்கிறது. அப்படியான உறவுகள் நமக்கிடையில் இருக்குமாக இருந்தால் இலக்கியவாதி சிரமமின்றி செயற்படமுடியும். என்னுடைய கேள்வி இப்படியாக ஒருவர் மற்றவரைப் பகைக்கும் சமூக உறவைத்தான் நாம் கட்டியெழுப்ப நினைக்கிறோமா? சரிபிழை மாத்திரம் கண்டு நாம் உருவாக்கும் சமூக உறவு என்பது உரையாடலை அசாத்தியமாக்குகிறது.

பாப்லோநெரூடா நோபல் பரிசு பெற்ற எழுத்தாளர். அவர் இலங்கைக்கான அந்த நாட்டின் தூதுவராகவும் இருந்திருக்கிறார். அவரை அங்கு ஜனாதிபதி வேட்பாளராகக்கூட நிறுத்த முடியும். ஆனால் அவர் வாழ்ந்த நாட்டிலேயே இளைஞர்களைக் கொன்றொழிக்கக்கூடிய சூழ்நிலை உருவாகிறது. இதனை எல்லா இடத்திலும் பார்க்க முடியும். அங்கு அரசியல் அதற்குரிய போக்கை எடுக்கிறது. இலக்கியம் தனக்குரிய போக்கைத் தீர்மானிக்கிறது. இங்கு நாம் தான் என்ன செய்யவேண்டும் என்பதைத் தீர்மானிக்க வேண்டும். நமது நோக்கம் கலாச்சார ரீதியானது. அதில் பல விடயங்களை உள்ளடக்குகிறோம். அதில் ஒவ்வொருத்தரும் எந்தளவுக்கு உடன்பாட்டோடு இருக்கிறோம் என்பது வேறுவிடயம். செய்யப்போவது இதுதான் என்றால் அதை எப்படி மக்களுக்கு கொண்டு சேர்க்கிறோம் என்பதுதான் இங்கு முக்கியத்துவம் பெறுகிறது.

முஹம்மத் நபி நுபுவத் கிடைத்து மக்காவை விட்டு வெளியேறும் வரையான அந்தப் பதின் மூன்று ஆண்டுகளும் எந்த தனிநபரையும் விட்டுவைக்கவில்லை. எல்லோரிடமும் தூதைக் கொண்டு செல்கிறார். அல்குர்ஆனிலும் இது பற்றி பிரஸ்தாபிக்கப்படுகிறது. கண்பார்வையற்ற ஒருவர் தனது முகத்தைத் திருப்பிக் கொள்வதாக. யாரையும் அவர்

விட்டுவைக்கவில்லை. இங்கு நாம் அதைத்தான் உதாரணமாகக் கொள்ள வேண்டும்.

ஒட்டுமொத்த அரசியலையும் சமூகப் பிரச்சினைகளையும் நாம்தான் சுமந்து கொண்டிருப்பதான ஒரு கற்பனையை நமக்குள் வளர்த்துக் கொண்டு நாம் அரசியலுக்கு அல்லது அரசியல்வாதிக்கு எதிரான, அப்பாற்பட்ட ஒருவராக காட்டிக்கொண்டிருப்பது போலியானது. இந்த அடையாளத்தை நாமே அணிந்து கொள்கிறோம். இந்த மனநிலையை மாற்ற வேண்டும். இதனால் நாம் இழப்புகளையே அடையமுடியும். காரணம் ஊரிலுள்ள அனேகரும் இந்த அரசியலை சார்ந்து நிற்பவர்களே. அரசியலில் சரியும் இருக்கிறது பிழையும் இருக்கிறது. நான் கேட்கிறேன் அந்த பிழையை மாற்றுவதற்கு நாம் எதை வைத்திருக்கிறோம். எங்களுக்கு அது ஏலாமல் இருக்கும் போது, அதில் கால் வைத்து ஒரு எட்டுக்கூட முன்னால் வைக்க நாம் தயாராக இல்லாமல் இருக்கும் போது அதன் பிழைகளை மட்டும் முன்னிருத்தி நாம் எதை அடைய முடியும். நாம் மக்களுக்கு கொண்டு செல்லும் உள்ளடக்கம் என்ன? ஒன்றுமில்லை.

மக்களின் பிரதிநிதிகள் இவர்கள். மக்கள் வேட்பாளர்களையே தெரிவு செய்கிறார்கள். அரசியல்வாதி உருவாக்கும் அடையாளத்தை மக்கள் ஏற்கிறார்கள். மீண்டும் மீண்டும் தெரிவுசெய்கிறார்கள். எனது கேள்வி இவர்களிடம் ஒரு சதவிகிதமாவது நமது சிந்தனையை ஏற்றுக்கொள்ளும் மனப்பக்குவம் இருக்காதா? இருக்குமாக இருந்தால் அதை நாம் தட்டிப்பார்த்திருக்கிறோமா?

எனது புதிய புத்தக வெளியீட்டிற்கு அரசியல்வாதிகளும் வந்திருந்தனர். எனது பாடசாலை நண்பர்கள்தான் அவர்கள். எனக்கு ஆச்சரியம் என்னவென்றால் என்னுடைய படைபுகளை வாசித்து நான் முன்வைக்கும் கருத்தை அவர்கள் முன்னரே தெரிந்துவைத்திருக்கிறார்கள். இது உரையாடலை

சாத்தியமாக்கியது. அவர்களே முன்வந்து புத்தக வெளியீடுகளுக்கு உதவுவதாகக் கூறுகிறார்கள். நான் சொல்லவரும் விடயம் இதுதான் அவர்களுக்குள்ளும் அந்த விடயம் இருக்கிறது. ஆனால் அவர்கள் அதை வெளியிடுவதில் வேறு முறைமையை கடைப்பிடிக்க வேண்டியிருக்கிறது. நாம் அவர்களிடம் இருக்கும் அந்த உணர்வை தட்டுவதுதான் முக்கியம்.

எழுத்தாளன் ஒரு புத்தகத்தை வெளியிடுவதில் சிரமமிருக்காது. ஆனால் தொடர்ந்து புத்தகங்களை கொண்டு வருவதில் பல பிரச்சினைகளை எதிர்கொள்ள வேண்டியிருக்கிறது. நீங்கள் சொல்லும் முதலீட்டாளர், எழுத்தாளர் கூட்டு முயற்சி இருந்தாலும் விநியோகம் என்பது இன்னும் வளர்ச்சியடையவில்லை. பிரச்சினை புத்தகத்தை போடுவதிலில்லை. புத்தகத்திற்கு காசு இல்லை என்றுமில்லை. எப்படி விநியோகிப்பது? எனது கடைசிப் புத்தகம் இருநூறு புத்தகங்கள் கூட விற்கவில்லை. போட்டதே ஐநூறு புத்தகம்தான். இருபது இலட்சம் முஸ்லிம்கள் வாழும் நாட்டில் இருநூறு புத்தகம்தான் விற்கமுடியும் என்றால் அது என்ன? நமது நிலைமையை எப்படி எடுத்துக் கொள்வது? பத்து வீதம் என்றால் இரண்டு இலட்சம், ஒரு வீதம் என்றால் இருபதாயிரம், தசம் ஒரு வீதம் என்று பார்த்தால் இரண்டாயிரம், தசம் சைபர் ஒரு வீதம்தான் விற்றிருக்கிறது. என்னுடைய கேள்வி தசம் ஒரு வீதமும் வேண்டாம். தசம் சைபர் இரண்டு வீதம் - ஐநூறு புத்தகங்கள் விற்க வேண்டாமா? இதற்குரிய விநியோகத்தை கட்டியெழுப்ப முடியுமாக இருந்தால் என்னால் மாதத்திற்கு ஒரு புத்தகம் கொண்டுவர முடியும். காரணம் இந்த ஐநூறு புத்தகத்தில் முன்னூறு புத்தகம் விற்குமாக இருந்தால் எனது முதல் வந்துவிடும். முதல் வந்துவிட்டால் அடுத்த புத்தகத்தை கொண்டுவந்துவிடலாம். எனது கணக்கு, ஒரு மாவட்டத்தில் மட்டும் முன்னூறு புத்தகம் விற்க முடியும். இதை சாத்தியமாக்குவதற்கு உழைக்க வேண்டும்.

மற்றவர்களிலிருந்து வேறானவர்களாக எம்மை நிறுத்திக் கொண்டு தொண்ணூற்றொன்பது வீதமானவர்களையும் பகையாளியாக நினைத்துக் கொண்டு இதனை சாத்தியப்படுத்த முடியாது. நாம் சமூகத்திற்காகத்தான் எழுதுகிறோம் இயங்குகிறோம் என்பதுதான் உண்மை. ஆனால் நாம் முன்வைக்கும் அடையாளம் குறுகியதாக இருக்கிறது. அவர்களுக்கு எதிரானவர் என்பதை முதலிலேயே தெரிவித்துவிடுகிறோம். நமக்கு பின்னால் அணிகள் இல்லாத போது பொதுத்தளத்திலேயே இயங்க முடியும். நாம் அந்த இடத்தில் போய் இருக்க தயார் இல்லாத நிலையில் ஆர்ப்பாட்டம் ஒன்றை நடத்துவதோ எதிரியாகக் கட்டமைப்பதோ நல்லதல்ல. சிந்திக்கக்கூடிய, குறைந்தபட்சம் இலக்கியத்திற்குள்ளால் வருபவர்களின் நிலை இதுவாகத்தான் இருக்கிறது.

அயலில், உலக நாடுகளிலுள்ள பிற எழுத்தாளர்களின் அனுபவங்களையும் நாம் கவனத்திற் கொள்ள வேண்டும். எங்கோ இருக்கும் தர்வீஷின் கவிதை நம்மை உலுப்புகிறது. அப்படி ஒரு கவிதை ஏன் நம்மிடமிருந்து வருவதில்லை? அதற்குக் காரணம் நாம் இலக்கியவாதி இல்லை என்பதல்ல. நாம் படைப்பூக்கத்துடன் இயங்கவில்லை என்பதுதான். அதற்குப் பல காரணங்கள் இருக்கிறன. அதில் முக்கியமாக தொழிற்படுவது நமது மொழியும் நமது கல்விப் பின்புலமும்தான். ஏன் மொழியை முக்கியமாகக் கருதுகிறோம் என்றால் மொழிதான் எல்லாமாக இருக்கிறது. ஒரு சமூகத்தின் எந்த விடயத்தையும் அறிந்து கொள்வதற்கு நாம் அந்த சமூகத்திற்குள் செல்ல வேண்டுமென்பதில்லை. அந்த சமூகத்தின் மொழியை மாத்திரம் வைத்துக் கொண்டே அதன் கட்டமைப்பு, அதன் சொற்கள் அதன் அர்த்தத்தைக் கொண்டே எல்லாவற்றையும் கண்டுபிடித்துவிட முடியும். இது மொழியியல் ஆய்வாளர்களின் கருத்தாகும். அந்தளவிற்கு மொழியும் சமூகமும் ஒன்றாகிவிட்டது. நாம் என்ன செய்கிறோம் என்றால் இன்னொரு மொழியில் படித்து

இன்னொரு மொழியில் சிந்திக்கிறோம். நாம் படிப்பது தமிழ் மொழியில். தெற்கிலுள்ளவர்கள் சிங்களத்தில் படிப்பார்கள். தமிழ் மொழிக்கென்று ஒரு கட்டமைப்பு இருக்கிறது. அதற்கென்று ஒரு வரலாறு இருக்கிறது. சாரம் இருக்கிறது. நீங்கள் ஒரு கவிதை எழுதினால் அது சேரனைப் பின்பற்றுவதாகத்தான் இருக்கும். அல்லது பாரதியைப் பின்பற்றுவதாக இருக்கும். ஆனால் அது உங்களுடையதாக இருக்காது.

நம்மிடமிருக்கும் அத்தனை கவிஞர்களையும் எடுங்கள். அதில் எந்தக் கவிஞனாவது அவனது மொழியில் இலக்கியம் படைத்திருக்கிறானா? இதில் விதிவிலக்காக சோலைக்கிளியை மாத்திரம்தான் நாம் சொல்ல முடியும். அவரது தனித்துவத்தை இன்னும் அவரே புரிந்து கொள்ளவில்லை. மற்றவர்களும் புதுமை என்பதைத்தாண்டி நோக்கவில்லை. இதன் காரணமும் அதுதான். தன்னுடைய மொழியில் அவரது கவிதை இருக்கிறது. அவருக்கே தெரியாது தான் சோனக மொழியில் எழுதுகிறேன் என்று. அதை ஒத்துக் கொள்ளவும் மாட்டார். பேச்சுவழக்குதான் நமது மொழியாக இருக்கிறது. அதுதான் மற்றவர்களில் இருந்து அவரை வேறுபடுத்திக் காட்டுகிறது.

தமிழிலுள்ள படைப்புகளைத்தான் மீண்டும் மீண்டும் நமது படைப்பாளிகள் பிரதிபண்ணுகிறார்கள். எழுதப்பட்டு விட்டதைத்தான் மீண்டும் எழுதுகிறார்கள். ஏன் இவர்களால் வேறுமாதிரி எழுத முடிவதில்லை? காரணம் அவர்கள் எழுதும் மொழி அதைத்தான் மீண்டும் வெளிப்படுத்தும். இதற்கு ஒரே ஒரு உதாரணத்தைச் சொல்கிறேன். 'இங்கினெயும் ஒரு மஹ்சர்' வெளிவந்து சில நாட்களின் பின்னர் மூதூரிலிருக்கும் எனது சகோதரி வீட்டிற்குச் சென்றிருந்தேன். மச்சானின் தொழில் ரீதியான சிங்கள நண்பர் ஒருவர் அங்கு வந்து செல்வது வழக்கம். இவரை சிங்களவர் என்றுதான் எனக்குத்தெரியும். ஒரு நாள் அங்கு செல்லும்போது இவர் படுத்துக்கிடந்து எனது புத்தகத்தை வாசித்துக் கொண்டிருக்கிறார். அருகில் சென்றதும்

'உங்கட கத நல்லா இருக்கு' என்றார். இது என்னை திகைக்க வைத்துவிட்டது. ஒரு சிங்களவர் அதுவும் சோனக மொழியில் எழுதப்பட்ட ஒரு படைப்பை 'நல்லா இருக்கு' என்பதை.

அத்தொகுப்பிலுள்ள முதலாவது கதை 'கொலுசங்கன்னா' பற்றி உரையாடிவிட்டு என்னிடம் சொல்கிறார் 'இந்தக் கதையை நீங்கள் தமிழில் எழுதியிருந்தால் இதற்கு இவ்வளவு கனதி வந்திருக்குமா?' என்று கேட்டார். நான் மீண்டும் திகைத்துப் போனேன். ஒரு சிங்களவர் சோனக மொழியை அடையாளம் காணும் போது. பின்னர் அவரைப் பற்றி விசாரித்த போதுதான் அவர் தமிழ் இலக்கியத்தில் பட்டதாரி என்று தெரியவந்தது. இங்கு நீங்களோ நானோ இதனைப் புரிந்து கொள்ளவில்லை. இது இரண்டும் அல்லாத மூன்றாம் ஒருவர் வெளியிலிருந்து வந்து சோனக மொழியை இனங்காண்பதுதான் முக்கியமானது. இதைப் போல இன்னொரு சம்பவம். ஒரு நூலகர், ஜெயகாந்தனின் தீவிர ரசிகர், இவரும் இந்தத் தொகுப்பை வாசித்திருக்கிறார். இவர் கேட்கிறார் 'இந்த நடை எப்படி உங்களுக்கு வருகிறது?' என்று. நான் சொன்னேன், நீங்கள் வாசிக்கும் ஜெயகாந்தனை நான் பதினெட்டு வயதிலேயே வாசித்து முடித்திருக்கிறேன். நான் எழுதத்தொடங்கும் போதும் ஜெயகாந்தன் மாதிரியே எழுதியிருக்கிறேன். எனது பதினெட்டு பத்தொன்பது வயதுகளில் திகோணமலையில் நண்பர்களுடன் தங்கி படிக்கும் காலத்தில் 'சிரித்திரன்' பத்திரிகையில் நகைச்சுவை எழுத்தாளராகப் பணிபுரிந்த ஒருவரும் அருகில் தங்கியிருந்தார். நான் எழுதிய ஒரு கதையை அவரிடம் சென்று காட்டியிருக்கிறேன். அவர் சொன்னார் 'இது உங்கட கத மாதிரியில்லை, சரியா ஜெயகாந்தன் எழுதின மாதிரியே இருக்கு' என்றார். இதை ஏன் சொல்கிறேன் என்றால் ஜெயகாந்தனால் பாதிக்கப்பட்டு அவரைப் போலவே எழுதியிருக்கிறேன். ஆனால் இந்தத் தொகுப்பில் நீங்கள் அதைப் பார்க்க மாட்டீர்கள். அதற்கு ஒரே ஒரு காரணம்தான் இருக்கிறது. அது என்னுடைய மொழியில் இக்கதைகளை எழுதியிருக்கிறேன். தமிழில் எழுதவில்லை. தமிழில்

எழுதியிருந்தால் அது ஜெயகாந்தன் போலவோ பிற தமிழ் எழுத்தாளர்கள் போலவோ அமைந்திருக்கும். எனது மொழிதான் இந்த நடையை எனக்குத் தந்திருக்கிறது. நான் திட்டமிட்டு ஒரு நடையை உருவாக்கவில்லை. ஒவ்வொரு கதையும் அந்த மொழிக்குள்ளால் பயணிக்கிறது.

இந்தக் கதைகளை எழுதுவதற்கான காரணமும் அதுதான். நமக்குள் ஒரு மொழி வாழ்கிறது. அதை நாம் புரிந்து கொள்ளாமல் நாம் பயின்ற தமிழ் மொழியில் எழுதிக் கொண்டிருக்கிறோம். அந்த தமிழ் மொழியில் வைத்தே எங்களுடைய எல்லாவற்றையும் வெளிக்கொணர்கிறோம். இது எனக்கு எப்படி இன்னும் உறுதியாகிறது என்றால் குர்ஆனில் அந்த வசனத்தை இரண்டு அல்லது மூன்று இடங்களில் அல்லாஹ் சொல்லியிருக்கிறான் என்று நினைக்கிறேன். 'உங்களுடைய மொழியும் உங்களுடைய நிறமும் வித்தியாசமாகப் படைக்கப்பட்டிருக்கிறது' என்ற கருத்தில் அது வருகிறது. நான் இதை விளங்கியிருப்பதை வைத்து சொல்வதானால் ஒரு மனிதனை முதலில் அடையாளம் காண்பதற்கு அவனது தோலின் நிறம் முக்கியமானது. அது வெள்ளையா? கருப்பா? நீக்ரோவா? ஜப்பானா? என்பது. இரண்டாவது, மொழியாகும். அவருடைய பேச்சிலிருந்து திட்டவட்டமாக அவரை யாரென்று சொல்லிவிடமுடியும். இந்த இரண்டையுமே நீங்கள் ஒரு மனிதனிடமிருந்து பிரித்தெடுக்க முடியாது. இந்த தோலை உரித்துவிட்டு வேறொரு தோலை வைக்க முடியாது. அதேபோல இந்த மொழியை அழித்துவிட்டு இன்னொரு மொழியை திணிக்கவும் முடியாது.

**ஏபிஎம். இத்ரீஸ்:** இந்த சோனக மொழியைக் கேட்டால் கருணாநிதி தற்கொலை செய்தாலும் ஆச்சரியப் படுவதற்கில்லை.

**அ.வா. முஹ்சின்:** செய்யமாட்டார். அவர் இந்த மொழியை

தமிழ் என்று நினைத்தால்தான் தற்கொலை செய்வார். சோனக மொழி பற்றிய என்னுடைய கருத்து எங்கிருந்து தொடங்குகிறது என்றால் பூர்வீகத்திலிருந்துதான். இந்த மொழியை நாம் உயிர்ப்பிக்க வேண்டும். சமூகத்தின் பண்பாடு, அரசியல், கலை என்று எதைப்பற்றி பேசுவதாக இருந்தாலும் முதலில் நாம் ஒரு தனியான சமூகம் என்பதை உணர வேண்டும். அது நம்மிடமில்லை. அதற்குப் பிறகுதான் நமது மொழியை உயர்ப்பிப்பது சாத்தியம்.

நீங்கள் கேட்பது போல் போருக்குப்பின்னான நமது நிலை என்ன? என்று. உண்மையில் போருக்குப் பின்னாலும் போருக்கு முன்னாலும் நமது நிலை ஒரே புள்ளியில்தான் நிற்கிறது. எது நம்மை இயக்கியது என்றால் தமிழ் தேசியவாதம் தான். தமிழர்கள் கேட்டபோது நாமும் கேட்டோம். அவர்கள் கேட்கவில்லை என்றால் நமக்கும் தேவையில்லை. எங்களுடைய அரசியலை தீர்மானித்தது அவர்களுடைய அரசியலே தவிர எங்களுக்குள்ளால் இருந்து உருவான ஒன்று அல்ல அது. நான் சொல்லவருவது எங்களுக்கு நிகழ்ந்திருக்கும் அழிவுகளையும் இழப்புகளையும் குறைத்து மதிப்பிடமுடியாது. அதுதான் எங்களுடைய தனித்துவமான அரசியலுக்கும் மூலகாரணமாக இருந்தது. ஆனால் அதை யாரும் புரிந்து கொள்ளவில்லை. அதை எதனோடு இணைத்துப் பார்த்தார்கள் என்றால் தமிழ் அரசியலோடு மட்டும்தான் இணைத்துப் பார்த்தார்கள். எங்களுக்குரிய அரசியலில் இருந்து அதனைத் தொடங்கவில்லை.

எண்பத்தி ஐந்தாம் ஆண்டு ஏப்ரல் இனக்கலவரம் தொடங்கும் போது முதலில் காத்தான்குடியிலிருந்துதான் தொடங்கியது. பிறகு ஓட்டமாவடி, வாழைச்சேனை வரைக்கும் வருகிறது. அன்று ஏற்பட்ட இழப்பு, அது கொடுத்த திகைப்பு அது யாருக்கும் என்னவென்று விளங்கவில்லை. அது விளங்கியிருந்தால் எங்களுக்கான தனியான அரசியல் சமூக உணர்வோடு வந்திருக்கும். இது எப்படி வருகிறது என்றால்

தமிழர்களுக்கு எதிரான உணர்வாக மட்டுமே கொண்டு அந்த முழு அரசியல் இயக்கமுமே அதற்கு எதிரான அரசியலாகக் கட்டமைக்கப்படுகின்றது. எங்களுடைய இழப்பு, எங்களுடைய உணர்வு, எங்களுடைய எழுச்சி எல்லாமே எங்களுக்கான ஒன்றை உருவாக்குவதற்குப் பதிலாக இன்னொன்றுக்கு எதிராகக் கட்டமைக்கப்படுகிறது. இதனால் இன்று போருக்குப் பின்னரான நிலையில் அவர்கள் ஒன்றும் சொல்லப் போவதில்லை என்றால் நாமும் சும்மாதான் இருக்கப் போகிறோம். அவர்கள் அபிவிருத்தி அரசியலை தொடங்குகிறார்கள் என்றால் நாமும் அதனைத் தொடங்குவோம். அவர்கள் திருப்பிக் கேட்கிறார்கள் என்றால் நாமும் திருப்பிக் கேட்போம். அந்தளவுக்கு எந்த உள்ளடக்கமும் இல்லாதவர்களாக நாம் மாறிவிட்டோம். இன்றுவரை இருந்த உணர்வு அரசியல்கூட இன்று காணமுடியாது. மழுங்கடிக்கப்பட்டுவிட்டது.

இனிமேல் நாம் அரசியல் செய்ய வேண்டுமாக இருந்தால் அடிப்படையிலிருந்து தொடங்கவேண்டிய நிலையே காணப்படுகிறது. அதற்கான அடிப்படையை நாம் உருவாக்க வேண்டும். சமூகத்திற்குத்தான் அரசியல். அந்த சமூகத்திற்குரிய அத்தனை அம்சங்களையும் அந்த அரசியலுக்குள் கொண்டு வரவேண்டும்.

நாம் எங்கிருந்து தொடங்குவது என்றால் நமது வேரிலிருந்து தொடங்க வேண்டும். நாம் ஒரு தனித்துவமான சமூகமாக இருக்கும் போது அதில் எல்லாமே அடங்கியிருக்கிறது. அதிலிருந்துதான் நான் பூர்வீகத்தையும் மொழியையும் எடுத்திருக்கிறேன். மொழி நம்முடைய மொழிதான். அது உலகின் முதலாவது மொழி. அல்லாஹ் ஆதமைப் படைத்து எல்லாவற்றையும் கற்றுக் கொடுத்து அவரோடு உரையாடியது உண்மை என்றால் அந்த மொழி எங்கு போனது? உலகில் எந்த மொழி அழிந்திருக்கிறது? யார் அதனை சொல்ல முடியும் உலகில் எந்த மொழியாவது அழிந்திருக்கிறது என்று? எந்த

மொழியும் அழிவதில்லை. அந்த கடைசி மனிதன் இருக்கும் வரைக்கும் எந்த மொழியும் அழிவதில்லை. அவுஸ்திரேலியாவில் வாழ்ந்த கடைசி அபர்பீன் சில நாட்களுக்கு முன்பு இறந்ததாக செய்தி வந்தது. நான் நினைக்கவில்லை அவரோடு அந்த மொழியும் இறந்ததென்று. அந்த மொழி இன்னொருவருக்கு கடத்தப்பட்டிருக்கும். ஆதம் உரையாடிய மொழியும் அவ்வாறுதான்.

இறைவன் குறிப்பிடும் நிறத்தையும் மொழியையும் நாம் ஆய்வுக்குட்படுத்த வேண்டும். முதல் மனிதனுடைய நிறக்கூறு எப்படி மரபணுக்கூடாக கடத்தப்பட்டிருக்கிறது? முதல் மனிதனின் மொழி எப்படி எல்லா மொழிகளிலும் ஊடுருவி இருக்கிறது என்பதை ஆராய வேண்டும். சோனக மொழிதான் ஆரம்ப மொழியாக இருந்திருக்கிறது என்று நான் நம்புவதற்கான காரணம் இந்த அடிப்படையை வைத்துத்தான். நாம் கதைக்கும் மொழியின் கூறுகள் உலகின் எல்லா மொழியிலும் இருக்கின்றன. நாம் பிரயோகிக்கும் சவர் என்பது அங்கும் சவர் என்றே பயன்பாட்டிலிருக்கிறது. நாம் மூடை என்று சொல்கிறோம் பிரஞ்சிலும் மூடை என்றுதான் சொல்கிறார்கள். இது எப்படி வருகிறது என்றால் இதன் அடிப்படை விடயமே மூலமொழி என்பதுதான். நான் இந்த விடயங்களில் உறுதியாக இருக்கிறேன். ஆனால் இங்கிருக்கும் அரசியல் நிலைமையை வேறுமாதிரியாக்குகிறது. அபத்தத்தை உண்மையாக காண்பிக்கிறார்கள்.

நான் இந்த விடயங்களுக்குள் வந்த பிறகு எனது முழுக்கவனமும் இதற்குள்தான் இருக்கிறது. நமது காலத்துக்குள் எல்லாமே மாறிவிடும் என்று நான் நம்பவில்லை. அப்படி நம்பிய காலமும் இருந்தது. அதனால் பல இழப்புகளும் எனக்கு ஏற்பட்டது. நாமே எல்லாவற்றையும் செய்து முடித்துவிடவேண்டுமென்றில்லை. நாம் செய்ய வேண்டியது என்னுடைய மொழி, என்னுடைய பூர்வீகம் இந்த இரண்டுக்கும்தான். இதில் நாம் இயங்கும் பொழுது அது

கிளைத்துக் கிளைத்து பல விடயங்களை உருவாக்கும். அவையும் செய்யப்பட வேண்டியவைதான். நீங்கள் குறிப்பிடுவது போல் பத்தல்ல இருபது புத்தகமும் எழுதமுடியும். அவற்றுக்குள்ளால் செல்ல வேண்டும். அப்போதுதான் புதிய புதிய கண்டுபிடிப்புகள் உருவாகிக் கொண்டிருக்கும். ஒவ்வொன்றைப் பற்றியும் ஆய்வு செய்ய வேண்டும்.

நம்மளவில் உருவாகியிருக்கும் தனிப்பட்ட விரோதம் எப்படி அதிலிருந்து விடுவித்துக் கொள்வது என்பது முக்கியமானது. நமக்குள் உணர்வில்லாமல் இல்லை. அடிப்படையில் இலக்கியம் என்பது உணர்ச்சிதான். உணர்ச்சிதான் கவிதை எழுத வைக்கிறது. சிறுகதை எழுதவைக்கிறது. அறிவை வைத்து கட்டுரைதான் எழுதலாம். ஆனால் இலக்கியத்தின் அப்படை உணர்ச்சிதான். இங்கு அந்த உணர்ச்சியை எந்தளவிற்கு நமது இலக்கு நோக்கித் திருப்பப் போகிறோம் என்பது முக்கியமானது. முன்னர் கோபப்பட்டு உறக்கமில்லாமல் இருந்த உணர்ச்சியை இப்போது ஒரு ஆய்வுக்காக, ஒரு பரிசீலிப்பிற்காக, புதிதாக ஒன்றை உருவாக்குவதற்காக எப்படி பயன்படுத்தப்போகிறோம் என்பதுதான் அது.

2002 அல்லது 2003 காலப் பகுதிகளில் முஸ்லிம் அரசியல் தலைமை எடுத்த நிலைப்பாடு என்பது இன்றுவரைக்கும் அவர்களை இழிவிற்கும் சீரழிவிற்கும் இட்டுச் செல்கிறது. அது தற்செயலாக வந்த ஒன்றல்ல. அவர்கள் அன்று செய்ய வேண்டியிருந்த பாத்திரம் செய்யப்படவில்லை. அந்தக் கணத்தில் எனக்கு ஏற்பட்ட கோபம் என்பது இன்று படைப்பூக்கத்துடன் வெளிப்பட வேண்டும். இன்று முஸ்லிம் தலைமையை அல்லது அரசியல் வாதியை காணக்கிடைத்தால் நமது படைப்புகளை அவர்களூடாக எப்படி சந்தைப்படுத்த முடியும் என்பதைத்தான் ஆலோசிக்கிறேன்.

நமக்குள் கலாச்சார ரீதியான எழுச்சி ஒன்று வரவேண்டும். நீங்கள் சொல்வது போல் வைதீக மத இயக்கங்கள் தமக்குள் பல அதிகாரங்களை வைத்துக் கொண்டு எங்களை தமது கட்டுப்பாட்டுக்குள் வைத்திருக்கிறது. ஒவ்வொரு இயக்கமும் தனக்கென்று ஒரு கருத்தை உருவாக்கிக் கொண்டு தன்னை ஒரு இயக்கமாக மாற்றிக் கொண்டு என்ன செய்கிறது என்றால் சராசரி முஸ்லிம்கள் மீது தன்னுடைய திணிப்பை பயங்கரமாக்குகிறது. அதிலிருந்து விடுபட முடியாத சூழ்நிலையில் நாம் எல்லோரும் மாட்டிக்கொண்டிருக்கிறோம். எதைச் சொன்னாலும் சரிபிழை காண்கின்ற, எதையும் குற்றமாக்குகின்ற பொறிமுறையை உருவாக்கி வைத்திருக்கிறார்கள்.

கல்வி முறையிலும், நான் முன்னர் குறிப்பிட்ட தமிழ்வழிக் கல்விமுறை எவ்வாறு எமது சிந்தனையையும் தனித்துவத்தையும் பாதிக்கிற, ஐரோப்பியனால் கொண்டு வரப்பட்ட கல்விமுறை என்பது போல இன்னொரு கல்விமுறை மத்ரஸாவாகவும் நிறுவனக் கல்வியாகவும் இருந்து எமது சிந்திப்பை தடைசெய்கிறது. இவற்றில் இலங்கையைப் பற்றி, இலங்கையிலுள்ள முஸ்லிம்கள் பற்றி ஒரு போதிப்பும் இல்லை. இவர்கள் யாரைச் சொல்கிறார்கள்? தபரியைச் சொல்கிறார்கள். வேறு நாகரீகங்களைப் பற்றிச் சொல்கிறார்கள். இதற்குள்ளால் வருபவர் அரேபிய சிந்தனைக்குச் சார்பானவராகவும் மற்றவர் ஐரோப்பிய சிந்தனையைச் சொல்பவராகவும் இருப்பார். ஆனால் நம்முடைய சிந்தனை என்பது நமது பூர்வீகத்திலிருந்தே கட்டியெழுப்பப்பட வேண்டியது.

எங்களுடைய நாட்டார் இலக்கியம் நாட்டார் கலை என்பதை ஏன் நாம் இன்னும் உள்வாங்கிக் கொள்ளவில்லை. ஆனால் அங்கு செல்கிறோம். அங்குள்ளவை மட்டுமே எமது அறிவாகக் கொள்கிறோம். நம்முடைய உம்மாவும் உம்மாட உம்மாவும் படித்த நாட்டார் பாடலை நமது சோனக இலக்கியத்தை

தடைசெய்து வைத்திருக்கிறோம். அது என்ன சொல்ல வருகிறது என்பதை ஆய்வு செய்ய நாம் தயாராக இல்லை. அது கூட எதில் இருக்கிறது? அவர்கள் தமிழ் மொழியில் எழுதி வைத்ததைத்தான் நாம் படித்துக் கொண்டிருக்கிறோம். உண்மையில் அது நமது மொழியில் அமைந்த பாடல்கள். ஓடுகா... வாகா... என்று அமைந்த பாடல்கள். தொகுக்கும் போது தூய தமிழில் மாற்றப்பட்டன.

**ஏபிஎம். இத்ரீஸ்:** சு. வித்தியானந்தனும் பலவற்றை மாற்றியமைத்திருக்கிறார்.

**அ.வா. முஹ்சின்:** அவர்கள் மாற்றினார்கள் என்றாலும் நம்மவர்களும் அதைத்தான் பின்பற்றுகிறார்கள். நுஃமானாக இருக்கட்டும் யாராக இருக்கட்டும், தரப்படுத்தல் என்ற நவீன கல்விக்குள்ளாலேயே அதைப் பார்க்கிறார்கள். கொச்சை மொழியை மாற்றி நல்ல தமிழில் எழுதிய மதிப்பே அவர்களிடம் இருக்கிறது. அதுதான் நம்முடைய மொழி என்றால் அதையும் நம்மிடமிருந்து பறித்தெடுக்கும் நிலையே இருக்கிறது. நீங்கள் இன்று பார்க்க முடியும், நான் எனது புதிய தொகுப்பை ஒரு ஆசிரியரிடம் கொடுத்திருந்தேன். அவர் அதை எழுத்துப்பிழைகள் நிறைந்த தொகுப்பாகவே நோக்கினார். நாம் எமது பேச்சு மொழிக்கும் எழுத்து மொழிக்கும் இடையில் செய்து கொள்ளும் சமரசத்தை கேள்விக்குட்படுத்த வேண்டும். 'நாளக்கி கூட்டம் இரிக்கி' என்பதை 'நாளை கூட்டம் இருக்கிறது' என்று மாற்றுவது அதிகாரமாகும். 'எடம்' என்று பிரயோகிக்கும் எனது மொழியை அவர்களது மொழியில் எழுதுவதால் ஏற்படும் சிக்கல்தான் இது.

இந்தத் தொகுப்பை எப்போது வாசிக்க முடியவில்லை என்று யாராவது கருதுகிறார்களோ அப்போதே இது சோனக மொழி என்பதை நிறுவிக்கொள்கிறது. ஏன்? நமக்கென்று ஒரு மொழியமைப்பு இருக்கிறது. நீங்கள் பிரதியைக் கையில் எடுத்தால் எழுத்துக்கூட்டி வாசிக்க வேண்டிய தேவை

இருக்காது. அந்த மொழியமைப்பு நமக்குத் தெரியும். சரளமாக வாசித்துச் செல்லலாம். எமக்குள்ள பிரச்சினை எமது மொழியின் எழுத்துவடிவம் எம்மிடமில்லை. நாம் தமிழைக்கொண்டு எமது மொழியை எழுதுகிறோம். இதனை நான் தமிழில் எழுதியதால்தான் நீங்கள் வாசிப்பதில் சிரமமாகக் கருதுகிறீர்கள். நீங்கள் கதைப்பதை மனதில் நினைத்துக் கொண்டு இந்தப் பிரதியை வாசிக்கத் தொடங்கினால் எந்த சிரமமும் இருக்காது. நீங்கள் கதைப்பதை அங்கு பாருங்கள் அங்கு இருக்கிறது. அங்க இரிக்கி.

இங்கு எழும் கேள்வி நம்முடைய வரிவடிவம் என்று எதை எடுப்பது? இதைத்தான் எடுப்பதா? அல்லது வேறு எதையும் உருவாக்குவதா? இது நம்முடைய மொழி என்பதில் விட்டுக்கொடுப்புகள் இருக்காது. ஆனால் வரிவடிவமாக எதை வைத்துக்கொள்ளலாம் என்பதை நாம்தான் தீர்மானிக்க வேண்டும். என்னுடைய படைப்பு தமிழை மாத்திரம் அறிந்தவர்களுக்கு சவாலாகவே அமையும். இதுதான் எனது வெற்றியும் கூட.

வாசிப்பதற்குச் சிரமமாக இருந்தது என்று சொல்லும் போது நான் இதை எழுதுவதற்காக மிகவும் சிரமப்பட்டேன். எனது இளமைக்காலத்தில் பிரயோகித்த மொழியை மீண்டும் உயிர்ப்பிக்க வேண்டியிருந்தது. அங்கிருந்துதான் ஒவ்வொரு சொல்லாக எடுத்திருக்கிறேன். எப்படி தோப்பிலுடைய நாவல்களை வாசித்துச்செல்ல ஒரு பயிற்சி தேவைப்படுகிறதோ அது இதற்கும் தேவைப்படுகிறது. ஒரு கடையிலுள்ள ஒருவருக்கு இந்த தொகுப்பைக் கொடுத்த பிறகு அவர் தலைப்பை வாசித்துவிட்டுக் கேட்கிறார் 'இது என்ன மலையாள புத்தகமா?' என்று. அப்படியானால் அவருடைய அன்றாட உரையாடல் மலையாளத்தில்தான் என்று கூறவேண்டும். எங்களுடைய மொழியில் இருந்தே நாம் அந்நியப்பட்டிருக்கிறோம். அதை அடையாளம் காண்பதென்பதே முதல்நிலைப் பணியாகும்.

**ஏபிஎம். இத்ரீஸ்:** இதுபோன்ற வேறொரு உரையாடலில் ஒருவர் 'இழிசனர் வழக்கு' 'கொச்சை மொழி' 'பேச்சுவழக்கு' என்ற சொற்களை இதற்குப் பாவித்தார். இன்னும் அவர்கள் நாற்பது ஐம்பது வருடங்களுக்கு முந்திய சைவ, வேளாள மொழிக் கருத்தியலிலேயே இருக்கிறார்கள். சைவ, வேளாள, உயர்சாதி மொழிதான் உயர்வானது என்ற எண்ணம். கொச்சை மொழி என்பது இழிந்த சாதியினர் பயன்படுத்தும் மொழியாக கட்டமைத்து வைத்திருக்கிறார்கள்.

**அ.வா. முஹ்சின்:** இதில் உண்மை என்னவென்றால் நம்முடைய மொழியையே நாம் தரக்குறைவாக எண்ணுகிறோம். பொது இடத்தில் கதைக்க முடியாத கொச்சை மொழி என்று எண்ணுவதால் பெரும் மனத்தடை உருவாகிறது. இதனால் தனது மொழியை தனக்குள் உள்வாங்காத சமூகமாக நாம் இருக்கிறோம் என்பதையே ஒரு ஆய்வுக்குட்படுத்த வேண்டியிருக்கிறது.

**ஏபிஎம். இத்ரீஸ்:** எனது கட்டுரை ஒன்றை தட்டச்சு செய்துதந்த ஒருவர் அதில் எல்லாம் நன்றாக இருக்கிறது சில இடங்களில் வரும் 'உம்மா' என்பதை மாற்றிவிட்டால் இன்னும் நன்றாக இருக்கும் என்றார். இதைத்தான் நாம் கேள்விக்குட்படுத்த வேண்டும்.

**அ.வா. முஹ்சின்:** இந்த மனநிலை எங்கிருந்து உருவாகிறதோ அதை மாற்றியமைக்க வேண்டும். அண்மையில் சில விளம்பரங்களில் இந்த மொழியை கேட்கக்கூடியதாக இருக்கிறது. இது வரவேற்கத்தக்கது.

**ஏபிஎம். இத்ரீஸ்:** இன்று முஸ்லிம்கள் எழுதும் நாவல்களில் அல்லது தமிழ் எழுத்தாளர்கள் படைத்த முஸ்லிம் கதாபாத்திரங்கள் கூட இந்த சோனக மொழியை பதிவு செய்திருக்கின்றன. இது மிகப்பெரும் ஆதாரமாகத் திகழ்கின்றது. நாம் என்ன செய்யவேண்டுமென்றால்

இப்புனைவுகளில் கையாண்டுள்ள சோனக மொழியை மதிப்பீடு செய்யும் போது அதன் பரிமாணங்களை அறிந்து கொள்ள முடியும். ஆனால் இவ்வகையான ஆய்வுகள் நமக்குள் நடைபெறவில்லை.

**அ.வா. முஹ்சின்:** சில புத்தகங்களின் பின் பகுதியில் சொல் விளக்கமாக இதனைக் காண முடியும். உரையாடலில் கையாண்டுள்ள சோனகச் சொல்லின் விளக்கம் சொல்லடைவாக தமிழில் அமைந்திருக்கும்.

**ஏபிஎம். இத்ரீஸ்:** உண்மை. அவ்வாறு அனேக புத்தகங்கள் வந்துள்ளன. 'அறுபதுகளில் வெளிவந்த மட்டக்களப்பு நாவல்களில் வழக்குச் சொற்கள்' என்று ஒருவர் ஆய்வொன்றைச் செய்திருக்கிறார். இதில் முஸ்லிம் எழுத்தாளர்களின் படைப்புகளையும் உள்ளடக்கியிருக்கிறார்.

**அ.வா. முஹ்சின்:** எப்போதும் நாம் கையாளும் மொழியும் கல்வியும் முக்கியமானது. இவை இரண்டும் நமது வேரிலிருந்தே வரவேண்டும். நம்மிடமுள்ள இஸ்லாமிய கல்வி என்பது வெளியில் எங்கோ தனது வேரைப் பதித்துக்கொண்டு இங்குள்ளவற்றை உள்வாங்காமல் நடைபெறுகின்றது. நளீமிய்யாவாகவோ வேறு எந்த நிறுவனமாக இருந்தாலும் அவை இங்கு வேரூண்ட வேண்டும். எங்களுடைய கலாச்சாரம், பண்பாடு, பாரம்பரியம், வரலாறைச் சொல்லாமல் வெளியில் உள்ளவற்றை மட்டும் உன்னதமாக நினைத்து போதிப்பதைக் கைவிடவேண்டும். இது இரண்டு பக்கத்திலும் நடைபெற வேண்டும். ஐரோப்பியக் கல்வி முறையும் நமக்கு இதன் எதிர்ப்பக்கத்தைத்தான் போதிக்கிறது. அதிலும் நாம் மாற்றத்தைக் கொண்டுவர வேண்டும்.

நம்முடைய சமூகத்திற்கு ஏதாவது செய்யவேண்டுமாக இருந்தால் ஒட்டுமொத்தமாக இதனை கருத்திற்கொண்டு ஒரு கலாச்சார இயக்கம் தேவைப்படுகிறது. எனக்கு நம்பிக்கை

இருக்கிறது அந்த கலாச்சார இயக்கத்திற்கு எல்லா தரப்பினரிடமிருந்தும் ஆதரவு கிடைக்கும். காரணம் அது எல்லோரினதும் பொதுவெளியிலேயே நடைபெறப்போகிறது. இங்கு தடைகளாக நான் இனங்காணுவது முன்னரே குறிப்பிட்ட, நாமே எல்லோரையும் எதிரியாக நினைத்துக் கொண்டு உரையாடலை அசாத்தியமாக்கும் மனநிலை. மற்றது, இஸ்லாமிய இயக்கங்கள் உருவாக்கி வைத்திருக்கும் அதிதீவிர மனநிலை. அவை ஒன்றுமே செய்யாத நிலையில் சமூகத்தை ஒரு அச்சத்திற்குள் கொண்டுவந்து செயலற்ற நிலையை உருவாக்கியதை தவிர வேறெதனையும் செய்யவில்லை.

நான் ஒரு புதிய மொழியைக் கட்டமைப்பதாகக் கருதுபவர்கள் நீங்கள் உரையாடலுக்குள் அவர்களைக் கொண்டு வரும் போது பதில் சொல்ல முடியாத நிலை உருவாகிறது என்று சொல்கிறீர்கள். இங்கு நீங்கள் கையாளும் விளிம்பு நிலை இஸ்லாம் என்பதும் புதிய மொழியாகவே எனக்குத் தோன்றுகிறது. அது பின் நவீனத்துவம் உருவாக்கும் மொழி.

**ஏபிஎம். இத்ரீஸ்:** வித்தியாசமானவர்கள் உரையாடலில் இருக்கும் பொழுது அவர்களுடைய மொழியையும் கையாள்கிறோம். அவர்களுக்குள்ளும் ஒரு புரிதலை உருவாக்க வேண்டும் என்பதற்காகவே இதனைச் செய்ய வேண்டியிருக்கிறது. அவர்களுடைய மொழியால் அதனைப் பேசவேண்டி இருக்கிறது. ஆனால் அவர்களும் பின்நவீனத்துவத்தை முழுமையாகப் புரிந்து கொண்டார்களா என்பது கேள்விக்குரியது.

**ஏபிஎம். இர்பான்:** எனது பாடசாலை மாணவர்களிடமும் இந்த மொழி பற்றிய பிரக்ஞையை உருவாக்குவதில் நான் மிகவும் கவனமெடுத்துக் கொள்கிறேன். ஒவ்வொரு நாளும் மொழிசார்ந்து கதையாகவும் வேறு ரீதியிலும் ஒரு விடயத்தை உரையாடுவேன். அவர்கள் இதிலுள்ள நியாயத்தை இனங்காண்கின்றனர். நம்முடைய உம்மா, சாச்சி, ராத்தா

என்பதை விட்டுக்கொடுப்பதற்கு அவர்கள் தயாரில்லை. ஆனால் அதற்காக தமிழை முழுமையாக நிராகரிக்கிறார்கள் என்றும் அர்த்தப்படுத்திவிட முடியாது. அதை விவாதிக்கவும் தயாராக இருக்கிறார்கள்.

**அ.வா. முஹ்சின்:** என்னுடைய முந்திய நூல்களை, உதாரணத்திற்கு 'இலங்கை முஸ்லிம்களின் பூர்வீகம்' நூலை வாசித்தவர்களுக்குத் தெரியும் தமிழ் மொழியின் வீச்சாக வெளிவந்திருக்கும் நூல்களில் இதற்கும் ஒரு இடம் இருக்கும் என்று. எனது படைப்புகளில் தமிழ் மொழியையோ அல்லது சோனக மொழியையோ கையாளும் போது அது வேண்டி நிற்கும் உழைப்பைச் செலுத்துகிறேன். சோனக மொழியைப் பற்றி தமிழில் புத்தகம் எழுதும் போது அங்கு இரட்டை உழைப்புத் தேவைப்படுகிறது. அது இயல்பானது.

இன்றே தமிழைக் கைவிட்டுவிட்டு சோனக மொழிக்கு வாருங்கள் என்று நான் ஒருபோதும் சொல்லவில்லை. என்னுடைய நோக்கம் நமது மொழியின் இருப்பை உணரவைப்பதுதான். அது அல்லாஹ் முதல் மனிதனோடு உரையாடிய மொழியின் இன்றைய வடிவம். அதன் எச்சத்தைத்தான் நாங்கள் பேசுகின்றோம். அந்த எச்சத்தையும் நான் எல்லா மொழிகளிலும் அடையாளம் காண்கிறேன். அது தூஷணமாக இருந்தாலும் அதிலும் நான் அதை அடையாளம் காண்கிறேன்.

**ஏபிஎம். இத்ரீஸ்:** நாமும் அதே சிந்தனையில்தான் இயங்கிக் கொண்டிருக்கிறோம். இதற்கான வெளியீடுகளை, கலாச்சார நிகழ்வுகளை ஒருங்கிணைப்பதன் ஊடாக ஒரு உரையாடலைத் தொடங்கியிருக்கிறோம். நீங்கள் எழுதத் திட்டமிட்டிருப்பதை எழுதுங்கள். நிறுத்திவிட வேண்டாம். உங்களுக்கான குழு வாசிப்பு, உரையாடல் ஒன்று இல்லை என்றும் நினைக்க வேண்டாம். அது வேறு வேறு தளங்களில் இயங்கிக் கொண்டிருக்கும். நீங்கள் சொல்வது போல் இஸ்லாமிய

அணிகளுக்குள் வேர்களற்ற நிலை இருக்கிறது. நமது கலாசார, பண்பாட்டு விழுமியங்களை இன்னும் அவர்கள் உள்வாங்கவில்லை. பின் நவீனத்துவ வாதிகளின் மொழிகளில் சொல்வதாக இருந்தால் விளிம்புநிலைக்குத் தள்ளப்பட்ட மக்களின் வேர்களைத் தோண்டிக்கொண்டு போனால் அது நமக்கான இயங்குதளத்தை உருவாக்கும். அதற்கான ஒரு செயற்படும் தன்மை, இயங்கியல் உருவாகும். இன்ஷா அல்லாஹ்! அது உருவாகியும் வருகிறது. அதைச் சரியாக ஒருங்கிணைத்துக் கொள்ள வேண்டும். 950 வருடங்கள் நூஹ் வேலை செய்திருக்கிறார். முஹம்மதிற்கு அது வரும் பொழுது 23 வருடங்களாகச் சுருங்குகிறது.

எனவே இன்றைய உலகமயமாக்கலில் ஒருவர் செய்யும் எட்டு மணித்தியால வேலையை மூன்று மணித்தியாலங்களுக்குள் சுருக்க முடியும் என்கிறார்கள். இன்று பயன்பாட்டிலுள்ள லப்டப், டொங்கிள் என்பவற்றின் மூலம் இது எளிதாகிவிடுகிறது. எனவே சமூகமாற்றத்தை அடையவைப்பது கஷ்டமான விடயம் அல்ல. மிகக்குறைந்த நேரத்திற்குள்ளால் உலகம் முழுவதும் இந்தக் கருத்தை கொண்டு செல்ல முடியும். நாம் எங்களது தளத்தைத் தொடங்கி ஒரு வருடமாகப் போகிறது. ஐநூறு பேருக்காவது நான் இந்த பூர்வீகம், குழந்தை வளர்ப்பு, நமக்கான கல்வி, அரங்கு பற்றிய உரையாடலை செய்திருப்பேன். ஆனால் எனது தளத்தில் அவை வந்ததற்குப் பிறகு இருபதாயிரம் தடவைகளுக்கு மேல் திரும்பத் திரும்ப படிக்கப்பட்டிருக்கின்றன. அது எதைக்காட்டுகிறது என்றால் நாம் ஒரு இடத்தில் இருந்து கொண்டு உலகம் முழுக்க நமக்கான வாசகர்களையும் சிந்தனையைப் பகிரக் கூடியவர்களையும் நாம் உருவாக்கிக் கொள்ளலாம். இத்தகைய, மின்திரையில் அமர்ந்து உரையாடும் வசதி இன்றைக்கிருக்கும் தொழில்நுட்பத்தால் ஏற்பட்டிருக்கிறது.

**ஏபிஎம். இர்பான்:** இந்த உரையாடல் மூலம் முஹ்சின் சேர்

ஒரு மனத்தடையை உடைத்து அரசியல் வாதியையும் நேசிக்கலாம் என்று சொல்கிறார். இதே முடிவுதான் எங்களுடையதும். எங்களுக்கான சந்தையை விரிவுபடுத்த வேண்டுமாக இருந்தால் அதிகாரிகளையும் எமது சிந்தனை சென்றடைய வேண்டும்.

**ஏபிஎம். இம்தாத்:** சமரசம் செய்வதை மனிதன் தனது வாழ்நாளில் ஒவ்வொரு கட்டத்திலும் செய்து கொண்டிருப்பான். குழந்தையாக இருக்கும் போதும் வயது சென்ற பிறகும் மனிதன் பிறரோடு சமரசம் செய்து கொண்டே வாழ்கிறான். பாதிக்கப்பட்ட ஒரு மனநிலையிலிருந்து முஹ்சின் சேர் உரையாடலைத் தொடங்கினார். ஆனால் அவர் நம்மைக் கொண்டுவந்து விட்டிருக்கும் இடம் புதிய விசையை உருவாக்குகிறது. புத்தக விநியோகத்திலிருக்கும் தடையை ஒரு கூட்டு முயற்சியால் வெற்றிபெற முடியும் என்ற நம்பிக்கை எனக்கிருக்கிறது. ஒவ்வொரு பகுதியிலும் வெளியிடப்படும் புத்தகம் பிறபகுதிகளுக்கு பரிமாறப்பட்டு சந்தைப்படுத்தப் படுமாக இருந்தால் இதில் ஏற்படும் தொய்வை சரிசெய்யலாம் என்று தோன்றுகிறது. இதற்கான ஒரு பொறிமுறையை உருவாக்க வேண்டும்.

**அ.வா. முஹ்சின்:** புத்தகங்களைக் கொள்வனவு செய்யும் அரச திணைக்களங்கள், நிறுவனங்களை நாம் அணுக வேண்டும். தனிநபர் மூலம் புத்தகத்தை சந்தைப்படுத்துதல் என்பது மிகச்சிக்கலான ஒரு விடயம். தனிப்பட்ட முறையில் நான் புத்தகத்தை யாருக்காவது கொடுத்தால் அதற்குரிய பணத்தை கேட்டுவாங்க மாட்டேன். எழுத்தாளன் பொதுவாக இந்த மனநிலையிலேயே இருக்கிறான். அவனால் சந்தைப் படுத்துவது அசாத்தியமானது. தமிழில் நாம் எதிர்நோக்கும் இந்த உயிர்வாழும் பிரச்சினை சிங்களத்தில் எழுதுபவர்களுக்கு இருப்பதில்லை. அவர்களுடைய நூல்களின் பெரும்பகுதியை அரச நிறுவனங்களே கொள்வனவு செய்கின்றன. கல்வி அமைச்சுக்கூடாகவும் கலாச்சார அமைச்சுக்கூடாகவும்

அரசாங்கம் வாங்குகிறது. இதனால் அங்கு எழுத்தாளனின் சுமை குறைக்கப்படுகிறது. அப்பகுதிகளிலுள்ள பேரூந்துகளில் ஏறினால் விதம்விதமான புத்தகங்களுடன் வியாபாரிகளைக் காணலாம். பழங்கள், குடிபானங்கள் விற்பனையாவதை விட புத்தகம் அங்கு விற்பனையாகிறது. இந்த மாற்றம் இன்று நேற்று தொடங்கியதல்ல. நெடுங்காலமாகவே நான் இதனை அவதானிக்கிறேன்.

எம்.டி குணசேன போன்ற புத்தகக்கடைகளுக்கோ அல்லது கண்காட்சிகளுக்கோ சென்றால் புதிது புதிதான எத்தனை புத்தகங்கள் சிங்களத்தில் வெளிவருகின்றன. மக்களின் வாசிப்புத் தேவை என்பது ஒரு புறம் அரசு வழங்கும் ஆதரவுதான் இதற்கு முக்கியமானதாக நான் கருதுகிறேன். நாமும் இதே விதத்தில் சந்தையை விரிவுபடுத்த வேண்டும். எமது பிரதேச, மாகாண அரசுகள் இதற்கென்று உள்ள நிதியை வேறு தேவைகளுக்காகவே பயன்படுத்துகின்றன. இந்த விடயத்தில் நாம் ஒரு நிறுவன முகாமை ஒழுங்குடன் இயங்க வேண்டும். விநியோகத்திற்குத் தேவையான அடிப்படை கட்டமைப்பை உருவாக்கி விளம்பரத்திற்கும் முக்கியத்துவம் கொடுத்தால் சந்தையை விரிவுபடுத்தலாம்.

புத்தக வெளியீட்டு விழாக்கள் என்னில் அதிருப்தியையே ஏற்படுத்தி இருக்கின்றன. இறுதியாக நடந்த எனது புத்தக வெளியீட்டு விழாவில் அதிதிகள் கூடுதலான நேரத்தை எடுத்துக் கொண்டதால் வருகை தந்திருந்தோர் இடையில் எழும்பிச் சென்றுவிட்டனர். இதனால் எதிர்பார்த்திருந்தளவு அது வெற்றியளிக்கவில்லை. நர்ம் அவர்களுக்கு மேடையமைத்துக் கொடுத்ததாக அது அமைந்துவிட்டது. மிகச்சிரமத்திற்கு மத்தியில் ஒழுங்கு செய்யும் கூட்டம் ஒருசிலரின் பொடுபோக்கால் சிதைந்துவிடுகிறது பாருங்கள். இதுவும் நிகழ்ச்சி முகாமைத்துவத்தில் நாம் இன்னும் பின்நிற்கிறோம் என்பதைக் காட்டுகிறது. புத்தக வெளியீடுகளை விழாக்களாகச் செய்யாமல் விருந்துடன் கூடிய

நிகழ்ச்சியாகச் செய்தால் இன்னும் வெற்றியளிக்கும் என்று தோன்றுகிறது.

**ஏபிஎம். இர்பான்:** உண்மை. கந்தூரிகளுக்கு பழகிவிட்ட நமது சமூகத்திடம் செய்தியை அவ்வாறுதான் எடுத்துச்செல்ல வேண்டியிருக்கிறது.

**அ.வா. முஹ்சின்:** அதிதிகள் இதில் இல்லை என்பதால் வருகை தருவோரின் நேரத்தை நாமே முழுவதுமாக உபயோகிக்கலாம். அவர்களுக்கும் திருப்தியளிக்கும். விழாவாகச் செய்யும் கூட்டத்திற்கு வரவே மறுக்கிறார்கள். ஐநூறு பேரை அழைத்தால் ஐம்பது பேர் கலந்து கொள்வதும் அபூர்வமாகிவிட்டது. விமர்சகனும் புத்தகத்திற்கு வெளியேதான் நிற்கிறான். எல்லாமே தலைகீழாக மாறிவிட்ட பிறகு விமர்சனமும் அதற்குரிய இடத்தை எடுக்க வேண்டும். உழைப்பில்லாமல், படிப்பில்லாமல், சிந்தனையில்லாமல் நூலை விமர்சிக்க வரும்பொழுது பங்கேற்போரை அலுப்படையச் செய்கிறது. பேசத்தொடங்கியதிலிருந்து விலகி விலகிச் சென்று தொடங்கிய இடத்திற்கே மீண்டும் வந்து சேர்கிறார்கள். விமர்சனத்தை நாம் பார்க்கும் விதம்தான் இது. புத்தகத்தைவிட எழுத்தாளன் முக்கியமாகத் தெரிகிறது.

தொழில்வாய்ப்பிற்காகவும் புலம்பெயர்ந்தும் வெளிநாடுகளில் வாழும் இலங்கை சமூகத்தை இணைப்பதன் மூலமும் எமது விநியோகத்தை விரிவுபடுத்த முடியும். நிறுவனமாக செயற்படும்போதுதான் இதிலுள்ள தடைகளை களைய முடியும்.

**ஏபிஎம். இர்பான்:** உள்ளத்தால் உரையாடுவது என்று சொல்வார்கள். உங்களது பேச்சும் அவ்வாறு இருந்தது. அனுபவங்களை உரையாடும் போது மனம் அதில் ஒன்றிவிடுகிறது. நாம் பத்துப் பதினைந்து புத்தகங்களை வெளியிட்டிருக்கிறோம். என்னிடமிருக்கும் அனுபவமும்

இதுபோன்றதுதான். விற்காமல் கறையான் அரித்து வீட்டில் முடங்கிக் கிடக்கும் புத்தகங்களைப் பார்க்கும் பொழுது கவலை ஏற்படும். திட்டமிட்டு இயங்கினால்தான் எம்மை முன்நிலையில் வைத்திருக்க முடியும். ஒரு கட்டத்திலும் நீங்கள் சோர்வடைய வேண்டியதில்லை. எழுதிக்கொண்டே இருங்கள். எப்படி உங்களது தொடர்பில் றிழா, நௌபர், ரிபாஸ் என்று ஒவ்வொருத்தராக வந்து இணைகிறார்களோ அது போன்றுதான் நமது வேலைத்திட்டமும். சமூகமாற்றம் என்பது ராணுவ அணிவகுப்பு போன்றிருக்காது. அது நதிபோன்று ஓடிக்கொண்டிருக்கும்.

இன்றுள்ள வாழ்வியல் சூழலில் பகைமறப்பு இன்றியமையாதது. எமது கடந்தகால அனுபவங்களும் நிகழ்வுகளும் இருண்டவை. இங்குள்ள மூவின மக்களின் உறவு மிகவும் பலவீனமான ஒரு கட்டத்திலேயே இருந்து வந்திருக்கின்றது. இந்த நிலை மாறவேண்டும். இதற்கான ஒரு வேலைத்திட்டத்தையும் முன்னெடுக்க வேண்டும்.

பயங்கரவாதம் எல்லோரையும்தான் பலவீனப் படுத்தியிருக்கிறது. திருகோணமலையைப் பொருத்தவரையில் முஸ்லிம்களுக்கு இது மிக அதிகமான இழப்புகளை கொடுத்துள்ளது. உண்மையில் ஆயுத ரீதியான பயங்கரவாதம் மட்டுமே இங்கிருந்து ஒழிக்கப்பட்டிருக்கிறது. அரச, அதிகாரிகளுக்குள்ளால் நடைபெறும் பயங்கரவாதம் என்பது இன்னும் இருக்கிறது.

**ஆரிபீன்:** உண்மை. இதற்குப் பல உதாரணங்களைச் சொல்லமுடியும். இங்கு வரவிருக்கும் கிழக்குப் பல்கலைக்கழத்திற்கு மக்களிடமிருந்து காணிகளை அரசு சுவீகரித்தது. அது முழுக்கவும் முஸ்லிம்களுடைய பாரம்பரியக் காணிகள். பல்கலைக்கழகத்திற்குரிய வடிவமைப்பில் நுழைவாயில் முஸ்லிம் பகுதியிலேயே வரவேண்டும். ஆனால் அதனை கோணேஷபுரிக்குக் கொண்டு செல்வதற்காக இரண்டு

கிலோமீட்டருக்கு சுற்றுப் பாதை அமைக்க வேண்டியேற்பட்டது. 50 ஏக்கர் காணி தேவைப்படும் போது முஸ்லிம்களிடமிருந்து 250 ஏக்கர் காணியை சுவீகரித்திருந்தார்கள். முஸ்லிம்களது எதிர்காலத் தேவைக்கான காணிகள் இல்லாமலாகிவிட்டன. இதுபோன்றுதான் இக்பால் நகரில் சுனாமியில் பாதிக்கப்பட்ட மக்களைக் குடியேற்றும் விடயத்திலும் அதிகாரிகள் நடந்து கொண்ட விதம். வளமான தொழில்துறைக்கு ஏற்ற பகுதிகள் முஸ்லிம்களுக்கு பகிரப்படாமல் மிகக்கவனமாகத் தடுக்கப்பட்டன.

பகைமறப்பு என்பதை எல்லா சமூகங்களுக்குள்ளும் எடுத்துச் செல்ல வேண்டும். இப்பகுதி முஸ்லிம்கள் இதிலும் முன்னோடியாக இருந்திருக்கிறார்கள் என்பதற்கு கோபாலபுரம் பிரதேசத்தின் வரலாற்றை உதாரணமாகச் சொல்ல முடியும். நீண்டகாலமாகவே இப்பிரதேசம் பத்தாம் கட்டை என்றே அறியப்பட்டு வந்திருக்கிறது. இங்கு அரச அதிபராகக் கடமையாற்றிய கோபாலப் பிள்ளை என்பவரை கௌரவிப்பதற்காக ஜம்முன் அப்பாவால் சிபாரிசு செய்யப்பட்டு இடப்பட்ட பெயரே கோபாலபுரம் என்பதாகும்.

**ஏபிஎம். இத்ரீஸ்:** பண்டைய காலத்தில் ஒருநாள் பயண தூரத்திற்கு ஏற்பவே குடியிருப்புகள் அமைக்கப்பட்டன. அந்த குடியிருப்புகள் தொண்மையான குடியிருப்புகளாக பின்னர் மாறின. கட்டை, தூரம் என்பது ஒரு நாள் கால்நடை தூரமாக ஒவ்வொரு குடியிருப்புகளும் இருந்தன. ஆதம் நடந்து சென்ற பாதைகள், பாதம் பதிந்த இடங்கள் பின்னர் ஊர்களாக மாறியிருக்கின்றன என்று ஹதீஸ்களில் வருகிறது.

**ஆரிபீன்:** வரலாற்றுடன் தொடர்புடைய பல முக்கிய இடங்களை திருகோணமலை கொண்டுள்ளது. புதிதாக ஒருவர் வந்து பார்க்க நிறைய இடங்கள் இருக்கின்றன. கண்ணியா வெண்ணீரூற்று, நாற்பதுமுழ அவ்லியா கபுரடி என்று பல. இவற்றில் வருபவர்கள் பலரும் மகிழ்ச்சியாக இருந்துவிட்டுப்

போவதற்குத்தான் வருகிறார்கள். அவற்றிலிருக்கும் வரலாற்றுப் பின்னணியை யாரும் தெரிந்துகொள்ள முற்படுவதில்லை.

**ஏபிஎம். இத்ரீஸ்:** எங்களுக்கு நீண்ட காலமாக ஒரு கனவு இருக்கிறது. பூர்வீகம் தொடர்பாக எழுதி, பேசி வருகிறோம். அது சார்ந்த இடங்களை நூல்கள் வாயிலாகவும் அப்பிரதேசங்களிலுள்ளவர்களுடனான உரையாடல்களில் இருந்துமே அதனைப் பதிவு செய்கிறோம். இன்னும் அந்த வரலாற்றுப் பிரதேசங்களுக்கு தனியாக சென்று பார்க்கவில்லை. உதாரணத்திற்கு நாற்பது முழ சியாரத்தைப் பற்றி நாங்கள் எழுதியிருந்தாலும் அவற்றை முன்னைய வரலாற்று நூல்களிலிருந்தே எடுத்திருக்கிறோம். யாழ்ப்பாணம் தவிர மற்ற எல்லாப்பகுதிகளுக்கும் நான் சென்றிருக்கிறேன். இருந்தும் அவை நமது வரலாற்று ஸ்தலங்களை தேடிச் சென்றவையாக இருக்கவில்லை.

இந்த இடங்களுக்கு முழுமையான ஒரு பயணம் மேற்கொண்டால் இப்போது நம்மிடமிருக்கும் வரலாறு, பூர்வீகம் பற்றிய கருத்தே மாறிவிடும். இதனை தரிசிப்பதை நல்லதொரு வாழ்வியல் அனுபவமாகவும் கொள்ள முடியும். இஸ்லாமிய இயக்கங்களும் நிறுவனங்களும் இவற்றை அழிக்கும் மனநிலையையே கொண்டிருக்கின்றன அல்லது நீங்கள் கூறியதுபோல் மகிழ்ச்சியாகப் பொழுதைக்கழிக்கும் சுற்றுலாத் தளங்களாகவே இவற்றைப் பார்க்கின்றன. எனவே நாம் எமது தஃவா அமைப்புகளின் போதாமைகளிலிருந்தே வரலாறு, அரசியல் கருத்தாக்கங்களைப் பேசத்தொடங்க வேண்டும். சீஷன் தஃவா என்பதிலேயே இன்னும் நிற்கிறார்கள். வெளியிலிருந்து காசு வந்தால் பள்ளி கட்டுவதும் மாடறுத்து குர்பான் கொடுப்பதிலுமே அவர்களது முழுக்கவனமும் இருக்கிறது.

பூர்வீக இடங்களை தரிசிப்பதைப் போன்றதுதான் அப்பகுதியில் வாழும் மக்களின் வாழ்வியல் பிரச்சினைகளையும் சேர்த்து

அறிந்து கொள்வது. இலங்கையில் உருவாகிவந்த புனித நகரங்கள் அப்பகுதிகளில் முஸ்லிம் கலப்பை விரும்பவில்லை. இதனால் பாரம்பரிய நிலங்களை கைவிட்டுவிட்டு முஸ்லிம்கள் வெளியேறிய அனுபவங்கள் நமக்கிருக்கின்ற. இப்பிரச்சினையை ஒருங்கிணைப்பதில் நமக்குள் தோல்விகள் உருவாகிறது என்றால் அது நமது வரலாறு பற்றிய போதிய தெளிவின்மைதான். யுத்தத்திற்குப் பிறகும் கூட நம்மை ஒரு தனிச்சமூகமாக நாம் உணரவில்லை என்று ஆய்வாளர்கள் கூறுகின்றனர். சமூகமயப்படுத்தல், சமூகமயவாக்கல் என்பது மற்ற இரண்டு சமூகங்களுக்குள்ளும் தாராளமாக நடந்திருக்கிறது. அதற்கு அங்குள்ள சமூக நிறுவனங்கள் உழைக்கின்றன. எங்களுக்குக் காரணம் எங்களது வேர்கள் எங்களுக்குள் இல்லை. அதை வெளியில்தான் தேடுகிறோம்.

மாற்றம் என்பது இன்றியமையாதது. எங்களுக்குள் நிகழும் மாற்றம்தான் சமூகமாற்றமாகக் குறிக்கப்படுகிறது. இன்று தஃவா என்ற சொல்லும் காலாவதியாகிக்கொண்டு போகிறது. புதுப்புதுச் சொற்களை உருவாக்க வேண்டிய தேவையும் இருக்கிறது. சில சொற்கள் சிறிது காலம் செல்லும் போது இறுகிக்கொண்டு போகிறது. அது பின்னர் பயனளிப்பதில்லை.

**ஸஜீத்:** அந்த மாற்றத்தை எல்லோரும் உணர்கிறார்கள். நேற்றும் எங்களது பாடசாலையில் வாண்மை விருத்திக்கான ஒரு பயிற்சிநெறி நடைபெற்றது. அதில் கலந்து கொண்ட கல்வி அதிகாரியும் மாற்றம் எல்லோருக்கும் அவசியமானது எந்த மாற்றமாக இருந்தாலும் அதை ஏற்றுக்கொள்ள வேண்டும் என்று குறிப்பிட்டார்.

**ஏபிஎம். இத்ரீஸ்:** மாற்றம் என்பதின் அடிப்படை மனப்பாங்கை மாற்றுவதுதான். எனது மகனுக்கு பத்து நிமிடங்களுக்கு ஒருமுறை அவரது விளையாட்டை மாற்றச் சொல்லியிருக்கிறேன். அதுபோல உடுப்பு, இடம், உரையாடல் ஒழுங்கையும் மாற்றிக்கொண்டிருக்கச் சொல்லியிருக்கிறேன்.

நம்மில் மாற்றம் வராமல் இருப்பதற்கு பெரும் தடை என்னவென்றால் நாற்பது ஐம்பது வருடமாக ஒரு வகையான ஒழுங்கையே எதிலும் கடைப்பிடிக்கிறோம். ஒரு ஜன்னல் அருகில் இருந்துகொண்டே சோட்நோட்ஸ் கொப்பியை கையில் வைத்துக்கொண்டு 'சாய்ந்தாடு பாபா சாய்ந்தாடு' என்று பாடமாக்குகிறோம். இந்தநேரத்தில் குடும்பத்தாரோடு கதைக்கவோ அல்லது அயலவர்களுடனான நட்பைப் பேணவோ முயல்வதில்லை. இப்படி ஒரே உடல் மொழி. ஒரே வகையான ஆடைத்தெரிவு, ஒருவகையான உணவு. அந்தப் பாடசாலையிலேயே கல்விகற்று அந்தப் பாடசாலையிலேயே கலியாணமும் முடித்து அதிலேயே புள்ளையும் பெற்று அதிலேயே பென்ஷனுக்குச் செல்லும் மனநிலை. இன்னொரு ஊர் இருக்கிறது, அயலில் ஒரு நாடு இருக்கிறது என்றுகூட உணராத நிலை. அடிப்படையாக மனிதனில் நிகழவேண்டிய மாற்றத்தைகூட ஏற்றுக்கொள்ளாத மனநிலை.

அது என்னவென்றால் சில விடயங்களை புனிதமாகவும் தூய்மையானதாகவும் கட்டமைக்கிறோம். மாற்றம் என்பதை ஒரு பாவச்செயலாக உணர்கிறோம். அது எதைப்போல் என்றால் நாம் புதிதாக டீசேர்ட் அணிந்தால் என்ன இவர் மாறிவிட்டாரா? என்று கேட்பதைப் போல். நீண்டகாலம் நாம் பழகிவிட்டோமே! நீண்டகாலம் செயற்பட்டுவிட்டோமே! நம்மை அவர்கள் எப்படி நினைப்பார்களோ! என்று இருந்துவிடுகிறோம். இந்த மனநிலை நம்மை நமது பழக்கவழக்கங்களுடன் ஒரு புவியீர்ப்பு சக்தி போன்று கட்டிப்போடுகிறது. நாம் எப்படி மாற்றத்தை நிகழ்த்தலாம் என்றால் எப்படி செட்லைட் இந்த புவியீர்ப்பு சக்தியைவிட்டு வெளியில் சென்று இயங்குகிறதோ அதைப்போன்று வெளியேற வேண்டும். உந்தித் தள்ளும் இயந்திரம் ஒன்று அதில் பொருத்தப்பட்டிருக்கிறது அல்லது ஒரு விசை அதிலிருந்து உருவாகிறது. எப்போது அது மைய விசையிலிருந்து விடுபடுகிறதோ அதிலிருந்துதான் அது தனது பணியைத் தொடங்குகிறது. நீண்ட காலம் நம்மிடமிருக்கும் அந்த

மையவிசையை உந்தித் தள்ளிக்கொண்டு அதிலிருந்து விடுபட்டாலே மாற்றம் சாத்தியமாகிறது.

**ஸஜீத்:** இதை எப்படி ஒரு சமூகம் அங்கீகரிக்கும்?

**ஏபிஎம். இத்ரீஸ்:** சமூக அங்கீகாரம் என்பது நாம் பிறரால் கட்டமைக்கப்பட்டிருக்கிறோம் என்பதுதான் உண்மை. இத்ரீஸ் இப்படித்தான் இருப்பார். ஸஜீத் இப்படித்தான் இருப்பார் என்று மற்றவர்கள் எம்மைக் கட்டமைக்கிறார்கள். அப்படிக் கட்டமைக்கப்பட்டிருக்கும் வசனங்கள் நமது அடிமனதுக்குப் பரிமாற்றம் செய்யப்படுகிறது. எனவே மொழியின் அதிகாரம் இங்கு தொழிற்படும். அர்த்தப்படுத்தல் என்பதும் கூட ஒரு அதிகாரம்தான். நான் என்ன சொல்ல வருகிறேன் என்றால் தஃவா தஃவா என்று அது ஒரு பதுவாவாக இன்று மாறியிருக்கிறது. அவனை இவன் கொல்லுதல், இவனை அவன் பழித்தல் என்ற அடிப்படையான மனிதாபிமான உணர்வுகளுமற்று சிரிப்பதுமில்லை, உரையாடுவதுமில்லை என்று ஒரு இறுகிய நிலைக்குச் சென்றுவிட்டது.

தஃவாவுக்குரிய வரைவிலக்கனத்தை தவ்ஹீத் வாதிகள் இன்னும் சுருக்கிவிட்டார்கள். மிக விரிந்த தளத்தினை உள்ளங்கையளவிற்கு கொண்டுவந்து விட்டார்கள். அதற்குள் நின்று கொண்டு வேலை செய்ய முடியாதுள்ளது. அதற்குள் சினிமாவுக்கு இடம் இருக்காது. அதற்குள் அரங்கு இருக்காது. அதற்குள் இணையம் பற்றிய செயலமர்வோ குடும்பப் பிரச்சினைகளை கையாளும் கவுன்சலிங் முறையோ இருக்காது. ஏனென்றால் தஃவாவுக்குள் அது வராது என்று தஃவாவை இறுக்கமாக்கி விட்டார்கள். ‘சமூகம் தன்னைத்தானே மாற்றிக்கொள்ளாதவரை அல்லாஹ் அச்சமூகத்தை மாற்றமாட்டான்’ என்றால் சமூகமாற்ற இயங்கியல் என்ன? மாற்றத்தை விரும்புதல். மாற்றத்தை விரும்பும் மனப்பாங்குதான் அங்கு அடிப்படையாகத் தொழிற்படும்.

ரஸூலுல்லாஹ்விடம் மாற்றத்தை விரும்பும் மனப்பாங்கு இருந்தது. அவர்கள் ஒவ்வொரு கட்டத்திலும் ஒழுங்குகளை மாற்றிக் கொண்டே இருக்கிறார்கள். கடைசிவரைக்கும் நான் புலி கடவாய் பற்களையும் காண்பித்துக் கொண்டிருக்கும் அந்த சின்னத்தோடே போராடுவேன் என்றால் அது நம்மை முள்ளிவாய்க்காலுக்கே கொண்டுவந்து சேர்க்கும். ஹுதைபியா உடன்படிக்கையை எடுத்துப்பார்த்தால் மிக அழகான விட்டுக்கொடுப்புகளை காணமுடியும். வெளிப்படையில் பார்த்தால் தோல்வியாகத் தெரியும். அதற்குப் பிறகு நடந்த தபூக், ஹந்தக் என்று எல்லாப் போராட்டங்களின் வெற்றிகளுக்கும் மூலமாகத் திகழ்வது இந்த விட்டுக்கொடுப்புதான். இந்த விட்டுக்கொடுப்புடன் சிறுபான்மைப் போராட்டம் நிகழ்திருந்தால் இன்றைக்கு இந்தப் பகுதியின் எஜமானர்கள் நாம்தான். நம்மிடம் கேட்டுத்தான் ஒரு தொழிற்சாலை அமைக்கவோ கனிமங்களை கப்பல்களில் ஏற்றவோ முடிந்திருக்கும். இன்று ஒட்டுமொத்தப் பலத்தையும் தின்று செரித்து எல்லோருடைய தலைவிதியையும் நிர்ணயிக்கும் அதிகாரமாக அது வளர்ந்து நிற்கிறது.

நம்மிடமிருந்த மாற்று சிந்தனை, ஸ்டெடஜிக், டெக்டிக் எல்லாவற்றையும் அழித்துவிட்டோம். ஏகவழிமுறையாக ஆயுதத்தை அல்லது பயானை மட்டும் நம்புகிறோம். நம்முடைய கொள்கையை, சிந்தனையை, கருத்தை எடுத்துச் செல்வதற்கு பல வழிமுறைகள் இருக்கின்றன. அந்த வழிமுறைக்கு ஏற்ப நமது மனப்பாங்கை மாற்றிக் கொள்ள வேண்டும். அதாவது உங்கள் மாணவர்களுக்கு நாடகப்பாணியில் பாடமொன்றைக் கற்பித்தால் 'பார்ப்பவர்கள் என்ன நினைப்பார்கள்' என்ற மனநிலையிலிருந்து மாறவேண்டும். புதிய உடல்மொழியை அங்கு கொண்டுவர வேண்டும். இது அசையாமல் ஆமிக்காரன் மாதிரி விறைத்த நிலையில் பயான் பன்னினால் இறுதியில் பிள்ளை களிசனையே நனைக்கும். எனவே எமது அணுகுமுறையில்,

பேச்சில், மொழியில் தேவையான மாற்றங்களை அனுமதித்தல். மாற்றம் என்ற சொல்லினூடாக நமக்குத்தேவையான அறிவு, தொழில்நுட்பம், நமக்குத் தேவையான திறன்கள் இவற்றில்தான் மாற்றங்களைக் கொண்டுவர வேண்டும். கடந்தகால திறனும் ஒழுங்கும் ஒரு கட்டத்துடன் தேங்கி நிற்கிறது. காரணம் வெளிநாட்டுச் சிந்தனையாளர்கள், இரவல் சிந்தனையாளர்களை இங்கு கொண்டு வந்தோம். கற்பித்தோம். மொழிபெயர்த்தோம். அவர்களுடைய சிந்தனையை பாடத்திட்டமாக்கினோம். ஆனால் மாற்றம் என்பது ஓரளவுக்குத்தான் சாத்தியமாகி இருக்கிறது. மாற்றம் அடுத்த கட்டத்திற்குச் செல்ல வேண்டுமாக இருந்தால் இந்த நாட்டின் கலை, இலக்கியம், பண்பாடு, வரலாறு என்பவற்றையும் கற்கத் தொடங்க வேண்டும்.

நமக்கு கலையுமில்லை, இலக்கியமுமில்லை என்றொரு குற்றச்சாட்டை முன்வைக்கிறார்கள். எம்மிடமிருக்கும் பண்பாட்டை, கலை மரபை இன்னும் நாம் முன்வைக்கவில்லை என்பதுதான் இதற்குக் காரணம். அவற்றை மற்றவர்கள் அறிந்துகொள்ளும்படியான எந்த வேலைத்திட்டமும் எம்மிடமில்லை. காரணம் ஒரே ஒழுங்கில் இயங்குதல். மாற்றத்தை விரும்பாத நிருவாக முறை, மாற்றத்தை விரும்பாத பணிப்பாளர். பணிப்பாளர் கீழைத்தேய வாதிகளைப் பற்றிக் கற்றிருந்தால் மாணவர்களும் அவர்களைப் பற்றித்தான் கற்கவேண்டும். நானும் தேடிப்பார்த்திருக்கிறேன் இலங்கையில் யாராவது கீழைத்தேயவாதிகள் இருக்கிறார்களா என்று! நமது நாட்டில் கலைவாதிக் கலீல், ஏ. இக்பால் அல்லது சோளைக்கிளி போன்றவர்களே இருக்கிறார்கள். இவர்கள் முன்வைக்கும் கருத்துகளே எம்முடையதாக இருக்க முடியும்.

நாம் எப்போதும் சிந்தனைகளையே படிக்கிறோம். முஹம்மது அப்துஹு என்ன சொல்கிறார்? ரஷீத் றிழா என்ன சொல்கிறார்? என்று அவர்களின் சிந்தனைகளையே படிக்கிறோம். எப்படி

சிந்திப்பது என்று படிப்பித்திருக்கிறோமா? எந்தநாளும் முஹம்மது அப்துஹுவில்தான் நாம் தங்கி நிற்பதா? காலமெல்லாம் கர்ளாவியில்தானா தங்கியிருப்பது? நமக்குள் முஹம்மது அப்துஹு நமக்குள் கர்ளாவிகள் உருவாக வேண்டாமா? நாம் ஒரு புதிய சிந்தனையை உலகிற்குச் சொல்ல வேண்டாமா? இதற்கு சிந்தனையை கற்றுக் கொடுத்துப் பயனில்லை. எப்படி கர்ளாவி சிந்திக்கிறார்? எப்படி கர்ளாவிக்குள் சிந்தனை உருவாகிறது? என்பதைக் கற்பிக்க வேண்டும். அந்தவகையில் ‘சிந்தனைகள் எவ்வாறு பிறக்கின்றன’ என்று பதினைந்து வருடங்களுக்கு முன்னரே எனது மாணவர்களுக்கு கற்பித்திருக்கிறேன். ஒரு நாள் பட்டறையாகவும் ஒருவருட பாடத்திட்டமாகவும் கற்பித்திருக்கிறேன். பின்னர் அது நூலுருவாகவும் வெளிவந்தது. அதை அன்று யாரும் ஏற்றுக்கொள்ளவில்லை. வெளிநாட்டிலிருந்து அப்துல் ஹமீத் பிலாலி வந்ததற்குப்பிறகும்கூட அதே நிலைதான். ஏன் இவை நடைபெறுகிறது என்றால் ஒருவருக்கு சிந்திக்கத்தெரிந்தால் அவர் ஒளிவட்டங்களுக்குப் பின்னால் செல்லமாட்டார் அல்லது அதிகாரத்தைக் கேள்விக்குள்ளாக்குவார் என்பதால்தான்.

அறுபது எழுபது வருடங்களுக்கு முன் தரீக்கா சிந்தனை பிழை என்பதால்தான் இங்கு மௌதூதியையும் பன்னாவையும் இல்யாஸ் (ரஹ்) வையும் கொண்டுவருகிறோம். ஏனென்றால் தரீக்கா காலாவதியாகிவிட்டது. தரீக்காவுக்குள் இருந்து கொண்டு எல்லா வேலையையும் செய்யமுடியாது என்பதால். ஹதீஸோ தப்ஸீரோ பிக்ஹோ தர்பியாவோ அல்லது பாடத்திட்டத்தையோ படிப்பிக்க முடியாது என்பதால்தான் புதிய அமைப்புகளை இங்கு கொண்டு வருகிறோம். இன்று அவையும் போதாது. ஹஸனுல் பன்னாவின் இருபது போதாது. இல்யாஸ் (ரஹ்) ஆறு போதாது. இன்னும் சில இலக்கங்களை அதில் சேர்க்க வேண்டும். குழந்தைகளையும் அதில் சேர்ப்போம். பெண்களையும் சேர்ப்போம். குடும்பக் கல்வியை

அதில் பாடத்திட்டமாக்குவோம் என்றால் இல்லை. அந்த இலக்கங்களை மாற்ற முடியாது எனும் மனநிலை.

முற்போக்கு சிந்தனை நாம் வாழும் காலம், சூழலிலிருந்தே உருவாகிறது. அறுபது எழுபது வருடங்களுக்கு முன்னர் முற்போக்கு பேசிவந்த இந்த இயக்கங்கள் இன்று உருவாகிவரும் இந்த புதிய முற்போக்கை எதற்காக எதிர்க்கின்றன என்றால் தமது இருப்பை, அதிகார பீடத்தை மீண்டும் மீண்டும் தக்கவைத்துக் கொண்டு மாடறுத்துக் கொண்டும் உழுகிய்யா கொடுத்துக் கொண்டும் இருப்பது கதிரைக்கு பாதுகாப்பு என்பதால். புதுப்புது விடயங்கள், பெண்களின் பிரச்சினைகள், அரவாணிகளின் பிரச்சினைகள், கல்விப் பிரச்சினை, சமூகவியல் பிரச்சினை என்றால் அவை பாடத்திட்டத்தில் இல்லையே என்று கையை விரிக்கும் ஒரு கூட்டம். இல்லை அதை எங்களுடைய பன்னாவும் மௌதூதியும் கர்ளாவியும் பேசியிருக்கிறார்கள் என்று மற்றொரு கூட்டம். எங்கு பேசியிருக்கிறார்கள் என்று வினவினால் மௌனம். சரி பேசியிருக்கிறார்கள் என்றால் அதைக் கொஞ்சம் நடைமுறைப்படுத்திப் பார்ப்போமே என்று கூறினால் நாம் இன்னும் அந்தத் தரத்திற்கு வரவில்லை என்று வாயை மூடிவிடுகிறார்கள். இங்கு நாம் என்ன செய்கிறோம் என்றால் அவர்களை வடித்து வடித்து நமக்கு வாசியான அல்லது விருப்பமான ஒரு பாடத்திட்டத்தை அவர்களிலிருந்து உருவாக்கி வைத்திருக்கிறோம்.

உண்மையில் பன்னா ஒரு தியட்டரிஸ்ட். அரங்காற்றுகைச் செயற்பாட்டாளர். நிறைய நாடகங்களை ஒருங்கமைத்திருக்கிறார். அவருடைய அமைப்பு உறுப்பினர்கள் எத்தனையோ நாடகங்களை அரங்கேற்றி இருக்கிறார்கள். எந்தளவுக்கென்றால் இப்றாஹீம் (அலை) இஸ்மாயீலை பலியிடுவதற்கு கொண்டுவரும் காட்சியைக்கூட அரங்கில் நிகழ்த்தியிருக்கிறார்கள். ஜிப்ரீல் (அலை) திரைக்குப் பின்னால் இருந்து உரையாடுகிறார். அங்கிருந்த இஃவான்களோ

பொதுமக்களோ அந்த விடயத்தை மறுக்கவில்லை. ஆனால் இங்கு அவற்றை மறுக்கிறோம். நாடகம் என்பது போலி, நடிப்பு என்கிறோம். மார்க்கத்தில் அதற்கு இடமில்லை என்று பத்வாக் கொடுக்கிறோம். முப்பத்தைந்து நாற்பதுகளில் பழமைவாதிகள் ஆகாது என்று குரல் எழுப்புகிறார்கள். அதற்கு ஹஸனுல் பன்னா அல்லது இஃவான்கள் எப்படி பதிலளிக்கிறார்கள் என்றால் அறபா மைதானத்தில் ரஸூல் (ஸல்) அவர்கள் பேசுகிறார்கள். மஸ்ஜிதுந் நபவியில் பேசுகிறார்கள். ஸ்கந்திரியாவில் நம்முடைய ஷேய்க் பதாவி குத்பா ஓதுகிறார். அங்கு மஸ்ஜிதுந் நபவியில் ரஸூலுல்லாஹ் செய்ததை இங்கு பதாவி அதே 'போலச்' செய்கிறார். நாடகமும் அதுதான். போலச்செய்தல். ஒரு பொலிஸ் மாதிரி, ஒரு வயோதிபர் மாதிரி, ஒரு உம்மா மாதிரி, கணவன் மனைவிக்கு அடிப்பது மாதிரி போலச் செய்தல். சமூகத்திற்குள் நடக்கும் பிரச்சினைகளை அரங்கிற்குக் கொண்டு வந்து நடிப்பு ஊடாக ஆற்றுகை செய்தல். இபாதத்தும் என்ன என்றால் 'போலச்' செய்தல்தான். இப்றாஹீமா இங்குவந்து செய்து காண்பிக்கிறார்? இல்லை, நமது ஆலிம்தான் இங்கு குத்பா ஓதுகிறார். அங்கு பலியிடப்பட்ட ஆட்டைத்தான் இங்கு பலியிடுகிறோமா? இல்லை. இப்றாஹீம் போலச் செய்தல். ரஸூலுல்லாஹ் தொழுததைப் போலச் செய்தல் என்பதுதான் இபாதத்.

வழிபாடுகளில் இருந்துதான் நாடகம் தோன்றுகிறது என்று கிரேக்க நாடகங்களை வைத்து ஆய்வு செய்கிறார்கள். சடங்கிலிருந்து, இபாதத்திலிருந்து நாடகம் தோன்றுகிறது. ஏனென்றால் போலச் செய்தல் என்பது இபாதத்தில்தான் இருக்கிறது. அரங்காற்றுகை அதில்தான் இருக்கிறது. மௌலவிமார்கள் எல்லாம் நடிகர்கள். ஏனென்றால் போலச்செய்கிறார்கள். சடங்கிலிருந்து நாடகம் தோன்றி சமூக நாடகங்கள் பள்ளிவாயலுக்கு வெளியே நிகழ்த்தப் பட்டிருக்கின்றன. நடிப்பு என்பது பொய்யல்ல. போலச் செய்தல் என்பதுதான் நடிப்பு. நாற்பதுகளிலேயே இஃவான்கள் ஸலபிகளுக்கு பதிலளிக்கிறார்கள். பின்னர் என்ன நடக்கிறது

என்றால் இஹ்வான் சிந்தனைப் போக்கு வெளிநாடுகளில் பரவப்பரவ அங்கிருக்கும் ஸலபிக்களும் மற்றவர்களும் ஆதிக்கத்திற்குள் வந்து குவைத்திலிருந்து கொண்டு அந்த ஸலபி சிந்தனையினூடாக முன்னைய இஹ்வான்களின் அரங்காற்றுகைப் பங்களிப்புகளை இருட்டடிப்புச் செய்கிறார்கள். இங்கு பணிக் கொடை வழங்கும் நிறுவனங்கள்தான் கொள்ளையைத் தீர்மானிக்கின்றன.

அண்மையில் நாம் காத்தான்குடியில் ஏற்பாடு செய்த நிகழ்வொன்றில் ஒரு அரங்காற்றுகையைச் செய்தோம். அது ஒரு பெண்ணிய நாடகம். அதில் எல்லோரும் எம்மைப் பாராட்டினர். இதற்கு அரங்காடிகள் கிடைக்காததினால் பொலன்னறுவையிலிருந்து கொண்டுவந்துதான் நாம் இந்நாடகத்தை அரங்கேற்ற வேண்டியிருந்தது. தொழில்முறையற்ற கலைஞர்களை வைத்துத்தான் நாம் இதனைச் செய்தோம். அதில் உள்ள போதாமை என்ன என்று எமக்குத்தான் தெரியும். ஆனால் பார்வையாளர்களுக்கு நிறைவளிக்கக்கூடிய ஒரு டோட்டல் தியட்டராக அது இருந்தது. இன்றைய சூழலில் நாம் எதிர்கொள்ளும் சமூகப் பிரச்சினைகளை பேசுவதற்கு நாடகம், சினிமா ஒரு நல்ல ஊடகமாகத் திகழ்கின்றது. பெரிய பெரிய திட்டங்களும் ஆளணியும் இதற்குத் தேவையில்லை. அல்லது திட்டங்களுக்குரிய நிதி வெளியிலிருந்துதான் வரவேண்டும் என்ற தேவையும் இதற்கு இல்லை. நம்மிடமிருக்கும் மிகக்குறைவான வளத்தினை வைத்தே அரங்காற்றுகை செய்ய முடியும். நாம் இன்று வந்து நிற்கும் இடம் இதுதான். எம்மிடமிருக்கும் வளத்தினைத் கொண்டு இயங்குதல். நல்ல நல்ல சமூக நாடகங்களுக்கூடாக மக்கள் அரங்கை கட்டியெழுப்புதல். இதுதான் எங்களது திட்டம். இதில் யார் யார் இணைய விரும்புகிறார்களோ அவர்களுடன் கைகோர்த்து செயற்படுவோம். யாரையும் புறமொதுக்காமல் விளிம்பு நிலைக்குத் தள்ளாமல் செயற்படுவதென்பதே எமது அடிப்படை.

அஷ்கர் அலி எஞ்சினியரும் ஒரு நல்ல சிந்தனையாளர்தான். போறா சமூகத்திற்குள் இருந்து வந்து அச்சமூகத்தின் முதலாளித்துவத்தை உடைத்து ரஸூலுல்லாஹ்வை முன்னிருத்திய ஒருவர். அவரது அகவயமான விடயங்கள், அவர் மௌசூராத் ஓதினாரா என்பது நமக்குத் தெரியாது. ஆனால் அவரால் நூற்றுக்கணக்கான ஆயிரக்கணக்கான இடதுசாரிகள் இஸ்லாத்தை விளங்குவதற்கும் இஸ்லாத்தை தழுவுதற்கும் காரணமாக இருந்திருக்கிறார். இந்த மைய அதிகாரம் கொண்ட நவீனத்துவ நோக்குடைய வைதீக நிலைப்பட்ட அமைப்புவாதிகள் இவர்போன்ற தாராளவாத அல்லது நாட்டார் இஸ்லாமிய சிந்தனையில் இருந்து வரும் பங்களிப்பினை இல்லாமல் செய்கிறார்கள். விளிம்புநிலைக்குத் தள்ளப்பட்டிருக்கும் இவ்வகையினருக்காக பேசுவது இன்று அவசியமாகிறது.

எல்லாவற்றிலும் சம்பூரணம் என்றநிலை அமைப்புவாதிகளிடமிருந்தே உருவாகிறது. கண்களைத்தவிர மற்றெல்லாவற்றையும் கறுப்பால் மூடிக்கொண்டு போகும் மனநிலைதான் இது. இப்படியான ஆடைகலாசாரம் நாட்டார் இஸ்லாத்தில் இருக்காது. ஆனால் அவ்ரத்தை மறைக்கக்கூடிய மரியாதையான ஒரு ஆடையமைப்பு அவர்களிடம் இருக்கிறது. அவர்கள் ஜாஹிலியத்தில் இருப்பதாகத்தான் அமைப்புவாதிகள் நினைக்கிறார்கள். இவர்களைப் போல் சம்பூரணமாக இருக்க முடியவில்லை என்ற ஏக்கம் அல்லது நெளிந்து வளைந்து செல்லும் மனநிலையை இது தோற்றுவித்திருக்கிறது. நீண்ட தாடியும் ஜுப்பாவுமாக அவர்கள் முன் 'லபக்' என்று கஸ்து பாயும் போது பூனைக்கு முன்னால் நிற்கும் எலியாக விளிம்புநிலை இஸ்லாம் மாறிவிடுகிறது. என்ன சொல்லவருகிறேன் என்றால் விளிம்புநிலை இஸ்லாமிய கோட்பாட்டை முன்வைக்கவேண்டிய தேவை இன்று உருவாகிவருகிறது.

ஏனும் வைதீகநிலைப்பட்ட இறுக்கமான நவீனத்துவ நோக்கு

கொண்ட இஸ்லாமிய சூழலில் இருந்துதான் வருகிறேன். வந்து பார்க்கும் போது அமைப்புகளால் கைவிடப்பட்ட, விளிம்புநிலைக்குத் தள்ளப்பட்டவர்களுடன் உரையாடும் போது நாம் ஒரு பெரிய அநியாயத்தைச் செய்திருக்கிறோம் என்று தோன்றுகிறது. நாம் விமர்சிக்க வேண்டியது அமைப்புவாதிகளைத்தான். ரஸூலுல்லாஹ்வின் பொற்காலத்திற்குச் சென்று பார்த்தால் அங்கு எல்லா வகையான மக்களுக்கும் இடமிருக்கிறது. இங்கு மௌதூதி சொல்வது மாதிரி அனைவரும் ஹாக்கிமிய்யத்தை விளங்கினால்தான் பூரண முஸ்லிம் என்று ரஸூல்லாஹ் சொல்லவில்லை. அதாவது முஆவியா பின் அல்ஹகம் தனது கப்பாராவுக்காக (குற்றப்பரிகாரம்) அவருடைய அடிமைப் பெண்ணை விடுதலை செய்வதற்கு ரஸூலுல்லாஹ்விடம் அழைத்து வருகிறார். ரஸூலுல்லாஹ் அப்பெண்ணிடம் 'அய்னல்லாஹ் - அல்லாஹ் எங்கிருக்கிறான்? என்று வினவுகிறார். 'அல்லாஹ் வானத்திலிருக்கின்றான்' 'நான் யார்?' 'நீங்கள் அல்லாஹ்வின் திருத்தூதர்' என்றவுடன் அப்பெண்ணை நபியவர்கள் விடுதலை செய்து வைக்கிறார்கள்.

இன்று அப்பெண்ணுக்கு தர்பிய்யாவும் கொடுத்து கண்கள் மட்டும் தெரியும் கறுத்த ஆடையையும் அணிவிக்கிறோம். இல்லை என்றால் அப்பெண்ணை நாம் உஸ்ராவில் சேர்க்க மாட்டோம். அப்பெண்ணின் கல்வித்தரத்திற்கு ரஸூலுல்லாஹ்வின் அணுகுமுறையே சரியானது. அப்பெண்ணின் குழந்தைகள், பேரக்குழந்தைகள் மதீனா சென்று அல்லது பக்தாத் சென்று ஹதீஸைப் படித்து அது நஸாஈயாக மாறி அது திர்மிதியாக மாறிச் செல்லும். இன்று எல்லாவற்றுக்கும் ஒரே அணுகுமுறையைத்தான் இந்த அடிப்படைவாத இஸ்லாம் தோற்றுவித்திருக்கிறது. அனைவரும் கறுப்புத்துணியால் தைத்த அபாயா என்பது எங்கிருந்து வருகிறது? கறுப்பு அபாயாவின் தீவிரம், அரசியல் என்பது என்ன? வெள்ளை நிறப் பெண்ணுக்கு கறுப்பு அழகுதான். கறுப்புப் பெண்ணுக்கு அதே கறுப்பை அணிந்தால்

எப்படி இருக்கும்? ஹஜருல் அஸ்வத் மாதிரியல்லவா இருக்கும்!

**ஸஜீத்:** இப்படி நீங்கள் உடைத்துக் கொண்டு வரும் பொழுது சமூகத்தில் உருவாகிவந்த சில ஒழுங்குகளை சிதைக்காதா? பெரும் கஷ்டத்திற்கு மத்தியில்தான் இன்று முஸ்லிம் பெண் உடை ஒரு வடிவத்தை அடைந்திருக்கிறது. எல்லாவற்றையும் கழற்றி எறிந்துவிட்டு டெனிமும் டீசேர்டும் அணியும் நிலையிலிருக்கும் உயர்தர, பல்கலைக்கழக மாணவிகள் இருக்கும் நிலையில் இதற்கு என்ன மாற்று வழி என்பதை தனியாக உங்களிடம் கேட்க வேண்டும் என்று இருக்கும் போது நீங்கள் அதற்கு எதிர்நிலையில் இருந்து உரையாடுகிறீர்கள். இது எங்கு போய் முடியும்? இறுக்கமான ஒன்றாகப் பார்க்கக்கூடாது என்று சொல்கிறீர்கள். புத்திஜீவிகள், மேல்மட்டத்திலுள்ளவர்களுக்கு இது சரியாக இருக்கலாம். ஆனால் எல்லோருக்கும் இதை பிரயோகிப்பது சரியானதா?

**ஏபிஎம். இத்ரீஸ்:** இங்கு நாம் யார்? என்ற கேள்வியை கேட்டுப்பாருங்கள். நாம் பாமரமக்களுமில்லை. பெரும் புத்திஜீவிகளுமில்லை. நடுத்தர குடும்பங்களிலிருந்து வரும் சமூக செயற்பாட்டாளர்கள் அல்லது புலமையாளர்கள். இந்த வட்டாரத்திற்குள்ளால் இருக்கும் இறுக்கத்தன்மையை குறைப்பதற்கு ஒரு உரையாடல் தேவைப்படுகிறது. உதாரணமாக ஒருவர் என்னிடம் வந்து 'நீங்கள் எந்த அமைப்பிலுமில்லை. பைஅத் செய்யவுமில்லை. ஏதாவது ஒரு அமைப்புடன் சேர்ந்து இயங்கினால்தானே மறுமையில் ஈடேற்றம் கிடைக்கும்' என்று கேட்கிறார். இது எனக்கு மிகுந்த ஆச்சரியத்தைத் தந்தது. நான் சொன்னேன் குழந்தைகளுக்காக நிறைய எழுதி, பேசி, கூட்டங்கள் நடாத்தி வருகிறேன். அதேபோல பெண்கள் தொடர்பான எழுத்துக்களை, உரையாடல்களை செய்து வருகிறேன். அரங்கப் பணி செய்து வருகிறேன். சினிமாவிலும் நம்மிடமிருக்கும் ஆற்றலுள்ளவர்களை ஊக்குவித்து வருகிறேன்.

சிறுவர்களுக்கான சஞ்சிகளை கொண்டுவருவதற்கும் உதவியிருக்கிறேன். பத்து மாதங்களுக்கும் மேலாக ஒரு இணையத்தளத்தை தொடங்கி நடாத்திவருகிறேன். இதுவரைக்கும் அவை நிரப்பப்படாத வெற்றிடங்களாகவே இருக்கிறன.

அமைப்புவாதிகள் என்ன நினைக்கிறார்கள் என்றால் சர்வதேச தொடர்பு, வலைப்பின்னல், நிதி என்பவற்றினூடாக மட்டுமே தஃவாவைச் செய்யமுடியும் என்று. அதாவது அவர்கள் வைத்திருக்கும் பாத்திரத்தில் குடித்தால்தான் அது டீ. தோனியில் பிடித்தால் அது மீன் இல்லை. பெரும்பெரும் கப்பல்களில்தான் மீனைப்பிடிக்க வேண்டும். இதுதான் இன்று அவர்கள் நிற்கும் இடம். இந்தப் புனிதங்களை நாம் கேள்விக்குள்ளாக்க வேண்டாமா? புனித நிலைக்கு ஒன்றை கொண்டு செல்வதை கைவிட்டுவிடுவோம். நாம் நோன்பை புனிதமானதாக மாற்றி அதில் எல்லா இபாதத்களையும் கொண்டுவந்து கொட்டி மற்ற மாதங்களை புனிதமற்ற மாதங்களாக கட்டமைக்கிறோம். இதனால் நோன்பு காலத்திற்கென்றே புனித வியாபாரிகள் உருவாகிறார்கள். அதற்குள்ளால் தராவீஹ், தஸ்பீஹ், கியாமுல்லைல், தஹஜ்ஜுத் என்று அவர்களுக்கான சந்தை விரிவடைகிறது. ஒரு விடயத்தை புனிதநிலைக்குக் கொண்டு செல்வதால் உருவாகும் பக்கவிளைவிற்கு நோன்பை மிகச்சிறந்த உதாரணமாகக் கொள்ளமுடியும். நாம் ஒன்றை தவிர்த்து இன்னொரு வகையான சந்தையை உருவாக்கிக் கொண்டு செல்கிறோம். ஏற்கனவே கத்தம், பாத்திஹா என்று விமர்சித்துத் திரிந்த நமக்கு இன்னொரு வகையான வியாபாரம் தேவைப்படுகிறது.

சென்ற நோன்புப் பெருநாளைக்கு எங்களது பிரதேசத்தில் மூன்று இடங்களில் கானிவெல் நடைபெற்றது. இந்த மூன்றும் கொள்கலன்களில் கொண்டுவரப்பட்டு சிங்களவர்களால் நடாத்தப்பட்டவை. முப்பது நாற்பது வருடங்களுக்கு முன்னர் எமது மாமா, சாச்சாமார் தென்னங்கட்டைகளைக் கொண்டு

தொட்டிலூஞ்சல் செய்து, நாடகம் நடாத்தி, கோடுகச்சேரி என்று அதற்குள்ளால் சமூகப்பிரச்சினைகளைப் பேசி, மஸ்கத் விற்று அதிலிருந்து வீட்டுத்தேவை, குடும்பத்தேவைகளை கவனித்துக்கொண்டிருந்த நிலையில், இப்படி ஒரு கலாசார, பண்பாட்டு நிகழ்வுகளுக்குள்ளால் நமது சமூகத்தின் அடையாளம், சிந்தனை, இருப்பு எல்லாவற்றையும் பாதுகாத்து வந்த நிலையில் இதை பித்அத், ஷிர்க், ஹராம் என்று சொல்லி, இன்று தென்னிலங்கை முதலாளிமார்களுக்கு ஒவ்வொரு நாளும் மில்லியன் கணக்கான பணத்தை கொடுத்துக் கொண்டிருகிறோம்.

தென்னிலங்கையில் சிவில் நிருவாகம் இருந்தனால் அங்கு தோரணம், கானிவெல், சர்கஸ் வளர்ந்து அவை பெரும் கம்பனிகளாக வரும்பெழுது இங்கிருக்கும் ஜம்மியதுல் உலமா 'ராத்தா போகாதீங்க! உம்மா போகாதீங்க! சாச்சி போகாதீங்க!' என்றால் அது எவ்வளவு பெரிய அபத்தம். அடுப்படியிலேயே கிடக்கும் ராத்தாமார், சாச்சிமார் அவர்களின் பேச்சைக் கேட்கவில்லை. மக்கள் ஒன்றுகூட, பொழுதைக் கழிக்க இடம் வேண்டாமா! அந்த வீட்டுக்குள்ளேயே பிள்ளைகளை வளர்த்துக் கொண்டு உம்மா இருக்க வேண்டுமா! மிருகமா அவள்! இதைத்தான் நாம் கட்டுடைக்க விரும்புகிறோம். குர்ஆனையோ ஹதீஸையோ அல்ல. 'உங்களது வாசிப்புதான் சரி, இதுதான் அர்த்தம்' என்று சொல்லாதீர்கள். இதுதான் ராஜிஆன கருத்து. இதுதான் அர்ஜஹ் எனும் பொழுது மற்ற வாசிப்பு எல்லாவற்றையும் விளிம்புநிலைக்குத் தள்ளுகிறீர்கள். ஒன்றை விளிம்புநிலைக்கு எப்போது தள்ளுகிறீர்களோ அப்போதே நீங்கள் அதிகாரத்தை விரும்புகிறீர்கள் என்று பொருள். உங்களுக்கான இருப்பை மட்டும் நிறுவிக்கொண்டு மற்றுள்ளவர்களின் உணர்வுகள், விருப்பங்களை நிராகரிக்கிறீர்கள்.

பல நிறங்களில் உடுப்பதற்கு மனிதனுக்கு விருப்பம் இருக்கும். அதுதான் இயற்கையும். இங்கு அவ்ரத்தை மட்டும்தான் நாம்

பேசவேண்டும். அப்போதுதான் எல்லாவகையான உடுப்பு வியாபாரிகளுக்கும் தொழில் இருக்கும். மாறாக கறுப்பை மட்டும் பேசுவதால் பெரும் முதலைகளை உருவாக்கி அவர்களுக்கு மட்டும் இங்கிருக்கும் பணத்தை அனுப்பிவைக்கிறோம். எமக்கான ஆடையை அவர்களே தீர்மானிக்கிறார்கள். இதனால் நூற்றாண்டுகளாக நாம் பேணிவந்த ஆடைக் கலாசாரம் அழிக்கப்பட்டு ஒற்றைத் தன்மை உருவாகிறது. அவ்ரத்தை மட்டும் பேசுவோமாக இருந்தால் எல்லாவகையான ஆடைக்கும் இடமிருக்கும். பிரதான விடயங்களை மட்டும் பேசுவோம். கிளையம்சங்களில் இஜ்திஹாத் செய்வதற்கு விட்டுவிடுவோம். இன்று சட்டவசனங்களை திருப்பி வாசிக்கும் போது அதன் பன்மைத்துவம் தெளிவாகிறது. நாம் ஒரு வாசிப்புக்குள்ளாலேயே நின்றிருக்கிறோம். திறந்த கலந்துரையாடல் இல்லாத மாற்றுக் கருத்தொன்றை உள்வாங்காத வாசிப்புத்தான் அது. ஆசிரியர் சொல்லும் கருத்தை, வாசிப்பை வைத்துக்கொண்டு பரீட்சை எழுதினால்தான் நாம் சிறந்த மாணவன் என்பது போல.

***ஸஜீத்:*** இதை எப்படி சாதாரண மக்களுக்குக் கொண்டு போய்ச் சேர்ப்பது?

***ஏபிஎம். இத்ரீஸ்:*** இந்த உரையாடலை மக்களுடைய மொழியில் வளர்த்துச் செல்ல வேண்டும். அவர்களுக்குத் தேவையான முறையில் இயங்குவதனூடாக இதனை கொண்டு செல்லலாம்.

***றிழா:*** நமக்குள் நிறுவனமயமாக்கல் நடந்த பொழுது சிந்திப்பையும் நிறுவனத்திற்கூடாகவே மேற்கொள்கிறோம். சிந்திப்பதற்கான அல்லது இயங்குவதற்கான வாயிலின் நுழையும் இடத்திற்கு வந்திருக்கிறோம். இது எங்களுக்கான ஒரு உரையாடலாகக் கருதலாம். இன்று எல்லாமே மைக்ரோ அளவில் நிற்கிறது. திருகோணமலைக்கான இஸ்லாமிய

வாழ்வியல் சூழலில் இருக்கும் பண்புகள் இன்னொரு பகுதிக்குப் பொருத்தமில்லாது இருக்கலாம். இங்கு இத்ரீஸ் நானா சொல்வது ஒரு கருத்துநிலைதான். அதை புரிந்து கொள்ளல், வடிவமைத்தல், சாத்தியத்தை உருவாக்கல் என்பது சமூக அளவில் நடைபெறும் உரையாடலில்தான் தங்கியிருக்கிறது.

**ஏபிஎம். இத்ரீஸ்:** டோட்டல் தியட்டருக்கு எப்படி வருகிறேன் என்றால் 'நாடகம் என்பது இப்படித்தான் இருக்கும்' என்று நம்மிடமிருக்கும் புரிதலை மாற்ற வேண்டும் என்பதற்காகத்தான். முதலில் திரைவிலகும், பின்னணி குரல் இருக்கும், காட்சிகள் இருக்கும், நடிகர்கள் இப்படித் தோன்றுவார்கள் என்ற நமது மனப்பதிவை டோட்டல் தியட்டர் மாற்றியமைக்கிறது. வட்டமாக இப்படி பேசிக் கொண்டிருக்கும் போதே நாடகம் உருவாகிறது. பெண்ணியம் பற்றி ஒருவர் கவிதை படிக்கிறார். ஒருவர் குத்பா ஓதுகிறார். இதற்குள்ளால் கதை ஒன்று பின்னப்படுகிறது. கும்மி, கோலாட்டம் என்று எல்லா இலக்கிய வகைகளையும் உட்கொண்டே இந்நாடகம் எழுதப்பட்டிருக்கிறது. யாரெல்லாம் இதில் நடிக்கிறார்கள் என்பது ரசிகர்களுக்கு பின்னர்தான் தெரிகிறது. பிரச்சாரத்துக்கான அனைத்து உத்திகளையும் உள்ளடக்கியதாக இந்நாடகம் இருந்ததால் அனைவரையும் அது கவர்கிறது. இந்த தியட்டர் முறை மிக எளிமையான ஒன்றாகும். எந்த இடத்திலும் அரங்கேற்றக்கூடியது.

ஐரோப்பிய தியட்டர் ஆய்வாளர்களிலிருந்துதான் நான் இந்த முறையைப் படிக்கிறேன். இலங்கையிலுள்ள பேராசிரியர்கள், ஆய்வாளர்களுடைய நூல்கள் வாயிலாகவும் இன்னும் விளங்கிக் கொள்கிறேன். எங்களுடைய சூழலில் எப்படிப் பிரயோகிக்கலாம் என்று. எனவே நாங்கள் நடைமுறை என்று வரும் பொழுது எங்களிடமிருந்து அழிந்துபோன இன்னும் உயிர்வாழ்ந்து கொண்டிருக்கும் விடயங்களை இதற்குள்ளால்

சொல்ல முடியும். கானிவெல் ஒன்றில் இடம்பெறும் வடிவங்களை எடுத்துக் கொண்டு அதற்குள்ளால் நமது சமூகப் பிரச்சினைகளை, நமது வாழ்வியல் பிரச்சினைகளை எப்படிக் கொண்டு போகலாம் என்பதை பார்ப்போம். கோலாட்டம் எல்லோருக்கும் விருப்பமான விடயம். கோலாட்டத்துக்குள்ளால் ரபான் அடிக்கும் அண்ணாவியாருக்குள்ளால் நாம் ஒரு வரலாற்றைச் சொல்ல முடியும். ஒரு இமாம், ஒரு முஜத்திதின் வரலாற்றைச் சொல்ல முடியும். இதனால் இரண்டு விடயம் கிடைக்கிறது. ஒன்று கோலாட்டம் என்னும் நமது மரபு வழி ஊடகமும் கிடைக்கிறது மற்றது நம்முடைய ஒரு கருத்தும் அதற்குள்ளால் மக்களுக்குக் கடத்தப்படுகிறது. நம்முடைய கும்மி, தாலாட்டுப்பாடல், ஒப்பாரியை ரபான் ஒன்றை வைத்துக் கொண்டு நிகழ்த்தினால் அதற்குள்ளால் நம்முடைய வரலாறு ஒன்றைச் சொல்லமுடியுமே. ஸைனப் அல் கஸ்ஸாலியின் வரலாற்றைச் சொல்லுவோமே. அல்லது நம்முடைய உம்மா ஒருவரின் பிரச்சினைகளைச் சொல்லுவோமே. இப்படி உள்ளூர் வடிவங்களையும் நமது கலை மரபுக்கு தண்ணீர் கொடுத்துக் கொண்டிருந்த வேர்களையும் தேடி எடுத்தால்தான் அடுத்த தலைமுறைக்கு நமது கலைகளை ஒப்படைக்க முடியும். ஆனால் சவுதி வழியிலான நிறுவனமயப்பட்ட நவீனத்துவ நோக்குக்கொண்ட இந்த அடிப்படைவாத இஸ்லாமிய செல்நெறிக்குள் நாம் நிற்பதால் இவற்றை அணுக விடாது ‘ஆதாரம் இரிக்கோ தெரியா’ என்று உள்ளூர ஒரு அச்சத்தை உருவாக்கி நம்மை மாற்றத்தை விட்டும் தடுக்கிறது.

***றிழா:*** இதே நிலை இன்னும் ஒரு கால் நூற்றாண்டுக்குத் தொடருமாக இருந்தால் இலங்கையில் முஸ்லிம் சமூகமொன்று வாழ்கிறது என்பதை தெரிவிப்பது இயலாத காரியமாகிவிடும்.

***ஏபிஎம். இத்ரீஸ்:*** இப்போது இருந்தே நாங்கள் இதைத் திட்டமிடுவோமாக இருந்தால் இன்னும் பத்துவருட கால

அளவில் நமக்கான ஒரு முஸ்லிம் அரங்கை உருவாக்கிக் காண்பிக்க முடியும். மொத்தமாக நாம் ஹராம் பத்வாவை வைத்துக்கொண்டே வாழ்வோமாக இருந்தால் தொழில்நுட்ப அறிவும் வராது. கலையும் வளராது. நாம் எதுவுமற்ற சக்கையாக மாறிவிடுவோம். எல்லா வழிகளிலும் நம்மை ஆக்கிரமித்துப் பிடித்துவிடுவார்கள். இதுதான் பிரபாகரனுக்கும் நடந்தது.

**ஏபிஎம். இர்பான்:** பிரபாகரனுக்குப் பின்னரான சிறுபான்மையினரின் சமூக, பண்பாட்டுச் சூழலை நாம் பார்த்தோமாக இருந்தால் அதுவும் அழிந்துபோன மாதிரியான ஒரு உணர்வே எனக்கிருக்கிறது. எனவே ஒரு சமூக அரசியல் போராட்டத்திற்குள் மக்களை செலுத்த வேண்டிய ஒரு பொறுப்பும் நமக்கிருக்கிறது.

**ஏபிஎம். இத்ரீஸ்:** சோனகத்தேசம் பற்றிய கட்டுரைகள் எனது தளத்தில் பதிவேற்றப்பட்டதற்குப் பிறகு தமிழ் சகோதரர்களாலும் அவை படிக்கப்படுகின்றன. மூன்றாம் சிறுபான்மை முன்வைக்கும் அரசியல் சிந்தனை என்பது சகஜீவனமாகவே இருக்க முடியும். முஸ்லிம்களின் பூர்வீகத்திற்குள்ளால் எல்லா சமூகத்திற்குமான சகஜீவனம் சாத்தியமாகிறது. இந்த விடயத்தை நான் பள்ளியில் குத்பாவாகச் செய்திருந்தால் அவை நமது சமூகத்திற்குள் மட்டும் சூழலும் ஒன்றாக மாறியிருக்கும். காரணம் பள்ளி ஒன்றுக்குள் குத்பா கேட்க அவர்கள் வரமாட்டார்கள். நோன்பு பிடிக்க வரமாட்டார்கள். ஆனால் உங்களிடம் ஒரு தியட்டர் இருந்தால் அவர்களுக்கும் அந்த செய்தியை பரிமாறமுடியும்.

**ஏபிஎம். இர்பான்:** உலக சினிமாவில் இன்று ஈரானுக்கு இருக்கும் இடமும் இதுதான். சினிமா, நாடகம், புகைப்படம், ஓவியம், கட்டடக்கலை என்று முஸ்லிம் சமூகத்தின் கலாச்சார முகமாக ஈரான் இருக்கிறது. மற்ற சமூகத்தவர் விரும்பிச்செல்லும் கவர்ச்சிகரமான ஒன்றாக ஈரானிய கலை தொழில்நுட்பம் திகழ்கிறது.

**ஏபிஎம். இத்ரீஸ்:** இன்று ஆரிபீன் ஷேய்க் எங்களுக்குக் காட்டிய இரண்டாம் உலகமகா யுத்தத்தில் கொல்லப்பட்ட முஸ்லிம்களின் கல்லறையை கண்டபொழுது பிரிட்டிஸாருடன் ஒரு நல்ல மனப்பதிவு எங்களுக்குள் வந்தது. அதை ஒரு புகைப்படம் எடுத்து எங்களது நினைவுகளில் வைத்திருக்குமளவுக்கு எங்களது மனதை அவர்கள் வென்றுவிட்டார்களா, இல்லையா? முதலில் அடுத்தவர்களின் மனதை வெற்றிபெறுவோம்.

பெண்கள் நடிக்க முடியுமா இல்லையா என்பதில் உங்களுக்கும் எனக்கும் உடன்பாடு காணமுடியாவிட்டால் இலகுவான வழிமுறை ஒன்றை அணுகுவோம். மாறாக அரங்கை முற்றாக நிராகரிப்பதென்பது இன்னும் நம்மை பின்னோக்கித்தள்ளும். ஒரு சமூகத்தில் புத்தாக்க சிந்தனையுடையவர்கள் மிகக்குறைவாகவே இருப்பார்கள். அவர்களுக்குள் ஒரு சோர்வு நிலை உருவாகக்கூடாது. அவர்கள் தொடர்ந்து இயங்கவேண்டும். எல்லாக்காலத்திலும் பின்பற்றுபவர்கள் இருப்பார்கள். அவர்கள் அதனை விரிவுபடுத்திக் கொண்டு செல்வார்கள்.

பாரம்பரியமான இயக்க முறைக்குள் இருந்து இயங்குவதைவிட்டும் நாம் கடந்து சென்றுவிட்டோம். தலைவர், செயலாளர், பைஅத்செய்வது என்பதெல்லாம் இன்று செயலிழந்துவிட்டது. அப்படியான அமைப்பு முறைக்குள் இருப்பவர்களுடனும் நாம் கூட்டுச் சேர்ந்து இயங்குவதில் எங்களுக்கு எந்த வரையறைகளும் இல்லை. எங்களால் இட்டு நிரப்பக்கூடிய ஏதாவது அவர்களிடம் இருந்தால் அதற்கும் நாம் தயாராகவே இருக்கிறோம். ஒரு ஸ்கிரிப்ட் தேவைப்படுகிறது என்றால், நடிப்புப் பயிற்சி தேவைப்பட்டால், குழந்தை வளர்ப்பு சம்பந்தமான ஒரு பட்டறை செய்ய வேண்டுமாக இருந்தால் நாம் அதனை செய்து தருவதற்குத் தயாராகவே இருக்கிறோம்.

**ஸஜீத்:** நான் யோசித்துக் கொண்டிருப்பது இன்றுள்ள தகவல் தொழில்நுட்பத்தால் இளம் சந்ததியினர் கடுமையாக பாதிக்கப்படுகின்றனர். அதை எப்படி நிமிர்த்தலாம்? நான் நினைக்கிறேன் பாடசாலை மட்டத்திலிருந்துதான் சமூகமாற்றத்துக்கான எந்த திட்டத்தையும் தொடங்கவேண்டும் என்று. அப்போதுதான் அது வினைத்திறனுடையதாக இருக்கும். அப்படி இல்லாமல் நாம் எந்த ஜாமிஆவுக்கு அனுப்பினாலும் அவர்களின் உளப்பாங்கு தற்காலிகமான ஒரு மாற்றத்தையே அடையும். பின்னர் அதிலிருந்து விடுபட்டு பழையமாதிரியே வந்துவிடுவர்.

**ஏபிஎம். இத்ரீஸ்:** உண்மை என்னவென்றால் நாம் இளம் தலைமுறையின் மனோபாவத்தை புரிந்துகொள்வதற்கு முற்படுவதில்லை. நமது யுகத்திற்கு பிள்ளையை நாம் உருவாக்க முடியாது. அலி (ரழி) அவர்கள் சொல்கிறார்கள் ‘குழந்தைகளை உங்கள் காலத்திற்கு உருவாக்காமல் குழந்தைகளின் காலத்திற்கேற்ப அவர்களை உருவாக்குங்கள்’ என்று. பிள்ளை என்னைப்போல் இல்லையே என்று யோசிக்காமல் பிள்ளையின் யுகத்திற்கு ஏற்றால் போல் பிள்ளை வாழவேண்டும் என்று யோசிக்க வேண்டும். பிள்ளையின் யுகம் எப்படிப்பட்டது என்றால் எல்லாத் தொழில்நுட்பங்களும் நிறைந்த யுகம். இதை நிராகரிக்க முடியுமா? மறுதலிக்க முடியுமா? என்றால் முடியாது. தொழில்நுட்ப அறிவு அதிகூடிய இன்றைய யுகத்தில், உங்களுடைய கையிலிருக்கும் மொபைல்போனை உங்களைவிட உங்களது குழந்தை மிகத்துல்லியமாக இயக்குமளவுக்கு நுட்பம் நிறைந்த பிள்ளையாக மாறிவருகின்றது. நீங்கள்கூட பத்துவருடங்களுக்கு முன்னர் நுட்பமான ஒருவராகத்தான் இருந்திருப்பீர்கள். ஆனால் இன்று உங்களையும் முந்திக்கொண்டு அவர்கள் முன்னிற்கிறார்கள். இந்தப் பிள்ளைகளை பயன்படுத்தி, இந்தப் பிள்ளைகளின் கையிலுள்ள பொருட்களைப் பயன்படுத்தி ஏன் ஆக்கபூர்வமான செயற்பாடுகளில் ஈடுபடக்கூடாது?. நாம்

என்ன செய்கிறோம் என்றால் பிள்ளை மௌசூராத்தை மட்டுமே மனனமிட வேண்டும் என்று எதிர்பார்க்கிறோம்.

ஸ்கைப் என்று வந்திருக்கிறது. பேஸ்புக் என்று வந்திருக்கிறது. இணையத்தில் எத்தனையோ வசதிகள் இருக்கின்றன. என்ன நினைக்கிறேன் என்றால் நான் பள்ளிகளில் நடாத்திய கிஷ்க் உடைய தர்பிய்யாகளை, கிஷ்க்கிடம் நான் பயிற்சிபெற்ற ஆளல்ல. கிஷ்குடைய தர்ப்பிய்யா முறைகளை கேள்விப்பட்டு அதை வாசித்து ஏற்கனவே ஹழறா முறையில் என்னிடமிருந்த பயிற்சியைப் பயன்படுத்தி இதுவும் வாப்பாவிடமிருந்தே கற்றுக் கொண்டேன். பேருவலை மன்சூர் ஆலிமிடம் வாப்பா பயிற்சி பெற்ற ஒருவர். இந்த கிஷ்க் தர்பிய்யாவை என்னுடைய வாசகர்கள், மாணவர்கள் அனைவருக்கும் இணையத்தளத்தில் இருந்து கொண்டே நேரடியாகச் செய்ய முடியும். அவர்கள் காதில் ஹெட்செட்டை மாட்டிக்கொண்டு வீட்டிலிருந்தே பங்குபெற முடியும். வீட்டிலுள்ளவர்களும் குழந்தைகளுடன் கேட்டுக்கொண்டிருப்பர். இது இன்றைய தொழில்நுட்பம் நமக்குத் தரும் வசதி. இதை ஏன் நாம் யோசிக்கக்கூடாது? இதற்குக்காரணம் மாற்றத்தை விரும்பும் மனநிலை நம்மிடமில்லாததுதான். 'இன்னல்லாஹ லாயுகையிரு மாபிகௌமி...' புனிதம் இல்லாமல் போய்விடும் என்று யோசிக்கிறோம்.

இம்முறை உலூமுல் குர்ஆன் பாடத்திற்கு புதிய வகுப்புக்குச் சென்றிருந்தேன். நாம் விரும்பியோ விரும்பாமலோ குர்ஆன் பிரதியை எரிக்கும் காலப்பிரிவு வரப்போகிறது என்றவுடன் மாணவர்கள் என்னை ஒரு மாதிரியாகப் பார்த்தனர். உண்மையில் குர்ஆனை ஓதிவிட்டு அதனை முத்தமிட்டு அலுமாரியில் வைக்கும் காலம் மாறி பல மொழிகளில் மொழிபெயர்ப்பு வசதிகளுடன் பல குரல்களில் கிராஅத் வசதிகளுடன் சொற்களை, பொருட்களை தேடும் வசதியுடன் வந்திருக்கும் டிஜிட்டல் குர்ஆனை பயன்படுத்தும் காலம் மிகத்தொலைவிலில்லை என்றபோதுதான் அவர்களின் முகம்

மலர்ந்தது. நான் கற்பிக்கும் உலூமுல் குர்ஆன் பாடம் மன்னாஉல் கத்தான் எழுதிய புத்தகத்தைத் தழுவியது. இதைத்தான் எனக்குக் படிப்பித்த ஆசிரியரும் படித்துத்தந்தார், நானும் படித்து இன்று எனது மாணவர்களுக்கும் படிப்பித்துக் கொண்டிருக்கிறேன். இந்த நாற்பது ஐம்பது வருடங்களில் உலூமுல் குர்ஆன் தொடர்பாக உலகளவில் வேறு எந்த புதிய புத்தகங்களும் வரவில்லையா? என்ன நிலையிது? நாம் எங்கு சென்று கொண்டிருக்கிறோம்? தொழில் ரீதியாக நான் எதிர்கொள்ளும் நிலை இதுதான். இதிலிருந்து விடுபட்டு ஏன் நாம் ஒரு ஜிப்ஸியாக வாழ்ந்துவிட்டு மரணிக்கக்கூடாது என்று தோன்றுகிறது. சல்லி, வாகனம், வீடு என்று வாழாமல் ஒரு நாடோடியாக கிடைப்பதை வைத்துக் கொண்டு வாழ்தல் திருப்தியளிக்குமல்லவா?

**றமீஸ்:** ஒழுக்கப்பிரச்சினை என்பது எல்லா பாடசாலைகளிலும் ஒரு தலையிடியாகவே இருக்கிறதே. புதிய புதிய ஒழுக்கக் கோவைகளை கொண்டு வந்தாலும் மாணவர்களை இது கட்டுப்படுத்துகிறது என்றும் சொல்லிவிட முடியாது. நீங்கள் இதனை எப்படிப் பார்க்கிறீர்கள்?

**ஏபிஎம். இத்ரீஸ்:** ஒழுங்கு ஒழுங்கின்மை, ஒழுக்கம் ஒழுக்கமின்மை எல்லாமே சார்பியம்தான். தீண்டு தீண்டாமை என்பதுகூட சார்பியம்தான். இவை ஒன்றோடொன்று தொடர்புடையதும் கூட. தனிப்பட்ட முறையில் மண் சுத்தமானது. தனிபட்ட முறையில் ஆடை சுத்தமானது. ஆடையில் மண் படும்போது அழுக்காகிவிட்டது என்று நாம் கட்டமைக்கிறோம். இவற்றை இணைத்து சார்புநிலைக்கு வருகிறோம். எனவே அறம் அறமின்மை, ஹராம் ஹலால் எல்லாமே சார்பியம்தான். உதாரணமாகப் பாருங்கள் ரஸுலுல்லாஹ் வீட்டுக்கு வருகிறார்கள். ஆயிஷா நாயகி கேட்கிறார் 'என்ன உங்களது வாயில் துர்வாடை வீசுகிறது' என்று. அதற்கு ரஸுலுல்லாஹ் 'இல்லையே! நான் ஹப்ஸாவின் வீட்டில் தேன் தானே சாப்பிட்டேன்'

என்கிறார்கள். 'தேன் மாதிரி விளங்கவில்லையே. ஏதோ துர்வாடைதானே வீசுகிறது' என்றவுடன் 'இதற்குப் பிறகு நான் தேன் சாப்பிடவே மாட்டேன்' என்று முடிவெடுக்கிறார்கள். உடனே சூரத்துத் தஹ்ரீமில் அல்லாஹ் இவ்வாறு இறக்குகிறான், 'நபியே! அல்லாஹ் ஹலாலாக்கியதை நீர் ஏன் ஹராமாக்குகிறாய். உன்னுடைய மனைவிமாரின் திருப்தியைப் பெறவேண்டும் என்பதற்காக அல்லாஹ் ஹலாலாக்கியதை நீ எப்படி ஹராமாக்குவாய்' இது இந்த ஆயத்துக்குப் பின்னால் இருக்கும் ஒரு காரணம் மட்டுமே. இந்த வரலாற்றுச் சம்பவத்தை அல்லாஹ் ஒரு காரணமாக்கியிருக்கிறான். தேன் அடிப்படையில் ஹலாலானது. நபி உடனே அதனை ஹராமாக மாற்றுகிறார். அது சாத்தியமும் கூட.

எனவே இங்கு அறம் என்பது அதிகார வர்க்கத்திற்கு சார்பானதெல்லாம் அறமாகவும் ஹலாலாகவும் அதிகார வர்க்கத்திற்கு எதெல்லாம் விரோதமோ அதெல்லாம் அறமின்மையாகவும் ஹராமாகவும் மாறுகிறது. எனவே நாம் முன்னையோர் கற்பித்த ஹராம் ஹலால் என்பதை மீண்டும் ஒரு மறுவாசிப்புச் செய்ய வேண்டாமா? ஒழுக்கம் ஒழுக்கமின்மை, உண்மை பொய் இவற்றை மறுவாசிப்புச் செய்யவேண்டிய தருணம் இதுதான்.

**ஸஜீத்:** சரியான எதிர்ப்பைச் சம்பாதிக்கும் ஒன்றாக இது மாறுமே.

**ஏபிஎம். இத்ரீஸ்:** பிஜே வழியில் இதைச் செய்ய வேண்டும் என்று சொல்லவில்லை. நாம் இங்கு உரையாடும் எல்லா விடயங்களையும் தொகுத்துப் பார்க்கும் போது உங்களுக்குள் ஒரு தீவிர மனநிலை தோன்றுகிறது. நாம் பிறரை சிந்திக்க அனுமதிப்பதில்லை. 'நீ கெட்டுப் போவாய். குர்ஆனை ஆராய்ச்சி செய்தால் தக்வா போய்விடும். ஈமான் போய்விடும்' என்று தடைகளை உருவாக்கிக் கொடுக்கிறோம். சில அடிக்கட்டுமான விடயங்களை மாத்திரம் நாம்

வைத்திருக்கிறோம். எது என்றால் தொழுகை, நோன்பு, ஸகாத், ஹஜ் இவையே அடிக்கட்டுமான வாசிப்பு. பன்னிரண்டு மாதங்களுக்கும் குத்பா ஓதுவதற்கு தலைப்புகள் வைத்திருக்கிறோம். அதில் புதிய ஒரு தலைப்பு, புதிய ஒரு விடயத்தை சேர்ப்பதற்கு நாம் தயாரில்லை. எனவே அறிவு வளரமுடியாது. நோன்பு வந்தால் நோன்புதான். ஹஜ் வந்தால் ஹஜ்தான். அடிக்கட்டுமானமாக நாம் வைத்திருப்பதை தகர்க்காத வரைக்கும், இவற்றில் சிலதை உடைக்க வேண்டி வரும், சிலதை ஒழுங்கவிழ்த்துப் பார்த்துவிட்டு எங்கு அதிகாரம் இருக்கிறது என்பதை கண்டுபிடித்துவிட்டு மீண்டும் சரியாக கட்டவேண்டியிருக்கும்.

உதாரணத்திற்கு வகுப்பறையில் கதிரை பிரச்சினையாக இருந்தால் எல்லாக் கதிரைகளையும் எடுத்து வட்டமாக வைத்து அமர்ந்து கொண்டு எல்லோரையும் பேசவிடுங்கள். இதில் பிள்ளைகளுக்குள்ளே ஒரு உடைப்பை உருவாக்குகிறோம். இப்படித்தான் வகுப்பறை இருக்க வேண்டும் என்று நீண்டகாலமாக நாம் உருவாக்கி வைத்திருக்கும் கட்டமைப்பை இங்கு நாம் உடைக்கிறோம். இந்தப் பிள்ளையும் அந்தக் கதிரைக்கு வரும் பொழுது என்ன செய்யும் என்றால் மீண்டும் ஒரு அதிகார முறையிலான கற்பித்தலையே உருவாக்குகிறான். ஹல்காவாக மாற்றிவிட்டால் அங்கு யார் தலைவர்? யார் செயலாளர் என்ற கேள்வி இருக்காது. எல்லோரும் சமமாக பேசுவார்கள். பயப்படாமல் மனக் கருத்துகளை வெளியிடுவார்கள். நாம் தலைப்பொன்றை கொடுத்துவிட்டு உட்கார்ந்து கொண்டு இருக்க வேண்டியதுதான். 'சூழல் ஏன் மாசடைகிறது?' என்று ஒரு மணிநேரமும் நீங்களே பயான் பண்ணி நோட்ஸையும் கொடுத்து அதை அவர்கள் முக்கிமுக்கி பாடமாக்கி பரீட்சை எழுதுவதை விட்டுவிட்டு சூழலை மாசடைய வைக்கும் காரணிகள் என்ன? என்று அவர்களிடமே கேட்டால் ஒருவர் 'என்னுடைய உம்மாதான் காரணம்' என்பார். மற்றொருவர் 'பக்கத்திலிருக்கும் மோல்' என்பார். இதை எல்லாவற்றையும்

எழுதுவோம். எல்லாக் கருத்துகளையும் எழுதிவந்தால் நாற்பது கருத்தோடு நம்முடைய கருத்து நாற்பத்தி ஓராவது கருத்தாக இருக்கும். இவை எல்லாம் சேர்ந்துதான் நோட்ஸ்.

இனிமேல் அவர்கள் உங்களுடன்தான் நிற்பார்கள். ஒருவர் வந்து 'சேர் எனக்கும் வாப்பாவுக்கும் பிரச்சினை' என்று உங்களைத்தான் நெருக்கமானவர்களாக ஆக்குவார்கள். உங்களுக்குள்ளால்தான் அவர்களுடைய பிரச்சினைகளை அணுகுவார்கள். இது அல்லாமல் வா, வந்து பைஅத் செய், எனக்குக் கட்டுப்படு, என்னை அமீராக ஏற்றுக் கொள் என்றால் அது இடைவெளியையே தோற்றுவிக்கும். நெருக்கமாக செல்லும் பொழுது நீங்கள்தான் அவர்களுக்கு அமீராக இருப்பீர்கள். அவர்கள் தமது சொந்த பிரச்சினைகளை உங்களிடம்தான் கேட்டுவருவார்கள். அவர்களுடைய ஆன்மீக, லௌகீக வாழ்கைக்குரியவற்றிற்கு நீங்கள்தான் கவுன்ஸலராக மாறுவீர்கள். நீங்கள் வழிகாட்டியாக மாறுவதால் நீங்கள் அங்கு அமீராக இருப்பீர்கள். இங்கு அலுவலகம் ஒன்றை யோசிக்க வேண்டியதில்லை. பாதையொன்றில் நின்று கொண்டு நாம் பேசுவதும் அலுவலகம்தான். அலுவலகம் ஒன்று வந்தவுடன் அங்கு அதிகாரப்படிகளும் உருவாகும். எனவே அதில் நமக்குரிய இடத்தை பாதுகாத்துக் கொள்வதற்கான தேவையும் உருவாகிறது. ஒரு கதிரை எப்போது காலியாகும் என்று மற்றவர்களை எதிர்பார்க்க வைக்கும். எனவே எல்லாவற்றையும் நாம் அலுவலகமாகவே நினைத்துக் கொள்வோம். எல்லாவற்றுக்குள்ளும் அதிகாரம் புகுந்து ஒன்றையும் இயங்கவிடாமல் மாற்றிவிட்டது. பெரிய கடப்பாறைகளைக் கொண்டு இந்த அதிகார கட்டமைப்பை உடைத்தெறிய வேண்டும். நாம் அமைப்பியலுக்குள்ளே நின்று சிந்திக்க பழகியதால் இதை உடைத்துவிட்டால் எங்கு போய் முடியுமோ என்றொரு பேரச்சம் எங்களுக்குள் இருக்கிறது. அதற்குப் பயப்படத்தேவையில்லை.

இது தகவல் யுகம். கணனியும் கைபேசியும் தகவல்களைத்

தருகின்றன. ஆனால் அவை நமக்காகச் சிந்திக்க மாட்டாது. கேள்விகளுக்குரிய விடைகளை ஹிப்ழ் பண்ணவேண்டிய ஒரு காலம் இருந்தது. இப்போது அது தேவையில்லை. இன்று வாய்த்திருப்பது மாதிரி பெரிய பதிவு வசதிகள் இல்லாததால்தான் இஸ்லாத்தின் ஆரம்ப யுகத்தில் ஹிப்ழுக்கு முக்கியத்துவம் கொடுக்கப்பட்டது. இன்று உலகத்தில் அனைத்துத் தகவல்களும் விரல் நுணியில் கிடைக்கின்றன. அந்தத் தகவல்களை வைத்து அடுத்தகட்டமாக என்ன செய்ய வேண்டும் என்பதுதான் இன்றைய சவாலாகும். இந்த தகவல் களஞ்சியம் இப்னு சீனாவின் கையிலோ, இப்னு பிர்னாஸின் கையிலோ அல்லது இப்னு நபீஸின் கையிலோ கிடைத்திருந்தால் அவர்கள் எத்தனை தூரம் மனித அறிவை எடுத்துப் போயிருப்பார்கள்! இனிவரும் காலத்தில் தகவல்களை வைத்து கேள்விகளை உருவாக்குவது எப்படி என்பதை மாணவர்களுக்குப் போதிக்க வேண்டும். உலகத்தின் முதல் மனிதர்கள் பேசிய மொழி என்ன? சூரியன் கிழக்கில் உதிக்காமல் மேற்கில் உதிக்கும் சாத்தியம் உண்டா? பூமி இப்படியே வெப்பமடைந்து கொண்டு கொண்டு போனால் மனிதர்கள் வாழ்வதற்கு பொருத்தமான வேறு கிரகம் எது? அல்லது மனிதன் நிலத்தில் வாழாமல் சமுத்திரத்தில் மீன்களைப் போல் வாழ முடியுமா? பூமியில் எண்ணை வளமோ நீர்வளமோ முடிந்து போனால் என்ன செய்வது? கண்ணிமைப்பதற்குள் பல்கீஸ் ராணியின் சிம்மாசனம் எப்படி சுலைமானின் அரண்மனைக்கு கொண்டு செல்லப்பட்டது? உலகில் எங்கோ மூலையில் இருக்கும் ஒரு பொருளை நாம் தொலைக்காட்சியூடாகப் பார்க்கிறோம். அவ்வாறு காணும் பொருள் கண்ணெதிரே வருமா?

தகவல்களால் மூளையை நிறைப்பதை விட்டுவிட்டு அவற்றை வைத்து புதுப்புதுச் சிந்தனைகளை உருவாக்கவும் நமது இன்றைய பிரச்சினைகளுக்கு தீர்வுகளைப் பெறவும் பயன்படுத்துவது அவசியமாகும். இதற்கு நமது அகீதாவிலும் பண்பாடுகளிலும் விடைகாணப்படாமல் இருக்கும்

அம்சங்களையும் இன்றைய விஞ்ஞான தகவல்களை வைத்து கண்டுபிடிப்புக்களை செய்வதற்கு மாணவர்களை ஊக்குவிக்கலாம்.

மாற்றுக் கல்வி, மாற்றுப் பாடசாலை என்றவுடன் நமது கல்வியலாளர்கள் என்ன நினைக்கிறார்கள் என்றால் நாம் எல்லா கட்டடங்களையும் இடித்துவிட்டு பிள்ளைகளை மரத்திற்குக்கீழ் வைத்துப் கற்பிக்கப் போகிறோம் என்று நினைக்கிறார்கள். அப்படியல்ல அது. அங்கிருக்கும் ஒழுங்குகள், இறுக்கம், தெரிவுக்கு இடமில்லாத, இன்னொரு கருத்தைப் பேச இடமில்லாததைத்தான் கேள்விக்குள்ளாக்குகிறோம். அறிவு எப்படி உற்பத்தியாகிறது? கருத்தை பரிமாற்றம் செய்யும் போதுதான் அறிவு உற்பத்தியாகும். உரையாடல் இல்லாமல் எப்படி அறிவு உற்பத்தியாகும்! நீங்களும் பேசவேண்டும் நானும் பேசவேண்டும் அப்போதுதான் அறிவு வளரும். இது நான் மட்டுமே பேசிக்கொண்டிருக்க மற்றுள்ள காதுகள் கேட்டுக் கொண்டிருப்பதாக இருந்தால் அறிவு வளர வாய்ப்பிருக்காது.

**ஏபிஎம். இர்பான்:** எனது வகுப்பில் காடுகளைப் பற்றிய விவாதமொன்றை பிள்ளைகள் செய்தனர். காடுகளால் தீங்கு என்ற விடயமே கூடுதலாக பேசப்பட்டது. காடுகள் தேவை என்று தானே நாம் வலியுறுத்தி வருகிறோம். அப்படி இருக்கும் போது ஏன் தேவையில்லை என்ற முடிவுக்கு வருகிறார்கள் என்றால் 'கொடிய மிருகங்கள்' வாழ்வதால் காடுகள் தேவையில்லை பயமூட்டுபவை என்கிறார்கள். நாம் கற்பிப்பதற்கு மாற்றமாகவும் அவர்களின் சிந்தனை இருக்கிறது.

**ஏபிஎம். இத்ரீஸ்:** சூழலியல் பற்றிய கருத்தை கொண்டு போகும்போதும் அதற்கு எதிர்க்கருத்து இருப்பதை இங்கு பார்க்கலாம். காட்டை அழிக்கக்கூடாது என்று சொல்லும் போது கூட அதற்கு மாற்றுக் கருத்துள்ள பிள்ளைகள் இருக்கிறார்கள். எனவே எந்தவிடயத்தையும்

உரையாடலுக்குள் கொண்டுவந்தால்தான் அவர்களின் கருத்துக்களை பொதுத்தளத்தில் வைப்பார்கள். எனவே இந்தக் கருத்துக்கு நமது பதிலென்ன? 'நாம் காடுகளை அழித்து கொங்கிரீட் காடுகளை உருவாக்கிக் கொண்டிருக்கிறோம். இதனால் மின்விசிறி இல்லாவிட்டால் உங்களால் இருக்க முடியாமலிருக்கிறதல்லவா! நாம் மரமொன்றிற்கு கீழ் இருந்தால் அல்லது காடொன்றின் நடுவிலிருந்தால் வேர்க்குமா? நல்ல குளிர்ச்சியாக இருக்கும். மழைபெய்யும். சுனாமி ஏன் வருகிறது? ஏன் வெள்ளப் பெருக்கு ஏற்படுகிறது? ஏன் வரட்சி ஏற்படுகிறது? காடுகளை அழிப்பதால்' என்று பிள்ளைகளை உரையாட விட்டால்தான் கருத்தை கட்டியெழுப்ப முடியும். புரிதலில்தான் உறவு வளர்கிறது. அவர்கள் நம்மையும் நாம் அவர்களையும் புரிந்து கொள்ளும் புள்ளியிலேயே இடைவெளி அழிக்கப்பட்டு உறவாட முடிகிறது.

எனவே நமது கருத்திலேயே நிற்காமல் மற்றவர்களது கருத்தையும் உட்கொண்டே பொதுக்கருத்தை நிரப்ப வேண்டும். உலகில் பன்மைத்துவம் இருக்கிறது. இஸ்லாம் பன்மைத்துவமான மதம். எல்லாவகையான மக்களையும் அரவணைத்துகொண்டு செல்லக்கூடிய தன்மை இஸ்லாத்திற்கு இருக்கிறது என்பதை உணர்ந்திருந்தால் காத்தான்குடி ரஊப் மௌலவியோடு கூட நமக்கு உரையாடியிருக்க முடியும். அவரை நல்லதொரு தத்துவவாதியாகவோ சமூக விஞ்ஞானியாகவோ மாற்றியிருக்க முடியும். நமக்குத் தேவையான ஒரு ஆராய்ச்சியை, இலங்கை முஸ்லிம்களின் பூர்வீகத்தை அவரைக் கொண்டே செய்திருக்க முடியும். இது என்ன நடந்தது என்றால் மதம் சார்ந்த ஒரு விடயத்தை அங்கிருந்த ஹஸரத் மார்களும் அரசியலில் நின்றவர்களும் சேர்ந்து இவரை இன்னொரு அரசியலுக்குள் தள்ளி இந்த விடயத்தை அரசியலாக்கியதுதான் அங்கு நடந்ததே தவிர சினேகபூர்வமான, புலமைசார்ந்த ஒரு உரையாடல் நடைபெறவில்லை.

**ஸஜீத்:** எமது பாடசாலைகளிலுள்ள ஒழுக்கப்பிரச்சினைகளில் பொதுவாக நாம் இனங்காணுவது காதல் உறவுகள்தான். டீனேஜ் பருவத்தின் தேவை, இறுக்கமான சமூகக்கட்டமைப்பு இவற்றுக்கிடையில் காதலை எப்படிப் பார்க்கிறீர்கள்?

**ஏபிஎம். இத்ரீஸ்:** நீங்கள் காதலை எப்படிப் பார்க்கிறீர்கள் என்பதிலிருந்துதான் இந்த உரையாடலைத் தொடங்க வேண்டும். காதலை ஏன் கல்வியாக பார்க்க முடியாது?

**ஸஜீத்:** காதல் தேவையான விடயம்தான். ஆனால் அதை கல்வியாகப் பார்க்குமளவிற்கு சமூகம் இல்லை.

**ஏபிஎம். இத்ரீஸ்:** சமூகம் காதலை அனுமதிக்கும் ஒரு பத்வாவை கொடுக்க வேண்டும் என்று நான் சொல்லவில்லை. எல்லோரும் சாப்பிடுவது ஒரு பிளேட் அளவுதானா? இல்லை. சிலர் இரண்டு பிளேட் சாப்பிடுவர். வேறுசிலருக்கு நான்கு பிளேட் தேவைப்படும். இஸ்லாத்தைப் பாருங்கள் நான்கு காலியாணமும் இருக்கிறதே. எனவே ஒருவரது தேவைதான் அதனைத் தீர்மானிக்கிறது. நம்முடைய மூத்தப்பா, வாப்பாட வாப்பாவைப் பார்த்தோம் என்றால் சமூகம் விரும்பியதோ இல்லையோ அவர்களின் தேவை நிறைவேற்றப்பட்டது.

**ஸஜீத்:** ஆனால் இன்று முழுதாகவே சமூகம் ஏற்றுக்கொள்ளுமளவில் இல்லை அல்லவா.

**ஏபிஎம். இத்ரீஸ்:** நீங்கள் சமூகம் என்ற ஒன்றைக் கட்டமைக்கிறீர்கள். அதனால்தான் ஏற்றுக்கொள்வது என்பது ஒரு விடயமாக மாறுகிறது.

**ஸஜீத்:** இல்லை. எனது தனிப்பட்ட ஒரு அனுபவத்தைச் சொல்கிறேன். குழந்தைகள் இல்லாத ஒரு சகோதரருக்கு இரண்டாவது ஒரு திருமணத்தை நடாத்திக் கொடுத்தோம். பிழையான ஒரு வழியில் செல்லக்கூடாது என்பதற்காக சரியான

ஒரு ஒழுங்கை சமூகத்தின் பல எதிர்ப்புகளுக்கு மத்தியில் மௌனமான ஒரு அங்கீகாரத்திற்குள் நின்று கொண்டு இதனைச் செய்தோம். இருந்தும் அவருக்கு பிரச்சினைகள்தான் அதிகரித்தது. ஏன் இதனைச் செய்தோம் எனும் அளவிற்கு குடும்பத்திலிருந்தும் பல எதிர்ப்புகள் வந்தன. அந்த அடிப்படையிலேயே இதனைச் சொல்கிறேன்.

***ஏபிஎம். இத்ரீஸ்:*** சமூக அங்கீகாரம் என்பதில் எந்தக்காலமும் ஒரு தனிமனிதனால் தங்கியிருக்க முடியாது. இங்கு அவருக்கு ஒரு குழந்தை தேவையாக இருக்கிறது. மற்றவர்களுக்காக வாழுதல் என்பது நமக்கான இருப்பை இழத்தலில்தான் தங்கியிருக்கிறது. அப்படி என்றால் நம்முடைய சுயத்தை இழந்துவிட்டு மௌத்தாகிறோம். திரும்பவும் இந்த உலகத்திற்கு வரப்போகிறோமா? என்றால் இல்லை. கிடைத்திருக்கும் இந்த வாழ்க்கையை சந்தோசமாக, மகிழ்ச்சியாக, இறைவனுக்குப் பொருத்தமான வழியில் வாழ்ந்துவிட்டுப் போவதுதான் சரியானது. அவன் அப்படி நினைப்பான் இவன் இப்படி நினைப்பான் என்று நாம் நினைத்து நினைத்தே வேகி வெந்து அழிய வேண்டுமா? அவருடைய தீர்மானம் சரியானது. அதனால் இங்கு அவர் சமூக பொதுப்புத்தியை உடைத்திருக்கிறார். அவர் மட்டுமல்ல இந்த யுகத்தில் ஹஜ்ஜுல் அக்பரும் உடைத்திருக்கிறார்.

***ஸஜீத்:*** பொதுவாகவே ஒரு மனைவிக்குமேல் இருக்கும் பொழுது அவர்களுக்கிடையில் முன்னுரிமை என்ற அடிப்படையில் ஒரு சமத்துவமின்மை இருக்கிறது. இந்த இரண்டு பேரில் இரண்டாவது முடித்த மனைவிக்கு கூடுதல் முன்னுரிமை கொடுக்கப்படுவதை காணலாம். இங்கு எப்படி சமநிலையை பேணுவது?

***ஏபிஎம். இத்ரீஸ்:*** நாம் நம்முடைய ஆண்களையும் பெண்களையும் சரியான முறையில் குடும்ப வாழ்க்கைக்கு தயார்படுத்தி இருக்கிறோமா? அவர்கள் மனப்பாங்கு ரீதியாக

சமநிலையில் இருக்கிறார்களா? என்றால் இல்லை என்றுதான் கூற வேண்டும். ஆண்களுக்கு இருக்கும் மனப்பாங்கு பெண்களுக்கும் கொடுக்கப்பட்டு வளர்க்கப்படுவதில்லை. வீட்டுச் சூழலிலேயே அவர்கள் வளர்க்கப்படுவதால் இதனை மேம்படுத்துவதில் தடைகள் இருக்கின்றன. இங்கு முதல் மனைவியின் மனப்பாங்கை மாற்றுவதே பல பிச்சினைகளுக்கு தீர்வாக அமைய முடியும். ஹஜ்ஜுல் அக்பரின் வரலாற்றைச் சொல்வதாக இருந்தால், ஒழுக்காற்று நடவடிக்கையால் தண்டிக்கப்பட்ட ஒரு இஸ்லாஹிய்யா மாணவனின் தாய் தனது பிள்ளைகளின் எதிர்காலத்திற்காக மீண்டும் தனது மகனை இணைத்துக் கொள்ளுமாறு இஸ்லாஹிய்யா, ஜமாஅத் நிர்வாகங்களை அணுகி அது சரிவராமல் போகவும் ஹஜ்ஜுல் அக்பரின் மனைவியூடாக இதனைக் கொண்டு செல்கிறார். இவர் விதவை என்பதாலும் குழந்தைகளின் விடயத்தில் மிகுந்த அக்கறை கொண்டிருந்ததாலும் இந்தவிடயம் நீண்டதொரு உரையாடலுக்குப் பிறகு இவர்களுக்கிடையில் ஒரு புரிந்துணர்வை வளர்க்கிறது. இறுதியில் ஹஜ்ஜுல் அக்பர் இவரைத் திருமணம் செய்து கொள்ளும் நிலைக்கு வருகிறது. முந்திய மனைவியை சுற்றியிருக்கும் பெண்கள் இதனைப் பற்றி கேள்வி கேட்கும் போது அதற்கு அவர் ''நான் தான் இந்த திருமணத்தையே ஏற்பாடு செய்தேன்'' என்று பதிலளிக்கிறார். நான் ஒருமுறை இஸ்லாமிய புத்தக நிலையத்திற்குச் செல்கிறேன், அதன் முகப்பில் குழந்தைகள், பெண்கள் நிறைந்த வேன் ஒன்று நின்றுகொண்டிருக்கிறது. அதன் முன்சீட் மட்டும் காலியாக இருக்கிறது. யாரும் குடும்பத்தோடு புத்தகங்கள் வாங்குவதற்கு வந்திருக்கிறார்கள் என்று நினைத்துக் கொண்டிருக்கும் பொழுது ஹஜ்ஜுல் அக்பர் அதில் ஏறிச்செல்வதை காண்கிறேன். மாவனல்லைக்குப் போவதற்காக இந்த இரண்டு குடும்பங்களும் ஒரு வாகனத்தில் பிள்ளை குட்டி என்று பத்துப் பதினைந்து பேர் இருக்கும், சந்தோசமாகச் செல்கிறார்கள்.

இங்கு சமூகம் என்ன நினைக்கும் என்பதில்தான் நீங்கள்

கூடுதல் கவனமெடுத்திருக்கிறீர்கள். சகோதரரின் அவசியத்தையும் தேவையையும் நீங்கள் புரிந்திருந்தால் முதலில் பொருத்தமான சூழ்நிலையை நீங்களே உருவாக்கிக் கொடுத்திருப்பீர்கள். அதனால் அவவாகவே அந்த திருமணத்தை நடாத்திவைக்கும் சந்தர்ப்பம் உருவாகியிருக்கும். அது நீங்கள் விட்ட தவறு. உங்களது பார்வை குவிக்கப்பட்ட இடம் 'சமூகம்' என்பதால்தான் இவ்வாறு நிகழ்ந்தது. எல்லாத் தரப்பு உரையாடலுக்கும் நீங்கள் சந்தர்ப்பத்தை ஏற்படுத்திக் கொடுக்கவில்லை. நீங்கள் சொன்ன தகவலை வைத்துத்தான் நான் இதைப் பேசுகிறேன். உரையாடல் மூலம் எப்படி இன்னொரு இடத்தில் நடந்த ஒருவிடயம் வெற்றிகரமாக கையாளப்படுகிறது என்று சொல்கிறேன்.

**ஸஜீத்:** என்னுடைய மௌனமான அங்கிகாரம் அங்கு இருந்தது.

**ஏபிஎம். இத்ரீஸ்:** ஆனால் அனைவருடைய மௌனத்தையும் கலைத்து நீங்கள் உரத்துப் பேசவில்லை. எப்போதும் நாம் பேசுவது எல்லாவற்றையும் மாற்றியமைக்கும். உறைந்துகிடக்கும் அந்த அணுத்துகள்களை தள்ளும். தள்ளிச் சென்று ஏற்கனவே இருக்கும் ஒழுங்குகளை மாற்றும் காந்த விசைதான் அது. நீங்கள் உங்களது தம்பியோடு பேசியிருந்தால் தம்பி உம்மாவோடு பேசியிருப்பார். உம்மா வாப்பாவோடு பேசியிருப்பார். இப்படி இது வளர்ந்து சென்று கலியாணம் நடப்பதற்கு முன்னரே முந்திய மனைவிக்கு ஒரு மனத்தயாரிப்பைக் கொடுத்திருக்கலாம். நீங்கள் மனத்தயாரிப்பை அதிர்ச்சியாக கொடுத்திருக்கிறீர்கள். எனவே அதிலிருந்து அவர் விடுபடுவதற்கு நீண்ட காலம் தேவைப்படும்.

**றிழா:** இப்பகுதியில் போருக்குப் பின்னரான நிலையை எவ்வாறு அவதானிக்கிறீர்கள்?

**ஆரிபீன்:** சூறாவளி ஒன்று வந்து போனது போன்றுதான் மக்கள் உணர்கிறார்கள். பெரியதொரு முஸீபத்திலிருந்து விடுபட்டு சுதந்திரமாக திரிகிறோம் என்ற உணர்வு எல்லோருக்குள்ளும் இருக்கிறது. அதற்கு நியாயங்களும் இருக்கின்றன. இதற்கு முந்திய தலைமுறைதான் யுத்தத்தை கடந்து வந்திருக்கிறது. இங்கிருக்கும் புதிய தலைமுறைக்கு போராட்ட பின்புலம், வரலாறு ஒன்றும் தெரியாது. அதற்கேற்றாற் போல்தான் பெரும்பான்மைக் கலாச்சாரமும் இருக்கிறது. இசை நிகழ்ச்சி, களியாட்டம், வேடிக்கை, விளையாட்டு என்று புதிய தலைமுறையை ஜனரஞ்சக நிகழ்ச்சிகளால் வழிநடாத்திச் செல்கிறார்கள். இங்கு நடைபெறும் இசை நிகழ்ச்சிகளில் ஒரு தமிழ் பாடல் ஒலித்தால் மற்றது சிங்களப்பாடலாக இருக்கும். இப்படி எல்லாமே கலந்து ஒரு புதிய வடிவம் கொள்கிறது. இதனை பகைமறப்பாகவும் பார்க்கலாம். இருந்தும் இதற்குள்ளால் கடத்தப்படும் கருத்து என்பது ஒற்றைத் தன்மையுள்ள பெருந்தேசிய மேலாதிக்கம்தான்.

மற்றது யாழ்ப்பாணம், மட்டக்களப்பு போன்று இங்குள்ள தமிழர்கள் தமிழ் தேசிய அரசியலில் நின்று சிந்திப்பவர்களோ பாதிப்புச் செலுத்துபவர்களோ அல்ல. சமூக நிலையிலும் கீழ் படிநிலையை உடையவர்களே இங்கு செறிவாக வாழ்கிறார்கள். இவர்களும் போராட்டத்திற்குள் மேலோட்டமாக உள்ளிழுக்கப்பட்டவர்களே தவிர தீவிர மனநிலையிலிருந்து பங்குகொள்ளவில்லை. எனவே யுத்தம் முடிந்ததும் எல்லா இனங்களும் ஒன்றிணைவதில் சிரமமிருக்கவில்லை. இங்கு வந்து பார்த்தால் புரியும் போராட்டம் நடந்ததற்கான எந்த தடயமும் இங்கு கண்டுபிடிக்க முடியாது என்பது. அதேபோல மீண்டும் ஒரு போராட்டம் வருவதற்கு சிலவேளை நூற்றாண்டுகள் தேவைப்படலாம். மற்றைய பகுதிகள் எப்படியோ தெரியாது?

**ஏபிஎம். இத்ரீஸ்:** பொதுவாக இந்த நிலையை யுத்தம் நிகழ்ந்த எல்லாப் பிரதேசங்களிலும் காணமுடியும். மக்கள் இந்த

மனப்பாங்கிற்கே வந்திருக்கிறார்கள். சிங்களவர்களுடன் சேர்ந்து தொழில்துறை, வியாபாரம், மீன்பிடி, விவசாயம் என்ற எல்லா உறவுகளையும் புதுப்பித்துக் கொள்கிறார்கள். பண்டிகைகள், வைபவங்களில் இணைகிறார்கள். நாம் அண்மையிலும் முஸ்லிம் அரங்கை மேம்படுத்துவதற்கான செயலமர்வு ஒன்றில் பல பகுதிகளிலிருந்து வந்தவர்களை சந்தித்தோம். அதில் கலந்து கொண்ட யாருமே போரைப் பற்றியோ போரின் வடுக்களைப் பற்றியோ ஒரு வசனமும் அங்கு பேசவில்லை. எல்லோரும் யுத்தத்தால் பாதிக்கப்பட்ட பிரதேசங்களிலிருந்து வந்து கலந்து கொண்டவர்கள்தான். அப்படி இருந்தும் ஏன் போரைப் பற்றி வாய்திறக்கவில்லை. அது பெரியதொரு கேள்விக்குறிதான். இது என்னவென்றால் மக்கள் இந்தப் போரை 'சனியன் பிடித்தது எப்போது முடியும்' என்ற மனநிலையில்தான் இருந்திருக்கிறார்கள். இங்கு வந்த இரண்டொரு பேரைத் தவிர அவ்வளவு பேரும் அரசியல் பேசியவர்கள். அரங்கச் செயற்பாட்டில் ஈடுபாடு குறைந்தவர்கள். வாசிப்பு ஊடாகவே அரங்கு பற்றிய அறிவை வளர்த்துக் கொண்டவர்கள். இது நல்லதொரு அறிகுறியா என்றால் இல்லை என்றுதான் சொல்ல வேண்டும். போரைப் பற்றி அறவே உரையாடாமல் விட்டால் எதிர்கால ஒற்றைத்தேசம் என்பது சிங்களத்தேசமாகத்தானே உருப்பெறும்.

ஒரு சமூகம் தனது நிகழ்காலத்தை மட்டும் கருத்திற் கொண்டு செயற்படும் சூழ்நிலைகளும் இருக்கின்றன. நிகழ்கால அரசியல், பொருளாதாரம் சார்ந்தும் செயற்படும். அதேபோல குடியேற்றத்திட்டங்கள் போன்று வரும் சவால்களை முன்னரே அறிந்து அதன் எதிர்கால சந்ததியினரைக் கருத்திற்கொண்டும் செயற்படும். எதிர்கால காணிப்பகிர்வு, வளப்பகிர்வைக் கருத்திற் கொண்டு முன்கூட்டியே அதற்கான வெகுஜனப் போராட்டங்களை, அகிம்சா வழியிலான போராட்டங்களை நடாத்தி உரிமைகளைப் பெறும். இந்த வழிமுறைகளைக் கையாள்வதில் கூட ஒரு சமூகம் மௌனமாக இருக்கும்

பொழுது நாம்தான் அதனைக் கற்றுக் கொடுக்க வேண்டியிருக்கிறது. எங்காவது அதற்கான உரையாடல் தொடங்கப்படுமாக இருந்தால் பின்னர் அது வளர்ந்து சென்று ஒரு வடிவத்தை அடையும். இன்றிருக்கும் பெரிய அபாயம் நீங்கள் சொல்வது போல் இளந்தலைமுறையினர் என்ன நினைக்கிறார்கள் என்றால் 'எதற்கு இந்த தேவையில்லாத சண்டை, முன்னோர் பார்த்த வேலைகளால்தான் நமக்கு இவ்வளவு பிரச்சினையும் அழிவுகளும்' என்று நினைக்கிறார்கள்.

***றிழா:*** இல்மாவின் தொடக்கம் பற்றி எமக்குச் சொல்லுங்கள். அவற்றை கூடுதலாக அறிந்து கொண்டால் நாளைய எமது நிகழ்ச்சிகளுக்கு உதவியாக இருக்கும் என்று கருதுகிறேன்.

***ஆரிபீன்:*** இல்மாவின் கதை மிக நீண்டது. ஷேய்க் இத்ரீஸைப் போல நானும் அமைப்பாக்கப் பணிகளில் முழுமையாக என்னை ஈடுபடுத்திக் கொண்டவன். இதன்போது இலங்கையின் பல பாகங்களில், பல காலகட்டங்களில் வேலைசெய்யக் கிடைத்திருக்கிறது. எங்கு வேலை செய்யக் கிடைத்தாலும் எனக்கான ஒரு தனித்துவத்தை வகுத்துக் கொள்ள தவறுவதில்லை. இது பெரும்பாலும் என்னை வேறுபடுத்திக் காட்டுவதற்கும் வேறுபடுத்திப் பார்ப்பதற்கும் பயன்பட்டிருக்கிறது. சிலவேளைகளில் வித்தியாசமாக அடையாளப்படுத்தப்படுவதற்கும் இது காரணமாக இருந்திருக்கிறது. ஷேய்க் இத்ரீஸ் கூட இது போன்று சில முன்னெடுப்புக்களைச் செய்து அடையாளப்படுத்தப்பட்ட அனுபவங்களும் இருக்கின்றன. நான்கூட சில நேரங்களில் இவரது அணுகுமுறைகளைக் கண்டு விமர்சித்திருக்கிறேன். மிகச்சாதாரண நபர்களிடமும் பெரிய பெரிய விடயங்களை இவர் பரிமாறும் போது அதனை அவர்கள் எவ்வாறு எடுத்துக் கொள்கிறார்கள் என்பதில் எனக்குள் ஐயம் இருந்தது. ஸஜீத்திடம் கூட இது பற்றிச் சொல்லியிருக்கிறேன். அவருடைய சிந்தனை, அவர் எதை நோக்கிச் செல்கிறார்

என்பதில் எனக்குத் தெளிவு இருந்தது. இன்றும்கூட இப்பிராந்தியத்தின் ஜம்மியத்துல் உலமாவின் செயலாளருடன் கதைத்துக் கொண்டிருக்கும் போது இவரது பேச்சுதான் கூடுதாலக வந்தது. இவரது வாசிப்பு, இலக்கிய ஈடுபாடு, இவருக்கு நாங்கள் இட்ட பெயர் என்று எல்லாக் கதைகளையும் சொல்லிவந்து 'அ. மார்க்ஸை நானும் பார்க்கப் போனேன் அங்கு இத்ரீஸைக் காணவில்லை' என்று முடிக்க வேண்டியிருந்தது.

இவருடைய சிந்தனைகளை நான் ஆதரித்தாலும் அது மௌனமாகவே இருந்தது. அதில் இருக்கும் தார்மீகம் எனக்குத் தெரியவில்லை ஆனால் அளவுகடந்து மௌனமாகவும் இருந்ததில்லை. என்ன சொல்ல வருகிறேன் என்றால் மாற்றுச் சிந்தனை என்பதை பொதுவாக இவர் சொன்ன மாதிரி 'குய்யூத்' (தளைகள்) என்று அறபியில் சொல்வார்கள். விலங்குகளுக்குள்ளால் இருந்து கொண்டு அவற்றைப் பற்றி யோசிக்க முடியாது சற்று வெளியில் வந்தால்தான் அது சாத்தியமாகும். நிறைய இஹ்வான்களுடைய வரலாறு இருக்கிறது. அவர்கள் வெளியில் வந்து நிறையவே சாதித்திருக்கிறார்கள். சில தர்பிய்யாக்களும் தன்ழீம்களும் அவர்களுக்குள் இருந்தாலும் அவர்களுடைய தஃவா முன்னெடுப்புகள் பன்முகப்பட்டதாக இருந்திருக்கிறது. பன்மைத்துவ சிந்தனை கொண்டதாக அனைத்தையும் உள்வாங்கியதாகத்தான் இருந்தது. இவர்களைத் தேடிச்சென்று வாசித்தால் தெரியவரும். எனக்கும் ஆங்காங்கே இவர்களை வாசிக்கும் சந்தர்ப்பங்கள் கிடைத்தன.

இதிலிருந்துதான் எனது கருத்தை சரிகாணும் வாய்ப்பு உருவாகிறது. பிரதேசம் சார்ந்து, சமூகம் சார்ந்து, எந்த இடத்தில் எப்படித் தேவைப்படுகிறதோ அந்த தேவைகளுக்கேற்ப ஒழுங்குகளை மாற்றியமைத்துக் கொண்டும் இயங்க முடியும் என்பதை ஆழ்ந்து விளங்கிக் கொள்கிறேன். இதே சமயம் தேசியத்திடமும் சில முரண்பாடுகள் உருவானது. பொதுவாக

எனது செயற்பாடு பிராந்தியத்தை மையப்படுத்தியதாகவே இருந்தது. உதாரணத்திற்கு நமது பிரதேசத்திலுள்ள பிரச்சினைக்கு வெளியிலிருந்து தீர்வொன்றை நிர்ணயிப்பதை நான் விரும்பவில்லை. சூழ்நிலை சார்ந்து எங்களது பிரதேசம் சார்ந்து சிந்திப்பதற்கு இடமிருக்கிறது. ஆனால் இன்னும் நமக்குள் அது வளரவில்லை.

நாம் சில ஒழுங்குகளுக்குள் இருந்தாலும் சுதந்திரமாகவும் யோசிப்போம் என்று முடிவெடுத்தோம். அந்த விளைவுதான் சில வேலைகளை தடைகளுக்கு அப்பாலும் செய்வதற்கு முடிந்திருக்கிறது. பக்குவப்படாத நிலையில் இருந்து கொண்டு தங்களை அழித்துக் கொள்ளக் கூடாது அல்லது அந்த நிலையில் கருத்துக்களைப் பேசி தங்களை அணைத்துக் கொள்ளக் கூடாது என்பதிலும் கவனமாக இருந்திருக்கிறேன். றிழா வந்தாலும் உவைஸ் வந்தாலும் எங்களுடைய எல்லைகளையும் தாண்டி பேசியிருக்கிறோம். விடியும் வரை பேசிய அனுபவங்களும் இருக்கின்றன.

எங்களுக்கு மூதூர், சுனாமி அனர்த்தங்களுக்குப் பிறகு நிறைய அனுபவங்கள் கிடைத்தன. குறிப்பாக மூதூர் வெளியேற்றத்திற்குப் பின் பல வேலைத்திட்டங்களுடன் இணைந்திருந்தோம். இந்த காலப்பகுதி மிகுந்த மனநெகிழ்ச்சியான ஒரு காலப்பகுதியாகும். இதுவும் எமக்கு வலுசேர்த்தது என்றுதான் சொல்ல வேண்டும். எனவே வரையறைகளுடனும் முன்முடிவுகளுடனும் நின்று சிந்திப்பவர்களுடன் இருந்து விலகி சுதந்திரமாக சிந்திக்கும் தருணம் அங்கிருந்துதான் உருவாகிறது.

அதற்குப் பின்னரும் சில வேலைத்திட்டங்களில் இருந்திருக்கிறேன். குறிப்பாக 'மெல்லக் கற்கும் மாணவர்களுக்கான நிகழ்ச்சித்திட்டம்' ஒன்றை குருணாகல் பகுதியில் செய்தோம். இது எனக்கு நல்ல அனுபவத்தையும் ஆத்ம பலத்தையும் தந்தது. அந்தப் பகுதியில் நான் கண்டது

ஆண் சமூகத்தை கல்வி சார்ந்த நடவடிக்கைகளில் கைவிட்டுவிட்டு பெண்கள் மட்டும் கொஞ்சம் படித்தால் போதும் என்ற நிலை இருந்தது. பிள்ளைகளிடமும் முரண் நடத்தைகள் மிகைத்துக் காணப்பட்டன. மாஷா அல்லாஹ் இதனை வெற்றிகரமாக எங்களால் செய்ய முடிந்தது. எனவே இந்த அனுபவங்களைக் கொண்டு எமது பிரதேசத்திலும் வேலைசெய்ய வேண்டும் என்ற உந்துதல் உருவானது. மிகச்சாதாரண ஒழுங்குகளைக் கொண்டே ஆரம்பத்தில் மஜ்லிஸ் போல இயங்கினோம். வித்தியாசமான சிந்தனைகளை உள்வாங்கி எம்மை வளப்படுத்திக் கொண்டு இயங்க வேண்டும் என்பதுதான் எமது எதிர்பார்ப்பு. நாம் யாரையும் முழுமையாக ஒதுக்கிவைத்துவிட்டு இயங்கவுமில்லை. எல்லோரையும் இணைத்துக் கொண்டு செல்வதற்கான வேலைத்திட்டங்களையே முன்னெடுத்துக் கொண்டிருக்கிறோம்.

சமூகம் சார்ந்து யோசிக்கும் போது எல்லாப் பிரச்சினைகளுக்கும் அடிப்படையாக இருப்பது கல்விதான். கல்வி, பண்பாடு, கலாச்சாரம் சார்ந்த நடவடிக்கைகளிலே கூடுதல் கவனம் செலுத்துகிறோம். பாடசாலைகளை மையப்படுத்திய பல வேலைத்திட்டங்களை முன்னெடுத்துக் கொண்டிருக்கிறோம். திருகோணமலை நகரச்சூழல் என்பது பல்லினங்களும் வாழும் இடம் என்பதால் கலாச்சார ரீதியாக முஸ்லிம்கள் தங்களை காத்துக்கொள்ளும் தேவை இருக்கிறது. எங்களது கணிப்பின்படி இங்குள்ள முஸ்லிம் பெண்கள் அந்நியமத ஆண்களுடன் ஓடிப்போகும் சூழ்நிலைகள் அதிகரித்து வருகின்றன. இத்தனைக்கும் அவர்கள் படித்த, நல்ல குடும்பங்களிலிருந்துதான் வருகிறார்கள். அந்நிய பாடசாலைகளில் கல்வி கற்பதும் இதற்கு முக்கியமான காரணமாக இருக்கலாம்.

**றமீஸ்:** இந்த விடயம் நாம் ஏலவே பேசிய விடயத்துடன் தொடர்புபடுகிறது. கலப்பு பாடசாலைகளுக்கு உள்ளேயும்

வெளியேயும் இதற்கு சாத்தியம் இருக்கிறது. டியுஷன், கிளப் என்று பிள்ளைகள் சுற்றும் இடங்களிலிருந்தும் இவ்வாறு நடந்திருக்கிறது. இது எதுவுமல்லாத ஆட்டோ டிரைவருடன் பாடசாலைப் பிள்ளை ஓடிப்போன சம்பவங்களும் இருக்கின்றன.

**ஏபிஎம். இத்ரீஸ்:** இது ஒரு சமூகப் பிரச்சினைதான். ஆசிரியருக்கும் மாணவருக்கும் உள்ள உறவிலேயே இதனைப் பரிசீலிக்க முடியும். அவர் வைத்திருக்கும் தலைமைத்துவ பாத்திரம் என்பது வகுப்பறைக்கு வெளியிலும் பிள்ளைகளுக்குத் தேவைப்படுகிறது. எப்படி பிள்ளையின் உள்ளக, அந்தரங்க விடயங்களையும் ஆசிரியர் கையாளத் தகுதியுடையவராக இருக்கிறாரோ அதுவே பிரச்சினையைத் தீர்க்க உதவியாக இருக்கும். அவருடைய வழிகாட்டலிலேயே இப்படிப்பட்ட பிரச்சினைகளை பெற்றோர், சம்பந்தப்பட்டோரின் அனுமதியுடன் கவுன்ஸலிங் ஊடாக பரிசீலிக்க முடியும். ஒரு பொடியன் ஒரு பிள்ளையை விரும்புவது இயற்கையானது. தன்னுடைய வாழ்க்கைத் துணையைத் தெரிவு செய்யும் உரிமை இந்த இரண்டு பேருக்கும் இருக்கிறது. இதை நாம் காலங்கடத்தி, பிற்போட்டு, வேறு வேறு சம்பிரதாயங்களால் வீணடிக்கும் தன்மையை சமூகம் என்ற பெயரில், பண்பாடு என்ற பெயரில் வைத்துக் கொண்டிருக்கிறோம். வயதுக்கு வந்த பிள்ளைகளை வைத்துக் கொண்டு தங்கைக்கு முடித்துக் கொடுக்க வேண்டும், ராத்தாவுக்கு முடித்துக் கொடுக்க வேண்டும், நீ என்ன அவசரப்படுகிறாய் என்று ஆணை பொறுமைசாலியாக வைத்திருப்பது, இதே போல பெண்களின் விடயத்தில் வீடுகட்ட வேண்டும், பெரிய இடத்தில் பார்க்க வேண்டும் என்ற இழுபறியும், பெரிய பொருளாதார வசதி இருந்தால் மட்டும்தான் கலியாணம் சாத்தியமாகும் என்ற மனநிலையும்தான் பிரச்சினையின் தோற்றுவாயாக இருக்க முடியும்.

அன்பு, காதல், காமம் என்பதெல்லாம் கதையாடுவதற்கு மிகவும் சிக்கலான விடயங்கள்தான். ஆண்-பெண் உறவு எப்போதும் ஓர் இயல்பற்ற தன்மையில் காணப்படுவதை அவதானிக்கலாம். இரு வேறுபட்ட உணர்வு நிலைகள், சிந்தனை மற்றும் செயல்பாட்டு முறைகள் கொண்ட ஆண்களும் பெண்களும் தத்தமது பாலினத்தைச் சேர்ந்தவர்களுடன் பழகும் போது ஓர் இயல்பான பாதுகாப்பு உணர்வை அல்லது கூட்டுணர்வை, புரிந்துணர்வை அடைகிறார்கள். ஒரு கலியாண வீட்டிலோ அல்லது வெளியீட்டு விழாவிலோ அல்லது விருந்துகளிலோ அவரவர் குழுவிடம் போய்ச் சேர்ந்து மனந்திறந்து ஊடாடுவது இயல்பாக நடக்கும். இது நமது சமூகவியல் பண்பாக இருக்கின்றது. இதற்கப்பால் ஆண்-பெண் நட்பு, சந்திப்புக்கள் பல தடைகளைக் கடந்துதான் செல்ல வேண்டியிருக்கிறது. அலுவலகங்களிலும் மற்றும் பணி நிறுவனங்களிலும் கலந்து பழகும் சூழ்நிலை இருந்தாலும் அங்கும் பல திரைகளும் அசமத்துவங்களும் நிலவுகின்றன. அங்கும் ஆண்கள்தான் அதிகமும் அந்தஸ்துக் கூடியவர்களாக இருக்கின்றார்கள். அதனால் ஒரு பெண்ணை வழிநடாத்தும் பாதுகாக்கும் ஊக்குவிக்கும் பொறுப்பை அவர்களாகவே முன்வந்து நாசூக்காக எடுத்துக் கொள்வதையும் அவதானிக்கலாம்.

ஆனால் இன்றைய சூழலில் கறாரான ஆண்மை பெண்மை என்ற வரையறை மெல்ல மெல்ல அழிந்துதான் வருகின்றது. அது இந்தத் தகவல், குளோபல் யுகத்திற்குரிய பண்பு என நினைக்கிறேன். இன்று யாரும் மரபு ரீதியான பெண்ணையோ, மரபு ரீதியான ஆணையோ விரும்புகிற நிலமை இல்லை. ஆண் தன்மை கொண்ட, கொஞ்சம் சோஷியலாகப் பழகக்கூடிய பெண்களைத்தான் ஆண்கள் விரும்புகின்றனர். அவ்வாறே கவித்துவமான, கொஞ்சம் பெண் தன்மை கொண்ட ஆண்களைத்தான் பெண்களும் விரும்புகின்றார்கள். ஆண்-பெண் உரையாடலால் சில நன்மைகள் ஏற்பட்டுள்ளதையும் இந்த இடத்தில் மறுக்க முடியாது.

குறிப்பாக அறிவுத்தேடல் அல்லது கலை இலக்கிய, தஃவா ஆர்வம் கொண்ட பெண்கள் ஆண் நட்பை நாடுகிறார்கள். ஆனால் திருமணத்திற்குப் பின் ஆண்-பெண் நட்பு ஆபத்தானதாகவே மாறியிருக்கிறது. அல்லது அதற்கு வரையறைகள் வைக்க வேண்டுமா என்ற வாதவிவாதங்களும் எழுந்துள்ளன. சில ஆபத்துக்களையும் கடந்து திருமணத்திற்குப் பின்னரான எதிர்ப்பால் நட்புகள் திருமணத்தை வலுப்படுத்துகின்றன என்றும் உளவியல் ஆய்வாளர்கள் கூறுகின்றனர். குடும்பத் தலைவனோ தலைவியோ அடுத்தவரின் நட்புக்கு அல்லது உறவுக்கு முற்றுப் புள்ளி வைக்கும் கசப்பான அனுபவங்களும் இன்றைய வாழ்வில் ஏற்பட்டு வருகின்றன. ஆண்-பெண் நட்பு முன்னெப்போதையும் விட மிக மோசமாக காயப்படும் இடங்களும் இதுவாகத்தான் இருக்கின்றன. பெரும்பாலான தம்பதிகளுக்கு பரஸ்பர ஆர்வங்களும் ஒத்த நில்லைப்பாடுகளும் இல்லாமல் இருப்பதால்தான் வெளியில் ஒரு நட்பைத் தேடுவதற்கான தேவை ஏற்படுகின்றது.

மூஸா (அலை) தனக்கு முற்றிலும் அறிமுகமில்லாத தண்ணீர் அள்ள முடியாமல் ஒதுங்கி நின்ற இரண்டு பெண்களுடன் உரையாடி அத்தேவையை நிறைவேற்றி வைக்கும் சம்பவத்தை அல்குர்ஆன் குறிப்பிடுகின்றது. அபூபக்கர் (ரழி) அவரைப் பற்றி முன்பின் தெரியாத பெண்ணோடு சுவாரஷ்யமாக உரையாடுவதையும் இமாம் புஹாரி பதிவு செய்துள்ளார். நபிகளின் வாழ்விலும் அவரது தேழர், தோழியர் வாழ்விலும் பல நட்பு சார்ந்த, அன்பு சார்ந்த உறவுகளை நமது வாசிப்பிலிருந்து புறமொதுக்கியே வருகிறோம். இதனால் எம்மிடம் தட்டையான ஒரு புரிதலே எஞ்சியிருக்கிறது. இன்றைய ஆண்-பெண் உறவு, சமப்பால் உறவு நெருக்கடிகள் மிகுந்த இந்த யுகத்தில் நம்மிடம் மிகவும் விரிந்த உளவியல், சமூகவியல் குறித்த ஆய்வுகளும் உரையாடலும் தேவையாக இருக்கின்றன. இலங்கையில் மிகக்குறுகிய காலத்தில் கூடுதலான தற்கொலை திகோணமலை மாவட்டத்தில்

ஏற்பட்டுள்ளதாக நான் படித்துள்ளேன். அதற்குப் போர்ச்சூழல் மட்டுமல்ல காரணம். நமது பண்பாட்டுச் சூழலும் நெருக்கடியும்தான் என்பதை நாம் மனங்கொள்ள வேண்டும். உளவியல் ரீதியாக ஆணும் பெண்ணும் வித்தியாசமானவர்கள் என்பதால் தமக்கானவரிடம் கிடைக்காத சில விடயங்களை எதிர்ப்பாலின நட்பில் எடுத்துக் கொள்கிறார்கள். உதாரணமாக, பெண் வாழ்க்கையின் உணர்ச்சிகளையும் பிரச்சினைகளையும் தர்க்க ரீதியாக சிந்திக்காமல் தீர்வு கேட்காமல் வெறுமனே பகிர்ந்து கொள்ள, வெளிப்படுத்த விரும்புவார்கள். ஆனால் ஆண்கள் ஒன்று சேர்ந்தால் சமூக, அரசியல், பண்பாட்டுத் தளங்களிலிலுள்ள சில பொதுவான விடயங்களை வைத்துக் கொண்டு உரையாடுவார்கள். ஆண்கள் தனிப்பட்ட நெருக்கடிகளை பகிர்ந்து கொள்வதற்கு பொதுவாக விரும்புவதில்லை. பெண்களின் கண்ணீர் மன்றாட்டங்களும் ஆண்களின் நிதானமான உலக நடப்பு ஆய்வுகளும் போலித்தனமானவையாக இருக்கின்றன. சில நேரங்களில் சலிப்பை ஏற்படுத்துகின்றன. இந்தப் போலித்தனத்தையும் சலிப்பையும் மட்டுப்படுத்த ஆண்-பெண் உரையாடல்கள் உதவுகின்றன. எல்லா வகையான நட்புகளையும் உறவுகளையும் பார்வைகளையும் காதலாக, காமமாக கட்டமைக்கத் தேவையில்லை. உதாரணமாக ஒரு பெண் வீதியால் நடந்து போகிறாள் என்றால் அந்தச் சந்தியில் நிற்கும் அத்தனை ஆண்களும் அவள் போவதைப் பார்த்துக் கொண்டிருப்பார்கள். இது நமது நாட்டிலும் தென்னிந்தியாவிலும்தான் காணப்படுகிறது. ஐரோப்பிய நாடுகளில் இந்த சமூகவியல் பண்பை காணமுடியாது. இது ஏன் என்பதற்கு நமது பூர்வீகம் பற்றிய தேடலுக்குள்ளால் எனக்கொரு பதில் கிடைத்தது. உங்களின் நிறங்களிலும் மொழிகளிலும் அத்தாட்சி இருக்கிறதென அல்லாஹ் கூறுகிறான். பல நிறங்களைத் தோற்றுவிக்கக் கூடிய, உயிர்ப் பல்வகைமை நிறைந்த மண்ணிலிருந்துதான் ஆதத்தை அல்லாஹ் படைத்ததாகக் கூறுகிறான். இலங்கை, தென்னிந்தியா உள்ளிட்ட குடும்பங்களில் ஒரு

குடும்பத்திற்குள்ளேயே பல நிறங்களில் குழந்தைகள் இருப்பதை நாம் அவதானிக்கலாம். இதை ஆபிரிக்காவிலோ ஐரோப்பாவிலோ ஜப்பானிலோ காண முடியாது. இங்கே மட்டும்தான் காண முடியும். இதனால்தான் இந்த பார்வை இன்றும் நிலவுகிறது. இது ஆச்சரியப் பார்வையாகும். இவள் யாருடைய மகள்? அவருக்கு இப்படி ஒரு மகளா? என்ற ஆச்சரியக் குறிகள் அங்கு பார்க்கும் பார்வைகளிலும் இருப்பதை அவதானிக்கலாம்.

***றமீஸ்:*** உண்மைதான். ஆனால் பதினான்கு வயதுப் பிள்ளை பதினாறு வயதுப் பொடியனுடன் தொடர்புகளை வைத்திருக்கும் நிலையும் இங்கு இருக்கிறது. ஒன்பதாம் ஆண்டு படிக்கும் பிள்ளை பதினொராம் ஆண்டு படிக்கும் மாணவனோடு தொடர்புபடுவதை எப்படி தெரிவாகப் பார்க்க முடியும்? எனது பாடசாலையிலேயே எட்டாம் ஆண்டு படிக்கும் மாணவிக்கும் பதின் மூன்றாம் ஆண்டு படிக்கும் மாணவனுக்கும் இடையில் தொடர்பிருக்கிறது. இதனை சமூகமயப்படுத்தலில் எவ்வாறு எடுத்துக் கொள்வது? ஒரு ஆசிரியர் இதை கையாளவேண்டும் என்பதிலிருக்கும் நியாயத்தன்மை என்ன? நியாயமற்ற, நெறிமுறை தவறிய ஒரு இணைப்பாகத்தான் நான் இதனை நினைக்கிறேன்.

***ஏபிஎம். இத்ரீஸ்:*** நான் சொல்ல வருவது என்ன என்றால் காதலை நடத்திவைக்க வேண்டும் என்றல்ல. இந்த விடயத்தை அவர்கள் இரண்டு பேரும் முடிவெடுத்து ஓடிப்போனதற்குப் பிறகு கதைக்காமல் (எல்லோரும் சிரிக்கிறார்கள்) அதற்கு முதலே ஒரு ஆசிரியருக்குத் தெரிந்திருக்க வேண்டும். இது ஒரு முறையற்ற காதலா? முறையான காதலா? என்று. எனவே கவனமாகத் திருப்ப முடியும். ஒரு பொருள்மீது இன்னொருவருக்கு ஆசை வருவது இயற்கையானது. அந்த ஆசையை தடுப்பதன் ஊடாக என்ன செய்கிறோம் என்றால் உறவைத் துண்டிக்கிறோம். உரையாடலை இல்லாமலாக்குகிறோம். நீங்கள் ஏன் ஒரு வித்தியாசமான

அணுகுமுறையை இதில் கையாளக்கூடாது. 'பளார்' என்று முகத்தில் அடியைப் போடுவது, ஒபீஸுக்கு கூப்பிட்டு அடிப்பது மட்டும்தான் இலேசான தீர்வாகத் தெரிகிறது. இது காதலை அணுகுவதற்கான தீர்வு அல்ல. அவர்கள் இருவரையும் ஒன்றாகவோ, தனித்தனியாகவோ சந்தித்து பேசுவதற்கான ஒரு கவுன்ஸலிங் ஒழுங்கமைப்பு பாடசாலையில் இருக்க வேண்டும். வெளிப்படையாக ஒரு விசாரணை கமிஷன் பொலிஸில் இருப்பது போன்று இல்லாமல் மறைமுகமாக அந்த விடயத்தில் அனுபவமுள்ள ஆசிரியரைக் கொண்டு இருக்க வேண்டும். படித்ததற்காக ஒருவர் கவுன்ஸலிங் செய்யவும் முடியாது. பாடசாலைச் சூழலில் பொருத்தமான ஆசிரியரை இனங்கண்டு, அதிபர் ஒருவரை நியமிக்கலாம். அவரும் உரையாடல் ஊடாக சம்பந்தப்பட்டவர்களை இணைத்துக் கொள்வார். அந்தப் பிள்ளையுடனும் உறவு ஏற்படும். 'உனது வாழ்க்கைக்கு இது எப்படிப் பொருத்தமாக இருக்க முடியும்? நீ நன்றாக படிப்பவள். உன்னைப் போல் படிக்கும் ஒருவராக இருந்தால் மட்டும்தானே உனது எதிர்காலம் சரியாக அமைய முடியும்? இவன் உனது படிப்பையே இல்லாமல் ஆக்கிவிட்டான் என்றால்? நீ பல்கலைக் கழகத்திற்கு தெரிவாகும் போது இவன் வேண்டாம் என்றால்?' இப்படி அந்த தெரிவில் உள்ள குளறுபடிகளை புரியவைப்பதன் ஊடாக கவனத்தைத் திருப்ப முடியும்.

ஏன் ஒரு பிள்ளைக்கு தெரிவுச் சுதந்திரத்தை வழங்க மறுக்கிறோம்? நாமே எல்லாவற்றையும் வாங்கிக் கொடுக்கிறோம். அதனால் ஒரு பிள்ளைக்கு அரசியல்வாதியை தெரிவுசெய்யத் தெரியாது. இயக்கத்தை தெரிவுசெய்யத் தெரியாது. மனைவியைத் தெரிவுசெய்யத் தெரியாது. எதையுமே தெரிவு செய்யத் தெரியாதவர்களாக மாற்றிவிட்டோம். உடுப்பு விடயத்தில்கூட இருநூறு ரூபாய்க்குத்தான் வாங்கிக் கொடுக்கப் போகிறோம் என்றாலும் அதில் ஐந்து வகையான உடுப்புகளில் ஒன்றைத் தெரிவு செய்ய அனுமதிக்கலாமே. அப்போது பிள்ளை கறுப்பை தெரிவு செய்யும் போது சொல்லலாம்,

'கருப்பு வெப்பத்தை உறிஞ்சும். வெளியில் போகும்போது வியர்க்கும். நீங்கள் இந்த நான்கில் வேறொன்றைத் தெரிவு செய்யுங்கள்' என்று வழிகாட்டலாம். எனவே தெரிவுக்கான சுதந்திரத்தை நிராகரிப்பதற்கும் இப்படி உரையாடுவதற்குமிடையில் ஒரு பொறுமைத் தன்மை தேவைப்படுகிறது. இது எங்களுடைய பயிற்றுவிப்பாளர்களிடம் மிகக்குறைவு. அப்படியான தீர்வுகளை நோக்கி நகர்வதற்கு மனம் வராது. 'பளார்' என்று அறைவதற்குத்தான் கைவருகிறது. அடிக்கும் போது அவன் வேறு பத்துப்பேரிடம் அந்த ஆசிரியரைப் பற்றி எச்சரிக்கை செய்வான். எனவே இதனை அங்கு கையாள வருவது ஆட்டோ டிரைவராக இருப்பான். ஒரு குழந்தையை மிகவும் துல்லியமாகப் புரிந்து கொண்டவர் யார் என்ற ஆராய்ச்சியை செய்தார்கள். ஆனால் ஆராய்ச்சி முடிவில் அது உம்மாவோ, வாப்பாவோ, ஆசிரியரோ அல்ல என்பது தெரிய வந்தது. அப்படி என்றால் யார் தெரியுமா? அந்தக் குழந்தையுடன் பாலியல் துஷ்பிரயோகத்தில் ஈடுபடுபவர்தான் அந்தக் குழந்தையை நன்கு புரிந்து கொண்டவர் என்று அந்த ஆய்வில் நிரூபித்திருக்கிறார்கள்.

நான் சொல்ல வருவது பிள்ளையைவிட ஆட்டோ டிரைவர்தான் அறிவு கூடியவராக இருக்க முடியும். பிள்ளையை நல்ல பண்புகளோடேயே பெற்றோர் வளர்த்திருப்பர். ஆட்டோ டிரைவருடைய ஆசை வார்த்தைகள், ஆட்டோ டிரைவருடைய இலவச சுற்றுலாக்கள், ஆட்டோ டிரைவருடைய இலவச ஐஸ்கிறீம்கள் (எல்லோரும் சிரிக்கிறார்கள்) நான் கற்பனையில் இதனைச் சொல்லவில்லை. இதெல்லாம் சேர்ந்துதான் அந்தப் பிள்ளையை பிழையான தெரிவை நோக்கி நகர்த்தியிருக்கும். மிக நெருக்கமான ஒருவராக ஆட்டோ டிரைவரை உணர்ந்திருப்பாள். இவ்வளவும் நடக்கும் போது ஏன் அந்தப் பிள்ளை பெற்றோரிடம் கதைக்காமல், நானாவிடம் கதைக்காமல் இருந்திருக்கிறது? காரணம் பாலுறவைப் பற்றிய நமது உரையாடல், பாலுறவைப் பேசுதல், பாலுறவை

எழுதுதல் என்பதில் மிக இறுக்கமான சமூகமாக மாறிவிட்டோம். பாலுறவை பற்றி உரையாடுவதை ஒரு கேடுகெட்ட விடயமாக நாம் பார்க்கிறோம். இதில் பயன்படுத்தும் சொற்களை முழுக்கவே ஒதுக்கிவிடுகிறோம் அல்லது அவற்றை தணிக்கை செய்து உரையாடுகிறோம்.

குடும்பத்தில் வாப்பா உம்மாவை எப்படி முதன் முதலாக பெண் பார்த்தார் என்னும் விடயத்தை பிள்ளையை வைத்துக் கதைத்தால் பிள்ளைக்கு பெற்றோரிடம் தமது தெரிவைச் சொல்வதற்கான மனத்தெம்பு தானாகவே உருவாகும். பண்டைய நமது குடும்ப அமைப்பிலும் பார்க்க முடியும், உம்மும்மா சொல்லியிருக்கிறார், வயதுக்கு வந்த பிள்ளைகள் பாத்திரங்களை உடைத்தால் அவசரமாக அவர்களுக்கு திருமணம் முடித்துக் கொடுக்க வேண்டும் என்று குறிப்புணர்த்துவதாக. இதெல்லாம் ஒரு குறியீடுதான். நாம் வட்டமாக வீட்டில் பேசிக்கொண்டிருக்கும் பொழுது வாப்பா எப்போது உங்களை முதல் முதலாக சந்தித்தார்? என்று ஒரு கேள்வியைக் கேட்போம். சிரித்துக் கொண்டோ உம்மா உரையாடத் தொடங்குவார். இப்படி இரண்டு மூன்று உரையாடலுக்குப் பிறகு நம்முடைய தேவையை, விருப்பத்தை பேசும் மனத்தயக்கமற்ற சூழல் அங்கு உருவாகும். இதுவும் பாலியல்தான். நாம் என்ன செய்கிறோம் என்றால் பாலியலை அதிதீவிர, உடலுறவு நிலையிலிருந்தே எல்லாவற்றையும் கட்டமைக்கிறோம். அதற்குள் பல படிநிலைகள் இருக்கின்றன. ஒரு பிள்ளை பருவ வயதடைவது எமது சமூகத்தில் அதிர்ச்சியாகத்தான் இருக்கிறது. அதை முன்கூட்டியே ஏன் உரையாடி வரமுடியாது? அதை எனது தளத்தில் எழுதியிருக்கிறேன் எப்படி என்றால் குழந்தைகள் இயல்பாக மூன்று வயதிலிருந்தே அது என்ன? எதற்கு? ஏன்? என்ற கேள்விகளை கேட்டே கற்கின்றனர். அந்த சமயத்தில்தான் நாம் இறை நம்பிக்கையை ஊட்ட வேண்டும் என்று இருபது வருடங்களுக்கு முன் எழுதியிருக்கிறேன். இன்று அதே முறைமையை என்ன செய்யலாம் என்றால் நாம்

உபயோகிக்கும் 'கோடெக்ஸ்' பெட்டியை குழந்தை என்ன என்று கேட்கும் போது அந்தப் பிள்ளையின் அறிவுக்கும் தரத்துக்கும் ஏற்ப விளக்க முடியும். 'மாதா மாதம் பெண்களுக்கு ஒரு இரத்தம் வரும். அதை சுத்திகரிப்பதற்கே இதைப் பயன்படுத்துவார்கள். நீங்களும் பெரிதானால் எதிர்காலத்தில் உங்களுக்கும் தேவைப்படும்'. இவ்வளவு அறிமுகமே குழந்தைக்குப் போதுமானது. இது எந்தளவுக்கென்றால் திருமணம் முடித்து இரண்டு குழந்தைகளுக்கு தாயான பிறகும் தனக்குத் தேவையான உள்ளாடையை உம்மாவிடம் கொடுத்தே வாங்கும் நிலைதான் நமது பெண்களிடம் இருக்கிறது. இது என்ன நிலையிது? நாம்தான் மீண்டும் மீண்டும் ஆயிஷா நாயகி, ரஸூலுல்லாஹ்வுக்கு விளக்கமளித்து முடியாமல் ஒரு ஸஹாபி பெண்ணை வீட்டின் பின்புறம் அழைத்துச் சென்று விளக்கமளித்ததாக படிக்கிறோம். அந்த ஜெஸ்லா என்ற ஸஹாபிப் பெண்ணின் பெயரையும் குறிப்பிட்டுத்தான் பிக்ஹ் நூல்களில் இலங்கையிலிருக்கும் இருநூற்றி ஐம்பது மத்ரஸாக்களிலும் பாடத்திட்டம் போட்டு படிப்பிக்கிறோம். அதை படிப்பித்துவிட்டு உரையாட வரும் பொழுது கீழ்சாதி, காவாலி என்ற மனப்பாங்கிலிருந்து பார்க்கிறோம். இது என்ன முரண்?

***றமீஸ்:*** நீங்கள் இவ்வளவு தூரம் இதை கொண்டு வருவதால் நானும் ஒரு விடயத்தைச் சொல்கிறேன், எங்களுடைய பகுதியில்தான் ஒரு தம்பதி இருக்கிறது. இளம் வயதில் திருமணமானவர்கள். பல ஆண்டுகளாக அவர்களுக்கு குழந்தைகள் இல்லை. இருவரும் நல்ல ஆரோக்கியமானவர்கள்தான் ஆனால் அவர்கள் ஒரு போதும் கணவன் மனைவியாக இருந்ததில்லை. அவர்களுக்குத் தெரியாததுதான் காரணம். அவர்களது வாப்பாவோ உம்மாவோ இதைப்பற்றிய எந்த அறிவையும் அவர்களுக்குக் கொடுக்கவில்லை.

***ஏபிஎம். இத்ரீஸ்:*** நம்மிடம் மருத்துவராவதற்கு பாடத்திட்டம்

இருக்கிறது. பொறியிலாளராக, கணக்காளராக வருவதற்கு பாடத்திட்டம் இருக்கிறது. ஒரு நல்ல வாப்பாவாக, நல்ல உம்மாவாக ஆவதற்கு பாடத்திட்டம் இருக்கிறதா? ஒரு நல்ல கணவனாக ஆவதற்கு பாடத்திட்டம் இருக்கிறதா? தனிப்பட்ட முறையில், பொது வாழ்வில் அவர் நல்ல மனிதராக இருப்பார். ஆனால் நல்ல கணவனாக இருக்கமாட்டார். இங்கு நல்ல கணவனாக இருப்பது எப்படி? நல்ல மனைவியாக இருப்பது எப்படி? என்றால் இல்லையே! எங்கு இருக்கிறது? மத்ரஸாக்களில் இருக்கிறதா? பள்ளிவாயல்களில் இருக்கிறதா? பாடசாலையில் இருக்கிறதா?

ஒரு கதையைச் சொல்கிறேன், எனக்குத் தெரிந்த ஒருவர் திருமணம் முடித்து சில நாட்கள்தான் ஆகிறது, மாமா மாமி பிள்ளைகள் முன் அறையில் உறங்குவார்கள். திருமணமான தம்பதிக்கு ஒரு அறை இருக்கிறது. கிணறு கால் கிலோ மீட்டர் நடந்து போகும் தூரத்தில் இருக்கிறது. அதற்குரிய வாளியும் கயிறும் முன் அறையில்தான் இருக்கிறது. இவர்கள் ஒன்றரை மாதமாக கணவன் மனைவியாக வாழவில்லை. என்ன பிரச்சினை என்றால் குளிப்பு கடமையானால் குளிப்பதற்கு இருட்டில் இந்த வாளியை தூக்கினால் பிள்ளைகள் எழும்பிவிடும். இங்கு ஒன்றை விளங்கிக் கொள்ள முடியும், திருமணம் முடிப்பதற்கு முன்னர் அந்த இடத்தைக்கூட மாப்பிள்ளை சென்று பார்க்கவில்லை என்பதை. சாச்சியையும் மாமியையும் அனுப்பி நமக்கான ஆடையை தைக்க முடியுமா? முடியாது. நமக்குத் தேவையான ஆடையை நாம் சென்று அளவு கொடுத்துத்தான் தைத்தெடுக்க முடியும். நமக்கு பிக்ஹை, தப்ஸீரை கற்பித்த ஆசிரியர்களே அடிப்படையான உடற்கூற்று விடயங்களையோ, ஒரு மனிதனின் உடலில் என்னென்ன பாகங்கள் இருக்கும் என்ற மிகச்சாதாரண அறிவுகூட இல்லாதவர்களாக இருந்திருக்கிறார்கள். அதன் உதாரணங்களை சொல்வதாக இருந்தால் நீண்டுவிடும்.

**ஏபிஎம். இர்பான்:** நீங்கள் குறிப்பிடும் இந்தப் பிரச்சினையின்

இடம், சூழல் புவியியல் ரீதியாக, சமூகவியல் ரீதியாக எவ்வாறு அமைந்திருக்கிறது?

**ஆரிபீன்:** இது முழுக்கவே நகரப் பகுதி என்பதால் மூவின மக்களும் வாழுகின்றனர். பிறபகுதிகளைப் பார்த்தால் ஏதாவது இரண்டு இனங்களுமே செறிவாக இருப்பர். ஆனால் திருகோணமலை அப்படியில்லை. கிராமப்பகுதிகளில் பேணக்கூடிய தனித்துவம் இங்கு பேண முடியாதுள்ளது. இது யுத்தம் நடைபெற்ற பிரதேசமாக இருந்தாலும் கூட அப்படி பெரியளவிலான இனமுரண்பாட்டையும் இங்கு பார்க்க முடியாது. அம்பாறையில் இருக்கும் இனமுரண்பாடு இங்கு இருக்காது. உதாரணமாக அம்பாறை நகரத்திற்கு அருகிலிருக்கும் வரிப்பத்தான்சேனை முஸ்லிம்களுக்கு முழுக்கவே சிங்களம் தெரியாது. அதேநேரம் நிலாவெளியிலிருக்கும் ஒருவருக்கு சிங்களம் நன்றாகத் தெரிந்திருக்கும். எல்லோரும் கூடி வாழ்பவர்களாக, தொழில்துறைகளில் பங்காளிகளாக இருக்கிறார்கள். இப்படிப் போகும் போதும் அந்தக் கலாச்சாரம் ஊடுகடத்தப்படுவது இயல்பானது.

**றிழா:** மதம்மாறி திருமணம் செய்து கொள்வது திருகோணமலையில் இன்று நேற்று நடைபெறும் ஒரு பிரச்சினையல்ல. இது முப்பது நாற்பது வருடங்களுக்கு முன்னரே நடந்திருக்கிறது. இளைஞர் கழகங்கள், விளையாட்டு மைதானங்கள் எல்லாமே இங்கு பொதுவானவை. இவற்றுக்குள்ளால் உருவாகும் உறவுமுறை ஒரு முஸ்லிம் வீட்டிற்குள் ஒரு தமிழ் இளைஞர் வந்துபோவது, சகஜமாகப் பழகுவதைக் காணமுடியும். நாம் கடற்கரையில் அமர்ந்து கொண்டிருக்கும் போதும் ஒரு படகை எல்லா இன இளைஞர்களும் சேர்ந்து தள்ளிக்கொண்டு போவதைக் காணக்கூடியதாக இருந்தது. அதனை அனுகூலமாகப் பார்க்கக்கூடிய சந்தர்ப்பங்களும் இருக்கின்றன. இங்கு நாம் அவதானித்தால் பிரச்சினையாக இதனை உணர்பவர்கள்

திருகோணமலை மக்களல்ல. மூதூர், கிண்ணியா போன்று வெளியிலிருப்பவர்கள்தான் இதனைப் பிரச்சினையாக உணர்கிறார்கள்.

**ஆரிபீன்:** இதுதான் உண்மை. நீண்ட நெடுங்காலமாக இந்தப் பிரச்சினை இருக்கிறது. இந்த விடயத்தைக் கூட நான் ஜம்மியத்துல் உலமா போன்ற இடங்களுக்குக் கொண்டு சென்றிருக்கிறேன். நாம் எவ்வளவுதான் மனிதநேயத்துடன் பழகினாலும் பன்மைத்துவம் தொடர்பாக கதைத்தாலும் எங்களுடைய அடையாளத்தை இழக்க முடியாது என்பதுதான் உண்மை.

**ஏபிஎம். இர்பான்:** இப்படி வெளியேறிப் போவோரை மீண்டும் கொண்டு வருவதற்கான அல்லது அவர்களது இடத்திலேயே ஒரு இஸ்லாமிய வாழ்வியல் சூழலை உருவாக்குவதற்கான ஏதாவது நடவடிக்கைகளை எடுக்க முடியாதா?

**ஆரிபீன்:** உண்மைதான். இப்படியான சூழ்நிலைகளில் வாழ்பவர்களுக்கு ஆகக்குறைந்தளவிலாவது சில தீர்வுகளை நாம் முன்வைத்து வேலைசெய்ய முடியும். சாதாரணமாக நாம் வேலை செய்தாலும் இயலுமான வரைக்கும் ஷரீஅத்தில் அங்கீகரிக்கப்பட்ட சில வேலைகளையும் சட்டம் அனுமதித்த சில ஒழுங்குகளையும் சமூகம் ஏற்றுக்கொள்ளக் கூடிய சில ஒழுங்குளையும் இப்படி மூன்று கோணங்களில் இதனை ஒழுங்கு படுத்திக் கொண்டு நாம் சென்றால் அது சமூகத்தில் பெரிய பிரச்சினையாக உணரப்படாது. ஷரீஅத்தில் அங்கீகரிக்கக்கூடியதாகவும் அரச அங்கீகாரத்துடனும் சில தனித்துவங்களை நாம் பேண முடியும். அந்த அடையாளங்களே இல்லாத ஒரு சூழலை நாம் ஏற்படுத்தி விட்டு இவற்றைப் பற்றிப் பேசுவது பொருத்தமற்றது. அதன் விளைவுதான் நவீன கல்விமுறை வந்த காலத்திலிருந்து திருகோணமலை நகரம் ஆண், பெண் பாடசாலை என்று பிரித்து கற்பிக்கும் ஒழுங்கு இதுவரை இல்லை. நாம் அவ்வாறு

ஆண், பெண் பாடசாலைகளை தனியாக உருவாக்க முடியுமா என்பதை இங்குள்ள எல்லா சமூக நிறுவனங்களுடனும் இணைந்து ஆலோசித்துக் கொண்டிருக்கிறோம்.

***றிழா:*** அதற்கு முதல், எண்பத்தேழாம் ஆண்டு ஒப்பந்தத்திற்குப் பிறகு வடக்கு கிழக்கு இணைகிறது. திருகோணமலை தலை நகரமாக மாறுவதால் யுத்தத்தால் பாதிக்கப்பட்ட யாழ்ப்பாண படித்த வர்க்கம் ஒன்று பாதுகாப்புக்காகவும் உத்தியோக நிமித்தமும் இங்கு வந்து குடியேறுகிறது. அவர்கள் முழுக்கவும் அரச வதிவிடங்களை கூடுதலாக பயன்படுத்துகிறார்கள். முஸ்லிம் குடியிருப்புகளுக்குள்ளும் இதனால் நெருக்கம் ஏற்படுகிறது. இவர்களுக்கிடையில் ஒரு வித்தியாசமான புரிதல், உறவு வளர்கிறது. இங்கு மதம், அடையாளம் என்பது முஸ்லிம்களுக்கிடையில் தப்லீக் வடிவத்திலேயே பின்பற்றப்படுகிறது. அது தவிர அவர்களுக்கு இஸ்லாம் என்றால் எதுவும் தெரியாது. ஜமாத் கூட இங்கு பெரியளவில் இல்லை.

***ஏபிஎம். இத்ரீஸ்:*** மூதூர், கிண்ணியா போன்ற முஸ்லிம்கள் செறிந்து வாழும் பகுதிகளில் பண்பாட்டைப் பேணவேண்டும் என்பதில் அக்கறையுள்ள உணர்வுபூர்வமான குலாம் ஒன்று இருக்கிறது. இனிவரும் காலங்களில் அவர்கள் குறிப்பிட்ட சில விடயங்களுக்குள் மட்டும் சுத்திக்கொண்டிருப்பது சரியல்ல. இந்தப் பகுதிகளில் இயங்கும் பொது நிறுவனங்கள், விளையாட்டுக் கழகங்கள், கலாச்சார அமைப்புக்களுடனும் அவர்களும் ஊடாட்டத்தை வைத்துக் கொள்ள வேண்டும். உதாரணத்திற்கு ஒரு விளையாட்டு சீஸனுக்கு இங்குள்ளவர்களையும் அங்குள்ள விளையாட்டுக் கழகங்களையும் இணைத்து வதிவிடப் போட்டி நிகழ்ச்சியொன்றை ஒழுங்கு செய்யலாம். இதற்குள்ளால் பல உறவுகள் ஏற்படும். இதனை நாம் சாதகமாகப் பயன்படுத்திக் கொண்டு இதற்கூடாக நமது கலாச்சார, பண்பாட்டு விழுமியங்களை போதிக்க முடியும்.

**றமீஸ்:** விளையாட்டுக் கழகங்களைப் போன்று கற்பதற்காக பிள்ளைகள் வெளியில் போகும்போதும், டியூசன் சென்டர்களில் கூட இந்த விடயம் நடைபெறுகிறது. நீங்கள் முன்னரே சொன்ன இஸ்லாம் என்றால் அந்து ஐந்து அடிப்படைக் கட்டுமானத்தில்தான் இங்குள்ளவர்கள் நிற்கிறார்கள். தொழுகை, நோன்பு, ஹஜ்ஜுடனேயே அனைத்தையும் சுருக்கிக் கொள்கிறார்கள்.

**ஏபிஎம். இத்ரீஸ்:** நாம் சோனகவாடியில் பார்த்த பதினெட்டாம் நுற்றாண்டில் கட்டப்பட்ட பள்ளிவாயல் காலப் பகுதியிலிருந்தே இங்கிருந்த கலாச்சார, பண்பாட்டு விடயங்களை ஆராயத் தொடங்க வேண்டும். அவர்கள் பள்ளியை ஒட்டி என்ன வேலை செய்தார்கள்? உதாரணமாக அந்தப் பள்ளியின் ஞாபகார்த்தமாக ஏதாவது நிகழ்வொன்று நடைபெற்று வருமாக இருந்தால் அதையொட்டி நாம் வேலைசெய்யலாம். மீலாது தினங்கள் வந்தால் எங்களது பகுதியில் குலாமீர்ஷா என்பவர் தனியொருவராக நின்று கொடியேற்றுவது போன்ற ஒரு விழாவைச் செய்வார். அவருடைய மத்ரஸா மாணவர்களைக் கொண்டு பிரதான வீதி வழியாக இந்த பச்சைக் கொடிகளுடன் கஸீதா, ஸலவாத்தும் படித்துக் கொண்டு அணிவகுப்பு போன்று நடந்து சென்று இறுதியில் மத்ரஸாவை மாணவர்கள் வந்தடைவர். இது முப்பது நாற்பது வருடங்களாக எந்த ஜமாஅத்தினதும் உதவியின்றி ஒரு தனிமனிதனின் கலையுணர்வால் நடாத்தப்படும் நிகழ்வு. நான் கடந்தவாரம் கொழும்பிலிருந்து வரும்பொழுது பல இடங்களில் பஸ் நிறுத்தி நிறுத்தி வரவேண்டியிருந்தது. சிங்கள அவுறுது அணிவகுப்பு சென்று கொண்டிருந்ததுதான் அதற்குக் காரணம். அதில் குழந்தைகளிலிருந்து வயதானவர்கள் என்று மூன்று தலைமுறையினர் வரைக்கும் வித்தியாசமான ஒப்பனைகளுடன் பண்டைய மன்னர் பரம்பரையிலிருந்து இன்றைய ஜனாதிபதி வரைக்கும் ஒரு வரலாறு சொல்வதாக இருந்தது. ஒப்பனைகளுக்குள்ளால் ராமனுடை குரங்கு

போலவும் சீதையைக் கொண்டு செல்வதற்கு வந்ததைப் போலவும் பெரஹர நடன, ஒப்பனை என்று மொத்தப் புராண இதிகாச வரலாற்றையும் அதற்குள்ளால் சொல்ல முனைகிறார்கள். இந்தக் கலாசார நிகழ்வுகள் எதுவும் நம்மிடமில்லை. எங்களிடம் ஒன்றும் இல்லாமல் போய் எல்லாப் பிரச்சினைகளையும் பயான் பண்ணி, கஸ்த்துப் போய் அணுகும் முறையையே வைத்திருக்கிறோம். இவ்வாறு அணுகும் போது தொடர்ந்தும் ஒருவரை தக்கவைத்திருக்கும் சரக்கும் தரமும் அதில் இல்லை. அதே போன்று அமைப்புகளை நடாத்தும் எங்களிடமும் அனைவரையும் உட்கொண்டு செல்லும் நிகழ்ச்சித்திட்டங்களும் சரியாக இடப்படவில்லை. எனவே விளையாட்டு, கலைநிகழ்ச்சிகள், தொழில்நுட்பம் இவற்றுக்குள்ளால் சென்று இளைஞர்களை தூண்டில் போட்டுப் பிடிப்பது மிகமிக இலகுவானது. உதாரணமாக அவர்களுக்கு நவீன தொழில்நுட்பத்தில் உள்ள ஒரு விடயத்தை பட்டறையாகவோ, பயிற்சி முகாமாகவோ கற்பித்து அதிலிருந்து உருவாகும் தொடர்புகளை சாதகமாக மாற்றிக்கொள்ள முடியும்.

**றிழா:** முஸ்லிம் பாடசாலை ஒன்றை ஆண், பெண் பாடசாலையாகப் பிரிப்பதற்கு முன்னர் பல்வேறு விடயங்களைக் கருத்திற் கொள்ள வேண்டியிருக்கிறது. முக்கியமாக திணைக்களத்திலுள்ள அதிகாரிகளின் ஒத்துழைப்பு எவ்வாறு அமைகிறது என்பதை கவனிக்க வேண்டும். அடுத்ததாக வள ஒதுக்கீடு. வலயக் கல்விப் பணிப்பாளர் முதல் அமைச்சு வரை இது சம்பந்தப் படுகிறது. பின்னர் முஸ்லிம் பாடசாலைகளுக்கு முஸ்லிம் அதிபர் என்பது நிபந்தனையானது. இவை எல்லாம் உடனடியாக சாத்தியப்படும் பொழுதுதான் பாடசாலையினை அடுத்த கட்டத்திற்கு கொண்டு செல்ல முடியும்.

**ஏபிஎம். இர்பான்:** இதிலுள்ள ஆரோக்கியம் என்னவென்றால் எமது பகுதியிலுள்ள அந்-நூர் தேசிய பாடசாலையை ஒரு இரவு

கூடி முடிவெடுத்து மறுநாள் பிரித்தது போன்று இல்லாமல் இதனை நீங்கள் ஒரு உரையாடலுக்கு உட்படுத்தி அதனை பல சமூகத் தளங்களுக்கு எடுத்துச் சென்று கருத்தை பலப்படுத்துவது நல்லதொரு விடயம்.

***றிழா:*** ஆண், பெண் பாடசாலைகளாகப் பிரிப்பதில் சில பிரதிகூலங்களும் உருவாகலாம். உதாரணத்திற்கு இதிலிருந்து சில பிள்ளைகள் விலகி வேறு அந்நிய பாடசாலைகளில் போய்ச் சேர்வதற்கான வாய்ப்புகளும் இருக்கின்றன. காரணம் இது முஸ்லிம் பாடசாலை என்பதை விடவும் பெற்றோர் தமது பிள்ளைகளை வளர்ந்த பாடசாலைகளில் கொண்டுபோய்ச் சேர்க்கவே விரும்புவர். இங்கு பிரதேசவாதமும் இருக்கிறது. சோனகவாடி, ஜமாலிய்யா பிரதேசங்களில் பாடசாலைகள் அமைந்திருப்பதால் எதை ஆண், பெண் பாடசாலையாக மாற்றுவது என்ற பிரச்சினை உருவாகும். அதிலிருந்தே பெற்றோர் தமது முடிவுகளை அமைத்துக் கொள்வர். முஸ்லிம் பாடசாலை அதிபர்களும் சிலபோது தகுதியற்றவர்களாகவே இருக்கின்றனர். அதுவும் சில பின்னடைவுகளை உருவாக்க வாய்ப்பிருக்கிறது. இங்கு நிருவாகத்துறைக்கு முஸ்லிம்களின் பங்களிப்பு மிகவும் குறைவு. இதனால் முஸ்லிம் பாடசாலைகளின் முன்னேற்றத்தை திணைக்கள மட்டத்தில் சாத்தியமாக்குவதற்கான பொறிமுறை இல்லை என்றுதான் சொல்ல வேண்டும்.

இப்படியான விடயங்களை வெளியிலிருந்து வருபவர்கள் தீர்மானிப்பதை விட இப்பகுதியில் உள்ளவர்களை வைத்தே ஒரு கலாச்சார உரையாடலை செய்து கொண்டிருப்பது சந்தோஷமான விடயம்தான். ஆனால் என்னுடைய கவலை என்னவென்றால் ஆண், பெண் பாடசாலைகளாக பிரிக்கும் பொழுது இப்பாடசாலைகளை சுற்றியிருக்கும் அந்நிய பாடசாலைக்கு திரும்பவும் நமது பிள்ளைகளை கொடுப்பதாக அமைந்து அதனால் ஒதுக்கீடுகள் கூடுதலாக அங்கு போய்ச்சேர்வதற்கு வழிவகுக்கும் என்பதுதான்.

பௌதீகவளத்தை, ஆசிரியர்களை அங்குதான் கூடுதலாக ஒதுக்குவார்கள். என்னுடைய கணிப்பீட்டில் இலங்கையின் கல்வித்துறை என்பது போக்குவரத்துறை போன்றது. அங்கு எவ்வளவு ஊழலும் சீர்கேடும் இருக்கிறதோ அதுபோன்றதுதான் கல்வித்துறையும். இதற்குள்ளால் நாம் நினைப்பவற்றை சாதிப்பது மிகவும் சவாலான ஒரு விடயம்தான்.

**ஏபிஎம். இத்ரீஸ்:** இதற்குள் இன்னொரு விடயமும் இருக்கிறது. அது என்னவென்றால் முஸ்லிம் சமூகத்தின் கல்வி என்னும் வகையில் எந்தக் கல்வியை பரிந்துரை செய்கிறோம் என்ற கேள்விக்கு பதிலளிப்பது முக்கியமானது. நூறு வீதம் முஸ்லிம்களுடைய கல்வியா அது அல்லது இணைந்த கல்வியா என்பதையும் உறுதி செய்ய வேண்டியிருக்கிறது.

**றமீஸ்:** இங்கு நடக்கும் முறைகேடான விடயங்களில் நாம் தெளிவாக இருக்கவும் வேண்டும் அதேபோல் இவை கூடுதலாக எங்கு நடக்கிறது என்பதைப் பார்த்தால் முஸ்லிம் கலவன் பாடசாலைகளில்தான் அதிகம். அடிப்படையில் சில மாற்றங்களைச் செய்யாதவரை இவ்வாறான ஒழுங்கீனங்கள் தொடர்ந்தும் நடைபெற்றுக் கொண்டிருப்பதற்கான வாய்ப்புதான் அதிகமாகக் காணப்படுகின்றது. உதாரணத்திற்கு ஒருவர் குடிக்கிறார் என்றால் குடிப்பவரை நேர்வழிப் படுத்துவதைப் போல குடிபானம் விற்பவருக்கும் வேறொரு உழைப்பை காண்பிக்க வேண்டும். அதுபோன்ற ஒன்றுதான் ஷேய்க் சொல்வது போன்று எந்தக் கல்வியைக் கொடுப்பது என்பதும். பாடசாலைகளில் நடக்கும் ஒழுங்கீனங்களைக் கையாள்வதைப் போன்று அதன் அடிப்படை இஸ்லாமிய விழுமியங்கள் நிறைந்த ஒரு கல்வியையும் கொடுக்க வேண்டும். எங்களுக்கென்ற தனித்துவமான ஒரு விளையாட்டுப் போட்டியை மாணவர்கள் கண்டே இருக்க மாட்டார்கள். எங்களது தனித்துவமான கல்விச் சுற்றுலா, கலை நிகழ்ச்சி, மாணவர் மன்றம் இவற்றைப் பற்றிய அறிவு எந்த

முஸ்லிம் பாடசாலைகளுக்கும் இருக்காது என்றே நினைக்கிறேன். முஸ்லிம் பாடசாலை என்பது பாடசாலைச் சீருடையுடன் மட்டும் சுருக்கப்பட்டு விட்டது. இஸ்லாமிய கருத்தியலில் அமைந்த எதுவும் கற்பிக்கும் நடைமுறையில் அங்கு இல்லை. தனித்துவமான கல்வியைக் கொடுக்கும் பொழுதுதான் இப்படியான பிரச்சினை மேலும் எழுவதைத் தடுக்க முடியும்.

நாம் இப்போது யோசிக்கும் பிரிப்பு என்பது முழுக்கவே பௌதீக ரிதியான பிரிப்பு அல்ல. பாடசாலை மாணவர்கள்தான் அங்குமிங்கும் மாற்றப்படுவர் அல்லாமல் பௌதீக வளங்கள், ஆசிரியர்கள், நிருவாக அமைப்பு இவை அனைத்தும் அப்படியே இருக்கும். இதனால் வளப்பற்றாக்குறை எழாமல் தவிர்க்கப்படும். இதில் மேலும் ஒரு அனுகூலம் இருக்கிறது என்ன வென்றால், தனிப்பாடசாலைகள் கிடைக்காமல் கொன்வென்டுகளில் விடப்படும் முஸ்லிம் பிள்ளைகளை இங்கு கொண்டுவந்து சேர்ப்பதற்கான வாய்ப்பும் இருக்கிறது. வெளியிலுள்ள மீத்திறன் கூடிய பிள்ளைகளும் இங்கு வந்து சேர்வதற்கான வாய்ப்பிருக்கிறது. விருப்பமில்லாமல் தனி பெண்கள் என்ற ஒரே காரணத்திற்காகத்தான் பிள்ளையை கொன்வென்டுகளில் கொண்டு போய்ச் சேர்க்கிறார்கள்.

***றிழா:*** என்னுடைய கேள்வி பிள்ளைகளின் எண்ணிக்கை அதிகரிக்கும், கல்வித்தரம் உயரும் இவற்றைப்பற்றியதல்ல. அவை காலப்போக்கில் மாறிவரும் விடயங்கள். நீங்கள் முன்னெடுக்கும் இந்த விடயம் கலாச்சார சீர்கேட்டைத் தடுப்பதற்கு எந்தளவு உதவியாக இருக்கும்? காரணம் பாடசாலை அல்லாமல் கூடிவாழ்வது, டியூசனுக்குப் பிள்ளை போவது, ஒன்றாக விளையாடுவது, நிகழ்ச்சிகளில் பங்கெடுப்பது இவற்றை எப்படி பிரிப்புச் செய்ய முடியும்?

***றமீஸ்:*** எங்களுடைய நோக்கம் இதனூடாக சீர்கேடுகளுக்கான தன்மையின் அளவைக் குறைப்பதுதான். சீர்கேட்டுக்கான

சந்தர்ப்பம் ஓரிரு மணித்தியாலங்கள் நடக்கும் டியூசனில் மிகமிகக் குறைவு. அறிமுகமற்ற பல பாடசாலைப் பிள்ளைகள்தான் டியூசன் சென்டர்களில் கூடுவதால் தொடர்புகள் குறைவு. ஆனால் பாடசாலை அவ்வாறில்லை. ஏழு மணிக்கு பாடசாலைக்கு வரும் பிள்ளை இரண்டு மணிவரை அசெம்பிளிக்கு ஒன்றாகப் போய், பேனை பென்சில் பரிமாறி, குறூப் வேர்க் ஒன்றாக செய்து, சாப்பாட்டைப் பகிர்ந்து உண்டு, பேத்டே பார்ட்டி கொண்டாடி, கணனியைப் பகிர்ந்து, பாடசாலை நிகழ்வுகளில் பங்கெடுத்து இப்படி பிள்ளை பதின் மூன்று வருடங்களுக்கு பழகும் வாய்ப்பு பாடசாலையில் மட்டும்தான் இருக்கிறது. குழந்தைப் பருவத்தில் இருந்து தொடர்புறும் சந்தர்ப்பங்களில் மனித பலவீனம் தொழிற்படுவதற்கு அதிக வாய்ப்பிருக்கிறது. எனவே பிரித்து விட்டால் ஓரளவுக்காவது இதனைக் கட்டுப்படுத்த முடியும் என்றே கருதுகிறேன்.

***ஆரிபீன்:*** பிரித்தல் என்பதை எவ்வாறு முன்வைக்கிறோம் என்றால், இது இல்மாவின் கலந்துரையாடலிலும் எடுத்துக் கொள்ளப்பட்ட விடயம், பிரித்தலுக்குப் பின்னால் உள்ள பாடசாலை என்பது தேசிய அளவில் முன்மாதிரியாகவும் இப்போது இருக்கும் வினைத்திறனை விட கூடியளவு வினைத்திறனுடன் மாணவர்கள், ஆசிரியர், பௌதீக வளங்கள் என்பவற்றை மாற்றக் கூடியதாகவும் இருக்க வேண்டும். உதாரணத்திற்கு பெண் பாடசாலை மாணவர்கள் ஆண் பாடசாலை மாணவர்களுடன் சமநிலையில் நின்று முகம்கொடுக்கக் கூடிய திறனுடையவர்களாக மாற்றப்பட வேண்டும். வெறுமனே தனித்துவம் என்று முகத்தை மட்டும் மூடிக்கொண்டு பாடசாலைக்குச் சென்று வருவதல்ல. தனித்துவத்தை பாதுகாத்துக் கொண்டு இன்னும் வினைத்திறனுள்ளவர்களாக மாற்றுவதும்தான் இதன் அடிப்படை நோக்கமாக இருக்கிறது.

***ஏபிஎம். இர்பான்:*** வடக்குக் கிழக்கில் அஹதியா பாடசாலை

முறை இல்லாததும் இது போன்ற கலாச்சார நெருக்கடியினை எதிர்கொள்வதற்கு ஒரு காரணியாக கருதலாம். தென்னிலங்கை சமூகத்திற்குள் கடந்த இருபது வருடங்களாக அகதியாப் பாடசாலை முறை இஸ்லாமிய விழுமியங்களைப் பேணிக் கொள்வதில் நல்ல பங்கை ஆற்றிவருகிறது.

***றிழா:*** என்னுடைய அனுபவம் எப்படி இருக்கிறது என்றால் ஓட்டமாவடி முஸ்லிம் மகாவித்தியாலயத்தை ஆண், பெண் பாடசாலைகளாக பிரிக்கிறார்கள். முப்பது வருடங்கள் எடுத்தது ஓட்டமாவடி ஆண்கள் பாடசாலை தன்னை ஒரு முழுமையான பாடசாலையாக வளர்த்தெடுப்பதற்கு. இதில் முரண் என்னவென்றால் உயர்தர விஞ்ஞான, கணித பிரிவுகளுக்கு மீண்டும் பெண் மாணவர்களை அனுமதித்தால்தான் அதனை வெற்றிகரமாக நடத்திக் கொண்டு செல்ல முடியும் என்பதுதான். இப்போது பிரிக்கப்பட்டிருக்கும் வாழைச்சேனை அந்நூர் தேசிய பாடசாலையின் நிலையும் இதுதான். பிரிக்கும் போது எப்போதும் பெண்கள் பிரிவே வினைத்திறன் அதிகரித்துக் காணப்படுகிறது. ஆசிரியர்களும் அப்பிரிவில் இணையவே விரும்புவர். இது ஆண் மாணவர்கள் பிரிவை பலவீனமாக்குவதோடு பாடசாலையை கட்டியெழுப்புவதற்கு பல ஆண்டுகளையும் வீணடித்துவிடுகிறது.

***ஏபிஎம். இத்ரீஸ்:*** றிழா சொல்வது போன்று ஒரு ஐந்து வருடமோ பத்து வருடமோ அந்தப் பாடசாலையில் ஒரு பண்பாட்டு எழுச்சியை உருவாக்குவதற்கான வளவாளர்கள் உங்களிடம் இருக்கிறார்களா? அல்லது இக்கட்டங்களை எதிர்கொண்டு தாண்டுவதற்கான ஒரு கட்டமைப்பு இருக்கிறதா என்பதை பரிசீலித்துக் கொள்ள வேண்டும். ஒன்றில்லாவிட்டால் மற்றொன்றாக, அடுக்குச் செயற்பாடாக அது இருந்தால்தான் இதனைப் பரிசீலிப்பது பொருத்தமானது. ஆரிபீன் ஷேய்க், ஸஜீத் ஷேய்க் போன்றவர்களும் நிருவாகத் துறைகளை நோக்கி நகர வேண்டும்.

**றிழா:** ஓடிப் போவதில் ஒரு சமூகவியல் பிரச்சினையும் இருக்கிறது. ஒரு பேட்ச் நிலம் ஏழெட்டு இலட்சத்தை தாண்டும் நகர்ப்பகுதியில் வாழும் பெற்றோருக்கு இது இலகுவான தீர்வாகவும் அமைந்துவிடுகிறது. ஆனால் இங்கு நகரப்பகுதியில் வாழும் மக்களது பிரச்சினையை கிராமத்தவரின் மனநிலையில் இருந்து கொண்டு தீர்வை அணுகுவதாகவே எனக்குத் தோன்றுகிறது. பிள்ளைகள் பழகுவதை, வெளியில் திரிவதை நமது கிராம மனநிலையிலிருந்து ஈடுகொடுத்துப் பார்க்க கஷ்டமாக இருக்கிறது. அது நமது இயல்பிலிருந்து வேறாகத் தெரிகிறது. அந்த கலாச்சாரத்தைப் படிக்காமல் ஒரு தீர்வை முன்வைப்பதாகத்தான் என்குத் தோன்றுகிறது.

**றமீஸ்:** நீங்கள் சொல்வது எனக்கு விளங்கவில்லை.

**ஆரிபீன்:** றிழா சொல்ல வருவது இப்பிரச்சினைக்கு தீர்வை முன்வைக்கும் நாம் நகர வாழ்க்கைக்குள் உள்வாங்கப் படாதவர்கள் அல்லது நாம் ஒரு நகர வாசியாக இருந்திருந்தால் இதனை ஒரு பிச்சினையாக முன்வைத்திருக்க மாட்டோம் என்கிறார். உண்மைதான். நான் டவுனில் பிறந்து வளர்ந்திருந்தால் இதனைப் பொருட்படுத்தியிருக்க மாட்டேன்.

**ஏபிஎம். இர்பான்:** பிரித்ததற்குப் பிறகு வகுப்பறையில் மாணவர்கள் புதுவகையான தனிமையுணர்வை எதிர்கொள்கிறார்கள். இது விரக்தியான அல்லது போதைப்பொருள் பாவனை போன்றவற்றுக்கும் அவர்களை இட்டுச் செல்கிறது.

**றமீஸ்:** கலவன் பாடசாலையில் அதிகளவு நன்மையும் இருக்கிறது. தண்டனை கொடுப்பதற்கு மாணவனை அடிக்க வேண்டியதில்லை. அதுபோன்று போட்டி உணர்வை மிக விரைவில் உருவாக்க முடியும். ஆனால் திறமையான நிருவாகிகள் அதற்குத் தேவைப்படுகிறார்கள். நல்லதொரு

ஒழுக்காற்றுக்குழு, அதிபர் போன்றவர்கள் இருந்தால் கலவன் பாடசாலை ஒன்றை வெற்றிகரமாக நடத்திச் செல்லலாம்.

**ஏபிஎம். இத்ரீஸ்:** எதிர்காலத்தில் ஒரு நல்ல கணவனை தெரிவு செய்வதற்கான அறிவும் பெண்களிடம் இருக்கும். பத்து வருடமாக ஒரு பெண்ணை பார்த்துத் தெரிந்த ஒரு மாணவனுக்கு, அவளது நடத்தை, இயல்பு, குடும்பப் பாங்கு இவற்றையும் அறியும் போது அவளுடன் வாழ முடியுமா இல்லையா என்பதையும் தீர்மானித்துக் கொள்வான். இது தனிப் பாடசாலைகளில் கற்ற மாணவர்களுக்கு கடினமானது. அத்துடன் கலவன் பாடசாலைகள் மாணவர்களின் ஆளுமைக்கான கூறுகளையும் கொண்டிருக்கின்றன. இங்கு உதாரணத்திற்கு ஷகீபை எடுப்போம். என்னுடன் ஒன்றாகப் படித்தவர். தொண்ணூற்றி இரண்டில் யாழ் மனித உரிமைகள் குழு ஒன்று ஆயுதக்குழுக்களால் விரட்டப்பட்டு கொழும்பிற்கு வந்து ஏற்கனவே *Saturday Review* செய்து வந்தவர்கள் 'சரிநிகர்' என்ற பத்திரிகையைத் தொடங்குகிறார்கள். டவுனில் படித்த தமிழ் நண்பர் ஒருவர் மூலமாக ஷகீப் இந்த சரிநிகர் குழுவுடன் தொடர்புகளை ஏற்படுத்திக் கொண்டு சனி, ஞாயிற்று கிழமைகளில் கவிதை, கட்டுரைகளை அதற்கு எழுதிக் கொடுத்து, அங்கு கிடைக்கும் புலம்பெயர் சஞ்சிகள், இலக்கிய நூல்களை எடுத்துக் கொண்டு திரும்புவார். எங்களுக்கு ஷகீப் ஊடாகத்தான் நிறைய புலம்பெயர்ந்த தமிழர்களுடைய சிந்தனை, கருத்து வாசிப்பு நடைபெறுகிறது. நாம் இறுதி ஆண்டில் படித்துக் கொண்டிருக்கும் போது நத்வி ஹொஸ்டலில் ஷகீபுடைய அறை நூலகமாக மாறிவிட்டது. ஏற்கனவே ஜாமிஆவில் நூலகம் இருப்பது போன்று ஷகீபுடைய அறையில் நாம் மிகவும் புதிய நூல்கள், சஞ்சிகைகளை படிக்கும் இடமாக மாறிவிட்டது. ஷகீப்ட உம்மாவும் வெளிநாட்டிலிருந்து காசு ஆனுப்புவதால் அவர் இன்னும் பல புத்தகங்களை பூபாலசிங்கம் போன்ற கடைகளிலிருந்து வாங்கிவந்துவிடுவார்.

இங்கு நான், கட்டுப்பாடுகள் நிறைந்த ஒரு முகாம் ஒன்றுக்குள்ளால் சென்று படித்து அந்த சிந்தனையை பரப்புவதற்காக வேலை செய்யும் கட்டத்தில் அவர் மிக இலகுவாக முடிவெடுக்கிறார். எப்படி என்றால் நளீமியாவை விட்டு வெளியேறி எந்த முகாமுடனும் அவர் தன்னை இணைந்து கொள்ளவில்லை. மாற்றுப் பத்திரிகையுடன் இணைந்து முஸ்லிம் பிரச்சினைகளை அதற்குள்ளால் பேசிவிட்டு பிறகு அவருடைய வாழ்வாதாரம், ஜீவனோபாயத்திற்காக வெளியில் சென்றுவிடுகிறார். கடைசிவரைக்கும் இஸ்லாமிய அமைப்புகளுக்குள் அவர் வரவில்லை. ஆனால் அவர் செய்த பணிகள், வேலைகளின் கருத்தியல் தளம் இருக்கிறதே அதை என்னாலோ இஸ்லாமிய அமைப்புகளுக்குள் இருந்து வருபவர்களாலோ நிரப்ப முடியாத ஒன்று. அதற்குக் காரணமும் இருக்கிறது. மாற்று சமூகங்களுடன் இணைந்து வேலை செய்வது, உறவாடுவதற்கான மனப்பாங்கு இருக்கிறதே அந்த மனப்பாங்கு நகரச்சூழலில் கல்விகற்று அச்சூழலில் இருந்து வருபவர்களால்தான் சாத்தியமாகிறது.

முஸ்லிம் அல்லாத இனங்களுடன் உறவாடுவதற்கு அந்த இனங்களின் மனப்பாங்கு, சிந்தனை, நகர்ப்புற மக்களின் மனப்பாங்கு இவற்றை அறிந்து செயற்படுவதற்கு இப்படியானவர்களது தேவையும் இலங்கைச் சூழலில் இருக்கிறது. அதை நாங்கள் எங்கிருந்து உற்பத்தி செய்யப் போகிறோம்? மற்ற சமூகங்களுடன் எதைக் கொண்டு உரையாடுவது? போசுபொருளாக எதை மாற்றுவது? இன்னும் நூறுவருடங்களுக்கு இலங்கையில் யுத்தம் என்பது சாத்தியமற்றது. ஆகக்கூடிய ஆயுத பலம் யாரிடம் இருக்கிறது? ஆகக்கூடிய அரசியல் பலம்? ஆகக்கூடிய மீடியா பலம்? பயிற்றப்பட்ட ராணுவ வீரர்கள்? இன்று பொருளாதார பலத்தை திரட்டிக் கொள்வதற்காக அனைத்து முனைப்புகளுடனும் வேலை செய்கிறார்கள். இந்த இடத்தில் நம்மிடமிருக்கும் வலிமையான மற்ற ஆதாரங்கள் என்ன என்பதைத்தான்

எடுத்துச் சிந்திக்க வேண்டிய இடத்திலிருக்கிறோம். ஒன்றை எல்லோரும் ஒத்துக் கொள்ள முடியும். கல்விதான் முஸ்லிம்களிடத்திலிருக்கும் மிக வலிமையான ஆயுதம். நம்முடைய பிள்ளைக்கு கையளிக்க வேண்டியது நிலமோ மற்ற மற்ற வளங்களோ அல்ல. பண்பாடும் கல்வியும்தான். இதில் யாருக்கும் கருத்து வேறுபாடு இருக்கும் என்று நான் நினைக்கவில்லை. அதை எப்படிச் செய்யப் போகிறோம் என்பதுதான் முக்கியமானது.

நளீமிய்யாவை உருவாக்குவதற்கு முன்னர் பல்கலைக்கழக மாணவர்களுக்கு நளீம் ஹாஜியார் புலமைப் பரிசில்களை வழங்கி வந்திருக்கிறார். அந்த பரிசில்களை வழங்கும் நிகழ்வில் மஸூத் ஆலிம் போன்றவர்களும் கலந்து கொண்டு உரையாற்றுவர். அப்படியான நிகழ்வில் மஸூத் ஆலிம் உரை நிகழ்த்தும் போது, உங்களுத்தெரியுமா பிள்ளைகளே என்று காகக்கூட்டுக்குள் குயில் முட்டையிடுகிற கதையைச் சொல்லி அதே போன்று நீங்கள் செல்லும் பல்கலைக்கழங்களிலும் திறமையாக சித்தியடைந்து வெளியேறி சமூகத்திற்காக உழைக்க வேண்டும் என்று சொல்வாராம். முஸ்லிம் சமூகத்தின் நிலையும் இந்த குயில் முட்டையிட்டு பொரிப்பது போன்றதுதான்.

***றிழா:*** எம்முடைய உம்மாவும் சிஸிலியாவில் படித்ததற்காகத்தான் வீட்டில் பல இக்கட்டான சூழ்நிலைகள் வந்தும் கூட எங்களது கல்விக்கு எந்த தடையும் ஏற்படாமல் தொடர்வதற்கான எல்லா ஏற்பாடுகளையும் செய்து தருகிறார். அந்த ஆளுமையை அவரது கல்விச் சூழலில் இருந்தே பெற்றிருக்கிறார்.

***ஏபிஎம். இத்ரீஸ்:*** உதாரணத்திற்கு ஏழெட்டு வருடங்களுக்கு முன் நடந்த விடயமொன்றை இங்கு ஞாபகப்படுத்துகிறேன். ரவூப் ஹக்கீம் கட்சி தலைமைத்துவத்திற்கு வந்து சிறிது காலம்தான் ஆகியிருக்கும். ஏறாவூரிலிருந்து வாப்பா ஒருவர்

என்னை தொலைபேசியில் அழைத்து அவரது பெண் தாதி சேவைக்கு தெரிவாகி இருப்பதையும் அவருடன் சேர்த்து தெரிவாகியிருக்கும் முஸ்லிம் மாணவிகள் அனைவரும் பயிற்சிக்காலங்களில் சீருடைப் பிரச்சினையை எதிர்கொள்வதையும் தெரிவித்தார். இஸ்லாமிய ஆடை தொடர்பான பத்வா ஒன்றைப் பெற்றுக் கொள்வதற்காகவே அவர் என்னைத் தொடர்பு கொண்டார். நமது உலமாக்கள் பேசினால் பிரச்சினையாகும் என்பதால் தெரிந்த சில முடிவுகளைக் கூட சொல்லாமல் விட்டுவிட்டார்கள். மிகச் சொற்பமான அளவிலேயே வைத்தியத்துறையில் முஸ்லிம்கள் உள்ளனர். எனது பகுதி அரச மருத்துவமனைக்கு ஒரு முறைக்கு மேல் சென்றதாக ஞாபகமில்லை. காரணம் அங்கு ஹொஸ்பிடாலிடி என்பதே கிடையாது. அதற்கு எதிர் நிலையில் தூஷனத்தில் உரையாடும் தாதிமார்களைத்தான் அங்கு பார்க்க முடியும். பொதுவாக மட்டக்களப்பு மாவட்டத்திலுள்ள எல்லா அரச மருத்துவமனைகளிலும் இதுதான் நிலை. தவிர்க்கமுடியாத, பிரசவம் போன்ற வைத்தியத் தேவைகளுக்கு சென்று வருபவர்களின் அனுபவங்கள் கூட மிக மோசமானது.

இப்படி எல்லோரும் உடுப்பு விடயத்தில் மிகக் கறாரான போக்கை கைக்கொள்ளும் போது நாம் எங்கு போய் நேர்ஸிங் படிக்க முடியும்! இதிலிருந்து அடுத்த கட்டத்திற்கு எப்படி நகர முடியும்! இதில் தெரிவாகிச் சென்ற ஒரு பெண் மாத்திரம் பர்தாவும் பாய் உடுப்பும் அணிந்து கொண்டு தற்போது பணிபுரிவதாக நினைக்கிறேன். படிக்கும் காலங்களில் இதுபோன்ற சுதந்திரத்தை எல்லா நிறுவனங்களும் வழங்குவதில்லை. நான் அவரிடம் சொன்னேன், நஜீஸைப் பிரிப்பது போன்று மூன்று வகையாக இமாம்கள் அவ்ரத்தைப் பிரிக்கிறார்கள். ஒன்று, மிகவும் கடுமையான நஜீஸ். இரண்டு, சாதாரண நஜீஸ். மற்றது, இலகுவான நஜீஸ். அதேபோன்று அவ்ரத்திலும் மிகவும் கட்டாயம் மறைக்கப்பட வேண்டிய அவ்ரத், சாதாரண அவ்ரத், இலகுவான/இலேசான அவ்ரத்.

இதை சொல்லும்போதே உங்களுக்கு விளங்குகிறதல்லவா! (எல்லோரும் சிரிக்கிறார்கள்) எனவே பத்வா வழங்கும் அதே நேரம் இதற்கான ஒரு அரசியல் முனைப்பையும் எடுக்கவேண்டும் என்பதால் உள்ளூர் அரசியல் பிரமுகர் ஒருவர் மூலமாக ரவூப் ஹக்கீம் அவர்களுக்கு அறிவிக்கப்பட்டு அது பின்னர் உப்புச்சப்பற்ற விடயமாக போய்விட்டது.

நாம் ஒரு விடயத்தை சாதித்துக் கொள்வதற்கு ஒரே மாதிரியான டெக்டிக்குகளையே எல்லா இடங்களிலும் கையாளாமல் வேறுபல முறைமைகளையும் கையாள முனைய வேண்டும். புதுப்புது வியூகங்களை பரிசீலிப்பதுதான் கூடிய பலனைத் தரும். நீங்களும் பிரிப்பதிலுள்ள எல்லா பரிமாணங்களையும் கற்று வேறு பலரது அனுபவங்களையும் இதனுடன் இணைத்து ஆலோசிக்கும் போது உங்களுக்கான தீர்வை விவாதித்தே உருவாக்க முடியும். மற்றப் பகுதிகளிலிருந்து நீங்கள் எதிர்நோக்கும் பிரச்சினை தனித்துவமான பிரச்சினையாக இருக்க முடியும். அம்பாறையில் இரண்டு பிள்ளைகள் பாய்ந்து போவதற்கும் திருகோணமலையில் இருபது பிள்ளைகள் பாய்ந்து போகும் போது ஆலோசிக்காமல் இருக்க முடியாது. ஆனால் அதன் ஏக தீர்வு பாடசாலையைப் பிரித்தல் என்பதல்ல. அது ஒரு பெரிய, நீண்டகால விடயம். அது போல ஜமாலிய்யா, சோனகவாடி இவற்றுக்கிடையில் காணப்படும் மத்ஹபு பிரச்சினைகளையும் கவனத்திற் கொள்ள வேண்டும். மனப்பாங்கை உருவாக்குவதற்கான விவாதக் களங்களையும் மிகச்சரியான தீர்வை அடைவதற்கான உரையாடலையும் ஏற்படுத்திக் கொடுக்க வேண்டும். தீர்வை அடைய முடியாவிட்டாலும் அதை ஒரு இழப்பாக கருத வேண்டியதில்லை. இதனூடாக நீங்கள் கற்க முடியும். உங்களிடமிருக்கும் சமூகம் பற்றிய பார்வை, புரிதல் மாற்றமடையும். முடிவுகளை நாம் எடுக்க வேண்டியதில்லை. உரையாடலை நிகழ்த்திக் கொண்டு செல்லும் போது யாராவது ஒருவர் தீர்வை முன்வைக்க முடியும். நாம் ஒரு ஓரமாக நின்று அதற்கு வழிவிடுவதே பொருத்தமானது. அங்கு அதிகாரத்தை

விமர்சிப்பதற்கும் அந்த இடத்தில் இன்னொருவர் தேவைப்படுகிறார். ஒரு அதிகாரத்தை முழுமையாக எதிர்ப்பது என்பது இன்னொரு அதிகாரத்தை அங்கு நிறுத்துவதற்குச் சமன். எதிர்ப்புக் குணாம்சம் எப்போதும் இருக்க வேண்டியதுதான் ஆனால் மக்கள் பங்கேற்பை அனுமதிப்பதும் இன்றியமையாதது. உதாரணத்திற்கு பிரபாகரனை அழித்துவிட்டு நாம் அதற்கு எதிர்நிலை அதிகாரம் ஒன்றை உருவாக்கியிருக்கிறோம். அனைத்துச் சிறுபான்மைச் சமூகங்களினது உரிமைகளையும் இழந்து வெற்றுக் கோதுகளாக மாற்றப்பட்டுவிட்டனர். இன்னொரு தலைவர் இந்த சமூகங்களுக்குள் இருந்து உருவாக முடியாத நிலைதான் இன்று காணப்படுகிறது. எனவே இலங்கையின் அனைத்தையும் தீர்மானிக்கக்கூடிய சக்தியாக பெரும்பான்மை சமூகம் இருப்பதால் அந்த சமூகத்திலிருந்துதான் சிறுபான்மைக்கான உரிமைக்குரலும் எழ முடியும்.

நவீன முகாமை, நிருவாகத் துறைகளிலும் நாம் கவனம் செலுத்த வேண்டும். எல்லா வளங்களும் அமையப்பெற்ற இலங்கையில் மிகச்சரியான முகாமைத்துவம் இன்மையே அனைத்துப் பின்னடைவுக்கும் காரணமாக இருக்கிறது. உள்ளூர் வளங்களை அடையாளம் கண்டு அபிவிருத்தி செய்யும் நிலையே மிகச்சிறந்த முறையாக இருக்க முடியும். அம்பாறை மாவட்டத்தில் நிருவாத்துறைகளில் தேர்ச்சிபெற்ற அனைவரும் கொழும்பில் அமைச்சின் செயலாளராகவும் உபசெயலாளராகவும் வெளிநாட்டு தூதுவராலயங்களிலும் கடமையாற்றுகின்றனர். அதனால் அந்த மாவட்டத்தின் நிருவாகக் கட்டமைப்பில் அவர்களால் ஒரு வலுசமநிலையை உருவாக்க முடியவில்லை. குறுகிய பதவி உயர்வு போன்ற நலன்களே இதற்குப் பின்னாலுள்ள காரணம். எனவே கல்வியாளர்களை நிருவாகத்துறை சார்ந்து ஊக்குவிக்க வேண்டியும் இருக்கிறது. இஸ்லாமிய இயக்கங்கள் இதற்கு நேரெதிர் நிலையிலேயே தொழிற்பட்டிருக்கின்றன. உயர் கற்கைகளுக்காக வெளிநாடுகளுக்கு அனுப்பி

திரும்பியவர்களும் இலங்கை முஸ்லிம்களின் தேவையை கருத்திற் கொண்டு எதனையும் அங்கு படிக்கவில்லை. ஆரோக்கியமான சிந்தனை எதனையும் முன்வைக்க முடியாதவர்களாக, அதிகார வர்க்கத்திற்கு ஒத்துப்பாடுபவர்களாகவே இருக்கிறார்கள்.

சிறுபான்மைக்கான பிக்ஹை பயின்று எம்.ஏ. முடித்த ஏழுபேர் நம்மத்தியில் இருக்கிறார்கள். சிறுபான்மைக்கான அரசியல், சிறுபான்மைக்கான சட்டம் என்று, குறிப்பிடும் படியான எந்த வெளியீட்டையோ அல்லது நிகழ்ச்சித் திட்டத்தையோ அவர்களால் கொண்டுவர முடியவில்லை. எனவே என்ன புத்திஜீவிகளை நாம் உருவாக்கியிருக்கிறோம்? என்ன கல்விமுறையை உருவாக்கிறோம்?

***றிழா:*** இலங்கைக்கான கற்கைமுறை, சிந்தனை மரபு இலங்கையில்தான் இருக்கிறது. சனத்தொகையில் பத்துவீதம் வாழும் நமது பிரச்சினைக்கான தீர்வை நூறுவீதம் முஸ்லிம்கள் உள்ள நாட்டில் சென்று எப்படி கண்டுபிடிக்க முடியும்? அங்குள்ள வாழ்க்கைச் சூழல், அவர்களது சமூகவியல் பிரச்சினைகள் வேறானது.

***ஆரிபீன்:*** இவற்றைப் பற்றி நாம் எவ்வளவு உரையாடினாலும் எங்களை இயக்குவிக்கின்ற ஆன்மீகப் பெறுமானம் என்ற ஒரு சக்தி இருக்கிறதே, அதன் பின்புலத்தில் அல்லது எமது வரலாற்றுப் பின்புலத்திலிருந்து இப்பிரச்சினையை அணுகும்போது ரஸூல் (ஸல்) அவர்களது வழிகாட்டல் இந்த விடயத்தில் எப்படி இருக்கிறது? அவர்களது கற்றல், கற்பித்தல் செயற்பாடு எவ்வாறு அமைந்திருந்தது? இணைந்த கல்வியை அனுமதித்திருக்கிறார்களா அல்லது பிரத்தியேக ஒழுங்கொன்றை காண்பித்திருக்கிறார்களா? ஏனென்றால் இந்த விடயத்தை இன்னும் முனைப்போடு அணுகுவதற்கு வரலாற்று ரீதியான தடயங்களும் இன்றியமையாதது என்றே கருதுகிறேன்.

றிழா: வரலாற்று காலத்திற்குச் செல்லும் போது ஆதம் ஹவ்வா அவர்களது அல்லது அதற்குப் பின்னர் வந்த இறைத்தூதர்களது கல்வி முறைக்குச் சென்றுவந்தாலும் பொருத்தமானதாகத்தான் இருக்கும் என்று நினைக்கிறேன்.

**ஏபிஎம். இத்ரீஸ்:** இதில் றிழா கேட்கும் கேள்வி ஒன்றும் இருக்கிறது. எமது பூர்வீகம் சார்ந்த உரையாடல் ஒன்றுக்குள்ளால் எமது கல்விப் பாரம்பரியத்தை அணுக முனைவது. இலங்கை முதல் மனிதர்களது தோற்றுவாயாக இருந்தது என்ற பின்னணியிலிருந்தும் இதனைப் பார்க்கலாம். ஆனால் இறுதித்தூதையும் நாம் ஏற்றுக் கொண்டிருக்கிறோம். ஏன் ஏற்றுக்கொண்டிருக்கிறோம் என்றால், முன்னைய நபிமார்கள், தீர்க்கதரிசிகள், போராளிகளுடைய சமூக மாற்ற கருத்தியல் தளங்கள் அனைத்தையும் ரஸுலுல்லாஹ்வுடைய தூது உட்பொதிந்திருக்கிறது என்பதுதான் அது. ரஸுலுல்லாஹ் இன்று வரைக்கும் மற்ற எல்லா தூதர்களையும் முந்திக் கொண்டு உலக் அளவில் நிற்பதற்கான, மறுவாசிப்புக்குரிய ஒரு தலைவராக இருக்கிறார். எனவே சீறாவை, ரஸுலுல்லாஹ்வுடைய சுன்னாவை வாசிப்புச் செய்த முறையில் இலங்கை புத்திஜீவிகள் அறபுநாடுகளிலிருந்து பாதித்த சிந்தனை, கருத்துக்கள், ஐரோப்பிய விக்டோரியாக் கால நவீனத்துவ நோக்குமுறை வாசிப்பிற்குள் சிக்கித்தவித்துக் கொண்டிருக்கிறது. அதிலிருந்து நமது அறபு இஸ்லாமிய கல்வியை விடுவிக்க வேண்டியிருக்கிறது. உதாரணத்திற்கு நான் சொல்கிறேன், ரஸுல் (ஸல்) அவர்களின் கல்வி, போதனை முறை எப்படி இருந்தது என்று பார்த்தால், கல்வியை எப்படி நாம் பிரித்திருக்கிறோம் என்றால், காலனித்துவ வாதிகள் இலங்கையை கைப்பற்றி தமது ஆதிக்கத்திற்குள் கொண்டு வந்தவுடன் இலங்கையின் கரையோரப் பகுதிகளிலுள்ள எல்லா கிறிஸ்தவ மிஷனரிகளுக்குப் பக்கத்திலும் ஒரு பாடசாலையை நிறுவுகிறார்கள். இந்த மிஷனரிப் பாடசாலைகள்தான் பின்னர் சுதேச மொழிப் பாடசாலைகளாக மாற்றப்படுகின்றன. இந்த மிஷனரிகளுக்குள் யார் கற்பிக்கிறார்கள் என்றால் பாதரும்

சிஸ்டரும்தான். கணிதம், விஞ்ஞானம், மொழி என்று எல்லா பாடங்களையும் அவர்கள்தான் படிப்பித்திருக்கிறார்கள். பிறகு அந்த பாதரிடமும் சிஸ்டரிடமும் படித்தவர்கள்தான் அதே ஐரோப்பாவுக்குச் சென்று உயர்கல்வியை முடித்து மீண்டும் இதே கல்வித்துறைக்குள் வருகிறார்கள். எனவே இலங்கையின் பாடவிதானமும் கல்விமுறையும் முழுக்க முழுக்க கிறிஸ்தவ திருச்சபைகளின் துறவு மனப்பாங்கு சார்ந்த, கன்னியாஸ்திரி பாதர் முறையைக் கொண்ட கல்வியை வழிமொழிகின்ற போக்குத்தான் இலங்கைக் கல்விமுறை.

இதே போன்று பிரான்ஸின் காலனித்துவத்திற்குள் இருந்ததுதான் எகிப்து. அங்குள்ள கல்விமுறையும் அதே பாங்கில்தான் வருகிறது. நீங்கள் சாதாரணமாக ஸைனப் அல் கஸ்ஸாலியின் வரலாற்றைப் படித்துப்பார்த்தால் தெரியும், அவர் பெண்களுக்கான கல்விமுறை ஒன்றை பள்ளிவாயலுக்குள் கொண்டுவருவதற்காகப் போராடுகிறார். 1930 களில் அவர் பள்ளிவாயலில் எழுந்து நின்று உரையாற்றும் பெண்ணாக, அல்அஸ்ஹர் ஆலிம்களுடன் விவாதத்தில் ஈடுபடுபவராக இருக்கிறார். இது என்ன காரணம் என்றால் நெப்போலியன் கால ஆகிரமிப்பிற்குள்ளால் வந்த கல்விமுறைக்குள் கிறிஸ்தவ துறவு ஆதிக்கம்தான் அந்தக் கல்வியில் செல்வாக்குச் செலுத்துகிறது. எனவே நாம் ரஸுலுல்லாவின் சுன்னாவை வாசிப்புச் செய்தது இந்த ஐரோப்பிய கல்வி முறையின் நின்றுதான். அவர்களின் ஆய்வு முறையியலுக்குள்ளால் சென்றுதான் நாம் வாசிப்புச் செய்திருக்கிறோம். இது காலத்துக் காலம் நடைபெறும். எனவே நாம் ரஸுலுல்லாஹ் எப்போதும் பெண்களையும் ஆண்களையும் பிரித்துவைத்துத்தான் கற்பித்தார் என்ற முடிவை எடுக்கிறோம். கிறிஸ்தவ துறவு மனப்பாங்கும் இப்படித்தானே போதிக்கிறது. ஆனால் ரஸுலுல்லாஹ் அப்படிச் செய்யவில்லை. நான் முன்னர் சொல்லிய விடயம் ஒன்றுதான் இது. ஆண்களும் பெண்களும் கூடியிருக்கும் ஒரு சபையில்தான் ரஸுலுல்லாஹ் பாலுறவை பற்றி

கேள்விகேட்கும் ஒரு ஸஹாபிப் பெண்மணிக்கு வெளிப்படையாகவே விளக்கமளிக்கிறார்கள். பெண்களுக்கு தனியான வகுப்பறைகளும் இருந்தன. அதேநேரம் ஒரு விடயத்தை இரு சாராரும் பொதுக்கல்வியாக படிக்கும் இடங்களும் இருந்தன.

அண்மையில் *Equal Ground* என்ற பிரச்சினை இலங்கையில் கிளப்பப்பட்டது. இஸ்லாமிய இயக்கங்களில் ஒன்று இதற்கு எதிரான பிரச்சாரங்களை முன்னொடுத்தது. மாணவர்கள் இது சம்பந்தமாக என்னிடம் கேட்டனர். *Eligiblity Socity* - அரவாணிகள் என்றால் என்ன என்று வினவினர். நான் சொன்னேன், மஸ்ஜிதுந் நபவியில் அரவாணிகளும் தொழுதார்கள் என்று. அது அவர்களுக்கு புதிராகவே இருந்தது. அதாவது தொழுகைக்கான முதலாவது ஸஃபில் ஆண்கள் நிற்பார்கள். இரண்டாவது ஸஃபில் குழந்தைகள் நிற்பார்கள். மூன்றாவது ஸஃபில் அரவாணிகள் நிற்பார்கள். நான்காவது ஸஃபில் பெண்கள் நிற்பார்கள். இப்படிச் சொல்லும் போது அவர்களுக்கு இன்னும் ஆச்சரியத்தையே அளித்தது. நான் ஏதோ புதிய கருத்தொன்றைச் சொல்வதாக என்னைப் பார்த்தனர். ஒன்றுமில்லை நீங்கள் படிக்கும் மத்தன் அபிசுஜா, உம்தா இதற்கு எழுதப்பட்ட ஷரஉகள், வியாக்கியான நூல்களைப் பாருங்கள் என்று சொன்னோன். ரஸுலுல்லாஹ்வின் பள்ளிவாயலில் தொழுகைக்கான ஸஃபு மூன்று, நான்காக பிரிக்கப்பட்டிருந்தது. மூன்றாவது அணியில் அரவாணிகள் நின்று தொழுதார்கள் என்று அதில் வரும்.

இதோடு அந்த விடயம் நின்று விடவில்லை. சக ஆசிரியர்களுக்கும் அதனைப் பற்றி விளக்க வேண்டியிருந்தது. என்னிடம் அரவாணிகள் பற்றி அறபுவழி வாசிப்பொன்று இருந்தது. வாரிசுரிமை - மீராஸ் சட்டம் சம்பந்தமாக வந்துள்ள புத்தகங்களில் எல்லாம் அரவாணிகளுக்கு சொத்துக்களை எப்படிப் பிரித்துக் கொடுப்பது என்றொரு பாபு-பகுதி இருக்கிறது. ஹுந்தா என்று வருவது அரவாணிகளைத்தான்

குறிக்கிறது என்பதை நமது ஆலிம்கள் மறந்துவிடுகிறார்கள். இன்று உலகளவில் *Eligiblity Socity* யை சிறுபான்மையினராக அங்கீகரித்து அவர்கள் இயங்கிக் கொண்டு செல்கிறார்கள். அதற்குள் நாம் கற்க வேண்டியவை நிறையவே இருக்கிறது. நமது பிக்ஹ் ஒரு கட்டத்துடன் நின்று விடுகிறது. வாரிசு உரிமை பங்கிடுவதுடன் நாம் நிறுத்திவிட்டோம். அதற்கப்பால் வளர்த்தெடுக்கவில்லை. நவீன மருத்துவ ஆராய்ச்சி, அதில் நூறுவீத அரவாணி யார், மருத்துவ உதவிகள் தேவையா இல்லையா, பெயர் வைப்பதிலிருந்து கடவுச்சீட்டு விநியோகிப்பது வரை அவர்களது எல்லா வகையான பிரச்சினைகளுக்கும் நாம் இஜ்திஹாத் செய்ய வேண்டியிருக்கிறது.

எனவே, நாம் ரஸூலுல்லாஹ்வுடைய சுன்னாவை எப்படி வாசிப்புச் செய்திருக்கிறோம்? கிறிஸ்தவ துறவு மனப்பாங்கிலிருந்தே, கல்வித்திட்டத்திலிருந்தே சீறாவை, சுன்னாவை வாசிப்புச் செய்திருக்கிறோம். அரவாணிகளுடைய இந்தப் பகுதியை யாரும் பொருட்படுத்துவதில்லை. அதற்குக் காரணம் கர்ளாவியும் பன்னாவும் தரும் தரவுகளைக் கொண்டுதான் இன்னும் வாசிப்புச் செய்து கொண்டிருக்கிறோம். அது கூட பன்னாவை செய்யித் குதுப் ஊடாகத்தான் அணுகியிருக்கிறோம். இதனால் நமது வாசிப்பு ஒரு கட்டத்துடன் நின்றுவிடுகிறது. நாம் அங்கு கட்டுடைப்புகளை நிகழ்த்திக் கொண்டு வாசிக்கும் போது ரஸூலுல்லாஹ் யார் முன்னாலும் தோற்கவில்லை என்பது புலப்படும். அரவாணிகளுக்கும் ரஸூலுல்லாஹ் வழிகாட்டிதான். குழந்தைகளுக்கும் வழிகாட்டிதான். தலித்துகளுக்கும் வழிகாட்டிதான். எல்லோருக்கும் வழிகாட்டிக் கொண்டு அந்த மனிதர் சிரித்துக் கொண்டு நிற்கிறார்.

இது என்னமோ பெண்களைக் காண்டால் ரஸூலுல்லாஹ் ஓடி ஒளிப்பவராகவும் ஆயிஷாவும் ரஸூலுல்லாஹ்வும் வீட்டுக்குள்

ஒட்டகப் போட்டி நடாத்தியது மாதிரியும் (எல்லோரும் சிரிக்கிறார்கள்) விளையாட்டை ஒருங்கிணைப்புச் செய்வதற்கு அங்கு ஒரு கொமிட்டி வேலைசெய்திருக்கிறது. இதை எங்கு கண்டுபிடித்தேன் என்றால் இரண்டாயிரம் ஆண்டளவில் குவைத்திலிருந்து முனாஸ் ஒரு புத்தகப் பொதியை அனுப்பிவைத்திருந்தார். தறாதிப் என்று - இஸ்லாமிய நிருவாகத்துறையை விளக்கும் ஹிஜ்ரி ஐந்தாம் நூற்றாண்டில் இமாம் அல்கத்தானி எழுதிய புத்தகம் ஒன்று. அது இஸ்லாமிய நிருவாக முறை அந்தக் காலப்பகுதியில் எப்படி இருந்தது என்பதை விளக்கும் நூல். அதில் வருகிறது, வருடாந்த விளையாட்டு போட்டிகள் வருவதற்கு முன்னர் அந்த கமிட்டி அதை ஒருங்கிணைப்புச் செய்யும். அங்குரார்ப்பண வைபவத்தில் இன்று ஜனாதிபதி, அவரது குடும்பம், அவரது உறவினர்கள் ஆரம்பித்து வைப்பது போன்று, அன்று ரஸூலுல்லாஹ்வின் நெருங்கிய குடும்பத்தினர் அம்பெய்து, எல்லா சாகஸங்களையும் முதலில் செய்து, துஆ ஓதி விழாவை ஆரம்பித்து வைப்பார்கள். அது இன்னும் நாலைந்து நாட்களுக்கு தொடர்ந்து நடைபெறும். பரிசளிப்பு விழாவிலும் ரஸூலுல்லாஹ் வருவார்கள். இப்படி இது போன்ற நிகழ்ச்சிகளை ஒருங்கிணைப்பதற்கு நிரந்தர குழு ஒன்று இயங்கியிருக்கிறது. இதை மூன்றாம் நூற்றாண்டில் வந்த புஹாரி, நஸாயீ போன்றோர் என்ன செய்கிறார்கள் என்றால் அங்குரார்ப்பண வைபவத்தில் தலைவர் பேசியவற்றை மட்டும் வெட்டி வெட்டி ஒருங்கிணைத்தவர்களை எல்லாம் விளிம்பு நிலைக்குத் தள்ளி, அது தேவையில்லை ரஸூலுல்லாஹ் பேசியதற்கு ஆதாரம் இருக்கிறது என்று, உலகப்படம் போன்று வெட்டி ஒட்டியதுதான் இந்த ஹதீஸ் கிரந்தங்கள்.

உலகப் படத்தை கிழித்து மீண்டும் ஒருவரை ஒட்டச் செய்தால் ஜப்பானில் கொண்டு போய் இலங்கையை ஒட்டுவார், ஆபிரிக்காவில் கொண்டு போய் அமெரிக்காவை ஒட்டுவார். ஏற்கனவே உலகப் படத்தைத் தெரிந்த ஒருவருக்குத்தான் சரியாக அந்தந்த இடங்களில் வைக்க முடியும். அந்தக்

காலப்பிரிவு சமூகத்திற்கு ரஸூலுல்லாஹ்வுடைய சீறா அப்படியே வந்திருக்கும். அந்த நேரம் டெக்ஸ்புக் போட்ட இமாம் புஹாரி போன்றவர்களுக்கு இது இலகுவாக இருந்தது. ஆனால் இன்று நமக்கு புஹாரி மட்டுமே கையில் இருக்கிறது. நிருவாகம் சம்பந்தமாக அல்லது பிற துறைகளுக்கான மூலாதார நூல்கள் இது போன்று தொகுக்கப்படவில்லை.

உண்மையில் அன்றைய காலப்பிரிவில் எஸ்.எல்.ஓ.எஸ், எஸ்.எல்.ஏ.எஸ் சித்தியடைந்த ஸஹாபாக்கள் இருந்திருந்திருக்கிறார்கள். அதை விளக்குவதற்கு வேறு சொற்கள் இல்லாததால் அதனைப் பயன்படுத்துகிறேன். ஹபஷாவுக்கு பிரதிநிதியாக அனுப்பப்பட்ட ஸஹாபி உடனுக்குடன் ராஜாங்கத் தகவல்களை அனுப்பிக்கொண்டே இருக்கிறார். அங்கு கேட்கிறார்கள், கடலில் பயணிக்கும் போது உப்புத்தண்ணீரால் வுழூச் செய்ய முடியுமா? என்று. அதற்கு இங்கு ஹதீஸ் ஒன்று பதிவாகியிருக்கும். இதில் வரும் சம்பவங்கள் எல்லாம் பிக்ஹு கிரந்தங்களில் வெட்டி வெட்டி ஒட்டி வைத்திருக்கிறார்கள். அதாவது வுழூச் செய்யக் கூடிய தண்ணீரின் வகைகளில் உப்புத்தண்ணீரும் சேர்க்கப்பட்டிருக்கும். எஸ்.எல்.ஓ.எஸ் சித்தியடைந்த ஸஹாபி அங்கு இரண்டு வருடங்கள் வேலை செய்து நஜ்ஜாஷி மன்னனிடம் ஹிஜ்ரத் சென்றவர்களின் செய்திகளை மதீனாவுக்கு அனுப்பிக் கொண்டிருக்கிறார். அங்குதான் கடலில் வைத்து மீன்பிடிப்பது, கடல் நீரை உபயோகிப்பது என்ற தேவை வருகிறது. அங்குள்ள மக்கள் அவற்றைப் பற்றி வினவியது இங்கு பிக்ஹுக்குள் வருகிறது.

நாம் ஒரு பிக்ஹு வாசிப்பைச் செய்திருக்கிறோம். ரஸூலுல்லாஹ்வின் சீறாவிலிருந்து சட்ட வாசிப்பைச் செய்திருக்கிறோம். ஓரளவு நிருவாக வாசிப்பைச் செய்திருக்கிறோம். ரஸூலுல்லாஹ்வின் யுகம் இருக்கிறதே அது சரியான பொற்காலம். அங்கே பாலுறவையும் படிக்கலாம், குடும்பக் கல்வியையும் படிக்கலாம். ஒன்றுக்கும் அங்கு

கழிவில்லை எல்லாவற்றையும் படிக்க முடியும். வளர வளர என்ன நடக்கிறது என்றால் காழியார் வாருகிறார். நொத்தாரிசு வருகிறார். திருமணம் கஷ்டமாகிறது. ஈஜாப் கபூல் சொல்வதற்கிடையில் ஒருவருடைய வாழ்நாள் முடிந்துவிடுகிறது. (எல்லோரும் சிரிக்கிறார்கள்) ரஸுலுல்லாஹ்வின் யுகத்திற்கு சென்று பார்த்தால் ளுஹருக்கு பேச்சுவார்த்தை நடைபெறுகிறது. அஸருக்கு காவின் முடிகிறது. எந்தவித சிக்கலும் இல்லாத ஒரு சமூகம். சனத்தொகை பெருகப் பெருக யாப்பும் கூடி, தலைவர்களும் கூடி, இடைத்தரகர்களும் கூடி ஒரு வேலையும் நடைபெற முடியாமல் போகிறது.

2009 ஆம் ஆண்டு தென்கிழக்குப் பல்கலைக்கழகத்தில் சர்வதேச மாநாடு ஒன்றை நடாத்தினார்கள். அதில் கலந்து கொண்டு கட்டுரைபடிக்கும் வாய்ப்புக் கிடைத்தது. இறுதியாகக் கருத்துத் தெரிவிப்பதற்கான ஒரு சந்தர்ப்பத்தையும் வழங்கினார்கள். முஸ்லிம் அரங்கு தொடர்பாக எனது ஆய்வை அதில் பேசினேன். ஒரு பக்கம் மஸ்ஜிதுன் நபவியில் தொழுகை நடைபெற்றதைப் போன்று இன்னொரு பகுதியில் 'ரக்ஸ்' என்று சொல்லப்படும் ஒரு போர்ப்பறை நடனம், பறவைகளின் இறக்கைகளைக் கட்டிக் கொண்டு, அபீஸினிய ஸஹாபாக்கள் வந்து ஆடுவார்கள். பறையையும் அடித்துக் கொண்டு ஏதாவது ஒரு போர் வரலாற்றுக் காவியம் அல்லது முன்னைய நபிமார்கள் பற்றிய பாடல்களை பாடிக்கொண்டு அவர்களுடைய பாரம்பரிய நடனமொன்றுடன் ஆடுவார்கள். ரஸுலுல்லாஹ்வின் மனைவிமார்கள், உறவினர்கள் எல்லோரும் சேர்ந்து அதன் எதிர்ப்பக்கம் இருந்து பார்த்துக் கொண்டிருப்பார்கள். ஆயிஷா நாயகி பார்த்து ரசித்த நிறைய ஹதீஸ்கள் பதிவாகியிருக்கின்றன. இதனைச் சொல்லவும் புத்தளத்திலிருந்து வந்திருந்த ஒருவர் குழம்பிவிட்டார். அதென்ன நீங்கள் ரஸுலுல்லாஹ் சுபஹ் தொழுதுவிட்டு ஆடினார்கள் என்கிறீர்கள்? என்றார். நான் சொன்னேன், ரஸுலுல்லாஹ் ஆடினார்கள் என்று நான் சொல்லவில்லை.

ஆடியதைப் பார்த்திருக்கிறார்கள்.

எனவே மஸ்ஜிதுன்நபவி தொழுகையை வளர்க்கும் இடமாக மட்டுமல்லாது இஸ்லாமிய கலைகளை வளர்க்கும் ஒரு இடமாகவும் தொழிற்பட்டு வந்திருக்கிறது. அங்கு இசை இருந்திருக்கிறது. அங்கு ஆட்டம் இருந்திருக்கிறது. அங்கு பாரம்பரிய கலை பேணிப்பாதுகாக்கப்பட்ட வரலாறு இருக்கிறது. அதை இன்று நீங்கள் பார்க்கவும் முடியும். அறபு நாடுகளின் தேசிய விழாக்களில் கண்டிய நடனம் போன்று இன்றும் அது ஆடப்படுகிறது. அவர்களுக்கு அது ஒரு பிரச்சினையையும் கொடுக்க வில்லை. நூற்றாண்டுகளாக அவர்களது பாரம்பரிய கலைகளை பாதுகாப்பதற்கு இஸ்லாம் ஒரு போதும் தடையாக இருந்ததில்லை. ஆனால் நாம் ஒரு ஜாதி காட்டுமிராண்டி கண்ணோட்டம் ஒன்றை இஸ்லாத்தின் மீது படியவிட்டிருக்கிறோம். இது எங்கிருந்து வருகிறது என்பதை இப்போது உங்களுக்கு புரிந்து கொள்ள முடியும்.

**றமீஸ்:** சமி யூஸுப் என்பவரது கென்சேர்டுகளைப் பார்க்கும் போது எனக்குள் இந்த உணர்வுதான் ஏற்படும். அண்மையில் மத்தியகிழக்கு நாடொன்றில் நடைபெற்ற அவரது நிகழ்ச்சியைப் பார்க்க கிடைத்தது. அது ஏதோவொரு *Eid Eve* ஒன்றில் நடைபெற்றதாக ஞாபகம். மிகவும் அழகான, எல்லோரையும் மகிழ்விக்கக் கூடிய ஒன்றாகத்தான் இருந்தது. ஏன் அப்படி ஒன்று நமக்குள் உருவாகவில்லை என்ற கேள்வி இங்கு முக்கியமாகப் படுகிறது.

**ஏபிஎம். இத்ரீஸ்:** இரண்டாயிரம் ஆண்டளவில் சமி யூஸுப் எமக்கும் அறிமுகமாகிறார். அதுபோன்று பல அறபு, இந்திய இசைக் கலைஞர்களது அறிமுகத்தின் பின்னணியிலிருந்துதான் உம்மி அல்பத்தை மாணவர்களுடன் சேர்ந்து வெளியிடுகிறோம். இறுக்கமான நமது பார்வைக் கோணத்தால் அதை வளரவிடாமல் ஏதோ ஒரு வகையில் தடுத்துக் கொண்டிருக்கிறோம். நான் அந்த மாநாட்டில் முன்மொழிந்த

ஒரு விடயம்தான் இன்றைய குளோபல் கலாச்சாரத்திற்கு அல்லது நமது பண்பாட்டை அழிப்பதற்காகவே உருவாகியிருக்கும் இந்த நவீன கலாச்சாரத்திற்கு நல்லதொரு மாற்றீடு ரஸுூலுல்லாஹ்விடம் இருக்கிறது. அதுதான் மகிழ்வளிப்பு அரங்கு (*Entertainment Theatre*). எங்கேயுமே இல்லாத ஆதாரத்தை வலிந்து உருவாக்கிக் கொண்டு எல்லாவற்றையும் ஹராம் என்பதற்குள் அடக்க முனைகிறோம். நான் ஏற்கனவே கூறியது போல ஹராம் என்று எடுத்த எடுப்பிலேயே சொல்வதற்கு அறிவு தேவைப்படாது.

***றமீஸ்:*** எங்களுடைய பிள்ளைகளுக்கும் இசை மறுக்கப்படுகிறது, அவர்களது சுதந்திரமான உரையாடல், நடமாட்டம் இவற்றை தடுத்துவிடுகிறோம். மற்றவர்கள் அனுபவிக்கும் அனைத்து சுதந்திரத்தையும் நாம் தடைசெய்வதால் அவர்களுக்குள் வெறுமைதான் மிஞ்சுகிறது. அல்லது அவர்கள் இவற்றை களவில் செய்வதற்கு அது தூண்டுதலாக அமைகிறது. நீங்கள் ஏற்கனவே கூறியது போல மொபைல் போன்ற கருவிகளை நாம் தடைசெய்தால் அவர்கள் அதனை விட்டும் விலகியிருக்கப் போவதில்லை. எப்படியும் பயன்படுத்தத்தான் போகிறார்கள். எங்களுக்கான உள்ளீடுகளை எல்லாவற்றிலும் உருவாக்கிக் கொண்டு சென்றால் பிரச்சினை இருக்காது என்றே கருதுகிறேன். நாம் ஒரு பாடசாலைச் சுற்றுலாவை மேற்கொள்வதாக இருந்தாலும் அதில் நமது தனித்துவமான சுற்றுலா எப்படி இருக்கும் என்ற கேள்வி என்னுள் எழுந்து கொண்டே இருக்கும்.

***ஏபிஎம். இத்ரீஸ்:*** சுற்றுலா ஒன்று செல்லும் பொழுது ரஸுூலுல்லாஹ் இருபத்தி மூன்று பொருட்களை தன்னுடன் எடுத்துச் சென்றிருக்கிறார்கள். நகம்வெட்டியிலிருந்து அனைத்துப் பொருட்களையும் எடுத்துச் சென்றிருக்கிறார்கள். இன்று அவற்றுடன் சேர்க்க வேண்டிய பொருட்கள் நான்கைந்து வரும். கெமரா, எம்பிதிரீ, மெபைல்போன் இவற்றைக் குறிப்பிடலாம். அன்றும் இவை இருந்திருந்தால்

ரஸூலுல்லாஹ் எடுத்துச் செல்ல தவறியிருக்க மாட்டார்கள். மனைவியையும் அழைத்துச் சென்றுதான் இருக்கிறார்கள். கணவன் மாத்திரம் சுற்றுலாச் செல்வது பொருத்தமற்றது என்பதை இது காட்டுகிறது. ரஸூலுல்லாஹ்வின் சீறாவில் சுற்றுலா கூட எல்லாவற்றையும் உட்கொண்டதாகவே இருக்கிறது. எனவே நாம் சுற்றுலாச் செல்வதற்கு முன்னர் ரஸூலுல்லாஹ் எப்படி சென்றிருக்கிறார்கள் என்பதைத் தேடிப் படித்தோம் என்றால் இதுவரைக்கும் பன்னா சொல்லித்தராத, செய்யித் குதுப் சொல்லித்தராத ஒரு பார்வை நமக்குக் கிடைக்கிறது.

ஆரிபீன் ஷேய்க் கேட்டதற்கு மீண்டும் வந்தால், ரஸூலுல்லாஹ்வுடைய கல்விமுறை, வகுப்பறை கல்வி எப்படி இருந்தது என்று பார்த்தால், என்னுடைய வாசிப்புக்குட்பட்ட வகையில் சொல்வதாக இருந்தால் மக்காக் காலப்பிரிவில் ஆண், பெண் கலந்த வகுப்பறையில்தான் ரஸூலுல்லாஹ் போதித்திருக்கிறார்கள். வலது இடது, முன் பின் என்று கலந்த நிலையில்தான், வஹி இறங்கும் போது கையில் எழுத்தாணியை வைத்துக் கொண்டு அதை எழுதுவதும் படிப்பதுமான ஒரு அமைப்பைத்தான் ரஸூலுல்லாஹ் பேணியிருக்கிறார்கள்.

**ஸஜித்:** அது ஆண் பெண் கலப்பை ஹராம் என்று தடைசெய்வதற்கு முந்திய காலப்பகுதியாக கருதலாமா?

**ஏபிஎம். இத்ரீஸ்:** இதெல்லாம் நீங்கள் கட்டமைக்கிறீர்கள். ஹராம் என்ற நிலைப்பாட்டிலிருந்து எந்த ஒரு உரையாடலையும் நீங்கள் தொடங்க முடியாது. அதாவது ஹராம் என்று சொல்வதற்கு மூளை தேவைப்படாது. எப்போது நீங்கள் ஹலால் என்று வருகிறீர்களோ அங்குதான் பதிலீடுகள் பிறக்கும். அப்போதுதான் நமக்கானது என்ன? அவர்களுக்கானது என்ன என்பதை தீர்மானிக்க முடியும். நம்முடையது றபானா? பறையா? ஆர்மோனியமா? என்பதை

அங்கு தீர்மானிக்க முடியும். ஆனால் ஹராம் என்று நின்றுவிட்டீர்கள் என்றால் உங்களுடைய மேளத்தையும் எடுத்துச் சென்றுவிடுவார்கள். றபானும் அப்படித்தான் நம்மிடமிருந்து பறிபோனது. பிறகு அவர்கள் அதை அடித்துக் கொண்டு செல்வதைத்தான் நாம் பார்க்க முடியும். (எல்லோரும் சிரிக்கிறார்கள்) எந்தளவுக்கென்றால் பொலன்னறுவையில் இருந்து நாடக குழுவொன்று எங்களது அரங்கச் செயற்பாடுகளில் கலந்து கொண்டிருக்கிறது. ஒரு நாடகக் காட்சிக்காக றபானைப் பயன்படுத்தினோம். அதில் ஆற்றுகை செய்யும் ஒரு கலைஞர், அவர் சிங்கள மீடியத்தில் படிப்பவர், நான் நாடகத்தின் பின்னணி குறித்து அவர்களுக்கு விளக்கும் போது, றபான் எங்களுடை சொத்து, ஆரம்பத்தில் முஸ்லிம் பெண்கள் கும்மிக்காக வட்டமாக இருந்து அடிப்பார்கள். பெண்களுக்கு தனியான கும்மியும் ஆண்களுக்கு தனியான கும்மியும் இருந்தது என்று சொல்லிகொண்டிருக்கும் போது அவர், இல்லையே றபான் சிங்களவர்களுடையதே, கும்மியும் சிங்களவர்களுடையதே என்று அதனை மறுத்தார். நிலமை இப்படித்தான் இருக்கிறது.

அங்கு வரலாறு அவ்வாறுதான் போதிக்கப்படுகிறது. ஏ.ஆர்.ரஹ்மான் ஏன் அடுத்த பக்கம் செல்கிறார் என்றால் நாம் அவருக்கான மேடையை அமைத்துக் கொடுக்கவில்லை என்பதுதான். ரஸூலுல்லாஹ் மஸ்ஜிதுந் நபவிக்குள்ளேயே மேடை அமைத்திருக்கும் போது நாம் எமது வீட்டுக்கு முன்னால் அமைக்க முடியாதவர்களாக இருக்கிறோம். ஓடு, ஓடு என்று எல்லா கலைஞர்களையும் துரத்தியே விட்டிருக்கிறோம். அதனால் மணிரத்னம் போன்றவர்கள் அமைத்தால் அவர்களுக்கு ஏற்ற வகையில்தானே அமைப்பார்கள். நம்முடைய ரசனைக்கு அமைப்பார்களா? இல்லையே. ரஹ்மானின் அநேக பாடல்களின் இசைக்கூறுகள் சூபி இசை மரபிலிருந்தே வருகிறது. இலங்கையில் அக்குறணை, மாத்தறை, திக்வல்லை போன்ற இடங்களிலுள்ள றிபாய் ராத்திபு முறையில் வரும் இசைக்கூறுகளை

பயன்படுத்தித்தான் தில்ஷேயில் வரும் பாடல்களுக்கு மெட்டுகள் அமைக்கப்பட்டிருக்கின்றன. கவாலி - சூபி இசை முஸ்லிம்களின் பாரம்பரியத்திலிருந்து வருவது. முஹம்மத் ராபி கூட அந்தப் பாரம்பரியத்தில் இருந்து வருபவர்தான். நாம் என்ன செய்கிறோம் என்றால் எல்லாவற்றையும் தடுத்து தடுத்து ஒன்றிலும் முனைப்பற்றவர்களாக ஆக்கப்பட்டிருக்கிறோம்.

எனவே இளமையில் யாருடனும் நம்மை நெருங்கிப் பழக அனுமதிக்காததால் அவர்களுடைய கலாச்சாரம், பண்பாடு பற்றி எந்த அறிவும் நம்மிடம் கிடையாது. நம்முடைய கலாச்சாரம், பண்பாடு கூட நமக்குத் தெரியாது. ரஸூலுல்லாஹ்வுடைய வகுப்பறை கல்விமுறையில் முன்னுக்கு பின்னுக்கு என்ற ஒரு முறை இருக்கிறது. முதல் ஸஃப், இரண்டாம் ஸஃப், மூன்றாம் ஸஃப் என்ற ஒரு அணிவகுப்பு ஒழுங்கு இருக்கிறது. இந்த முறை எல்லா இடத்திலும் பார்க்க முடியாது. பெருநாள் தொழுகைக்கு வந்தீர்கள் என்றால் வெளி ஒன்றைப் பயன் படுத்தியிருக்கிறார்கள். மாதாந்த ருது வரும் பெண்களும் கூட அதில் புதிய ஆடை அலங்காரங்களுடன் பெருநாள் தொழுகைக்கு சமூகமளிக்க வேண்டும். அவர்கள் தொழத் தேவையில்லை. அந்த ஸஃபின் ஓரத்தில் அமர்ந்து கொண்டிருந்தால் போதுமானது. அவர்களும் பெருநாளை கொண்டாட வேண்டும் என்பதற்காகத்தான் இந்த ஏற்பாடு. ஒரு பக்கத்தில் ஆண்களும் மறு பக்கத்தில் பெண்களுமாக இரண்டு ஸஃபும் சமகோட்டில் அமைந்திருக்கும். இந்த இரண்டு பக்கத்திற்கும் நடுவில் ரஸூலுல்லாஹ் ஒட்டகத்தில் பயான் பண்ணிக்கொண்டு மெதுவாக நகர்ந்து முன்னும் பின்னுமாக வருவார்கள். அபூஹுரைரா போன்ற ஸஹாபாக்கள் பெண்கள் அணிக்குள்ளாலும் ஆண்கள் அணிக்குள்ளாலும் பெரிய பைகளை எடுத்துக் கொண்டு காசு, அன்பளிப்புகளை சேகரிப்பார்கள். கையில், கழுத்தில் அணிந்திருக்கும் ஆபரணங்களை கழற்றி பெண்கள் அன்பளிப்புச் செய்வார்கள். இவற்றையும் கூட வகுப்பறையாக நீங்கள் பார்க்க முடியும்.

ஹஜ்ஜும் ஒரு வகுப்பறைதான். அது ஒரு கலப்பு வகுப்பறையாகும். உணர்வு ரீதியாக அங்கே ஒரு தனிமை நிலவுகிறது. இதை யாரும் மாற்ற முடியாது.

**றமீஸ்:** இந்த வழக்கம் அறபு நாடுகளில் இன்னும் இருக்கிறது. ஹரம் ஷரீபில் நடக்கும் பொருநாள் தொழுகைகளிலும் இதனை பார்க்க முடியும்.

**ஏபிஎம். இத்ரீஸ்:** நான் ஹதீஸைச் சொல்கிறோன். எந்த அறபு நாட்டுக்கும் சென்று பார்வையிட்டு விட்டு வந்து நான் இதைக் கூறவில்லை. எனக்குள்ளால் இருக்கும் வாசிப்பிலிருந்துதான் இதைக் கண்டுபிடிக்கிறேன். இரண்டு மூன்று வருடங்களுக்குள்தான் சஊதி அரசாங்கம் கஃபாவுக்குள் தவாப் செய்து கொண்டு பாதுகாப்பிற்காக அமர்த்தப்பட்டிருந்த அரவாணிகளை வெளியேற்றியிருக்கிறது. பதினான்கு நூற்றாண்டுகளாக அரவாணிகள் உலக முஸ்லிம்களால் பக்தி பூர்வமாக நேசிக்கப்படும் கிப்லாவான கஃபாவுக்குள் தொழுவதற்கான மத சுதந்திரத்தை பெற்றிருந்திருக்கிறார்கள். இதை நீங்கள் எந்த கோயிலுக்குள் அல்லது சேர்ச்சுக்குள் காணமுடியும்? இல்லையே. இஸ்லாத்திற்குள் எவ்வளவு பெரிய பண்பாடும், நாகரீகமும் இருக்கிறது.

எல்லாவற்றையும் வாசிப்புச் செய்யாமல் நவீனத்துவ நோக்குக் கொண்ட, வைதீக இறுக்கம் கொண்ட, நிறுவன மயப்பட்ட, அடிப்படைவாத போதனை முறைக்குள் இருந்துதான் நாம் எல்லாவற்றையும் பார்த்து வருகிறோம். அதை ஒரு புறமொதுக்கிவிட்டு நாட்டார் இஸ்லாம் எப்படி இருந்தது? தாராளவாத இஸ்லாம் எப்படி இருந்தது? மாற்று அணியினருடன் எப்படி ரஸுலுல்லாஹ் நடந்து கொண்டார்கள்? இவற்றைத் தேடத்தொடங்கினோம் என்றால் நமக்கு அயலில் வாழும் மக்களுடன் இன்னும் எப்படி நெருங்கிச் செல்லமுடியும் என்பதை கண்டுபிடிப்புச் செய்ய முடியும். எப்படி நம்முடைய ஒரு குடும்ப நிகழ்ச்சிக்கு

அவர்களையும் அழைக்கலாம்? எப்படி அவர்களையும் இணைத்து ஒரு பொது விழாவை செய்யலாம் என்பதற்கு ரஸூலுல்லாஹ்வின் சீறாவிலிருந்தே கற்கமுடியும்.

பழம்பெரும் இஸ்லாமிய இயக்கத் தலைவர்கள் வீற்றிருக்கும் கொழும்பில், நகர்ப்புற இளைஞர்களை மாத்திரம் கொண்டு வழிநடாத்திய நியாஸ் மௌலவிக்கு கிடைத்த மரியாதையும் தேசிய அங்கீகாரமும் ஏன் சர்வதேச தொடர்புகள் கொண்ட மற்ற இயக்கத் தலைவர்களுக்கு கிடைக்கவில்லை? அவரிடமிருந்த முஸாபஹா செய்யும் பண்பைக்கூட நமது தலைவர்கள் கண்டுகொள்ளாததுதான் காரணம். அவரின் எல்லா பக்கத்தையும் நான் நியாப்படுத்தவில்லை. ஆனால் அவர் எடுத்துக்கொண்ட பாத்திரத்தை, லீடிங்கை யாராலும் நிரப்பமுடியாதுதான் உள்ளது. அவரது மரணத்திற்குப் பின்பு அவரைப்பற்றி என்னிடமிருந்த கருத்துக்கள் மாறிவிட்டன.

இருக்கும் ஆதாரங்களை வைத்து நமது சூழலுக்குத் தேவையானவற்றில் உடைப்புகளைச் செய்வோம். எதையும் உடைப்புச்செய்ய முடியாத இறுக்கமான மனப்பாங்கிலிருக்கிறோம். அந்த மனப்பாங்கிலிருந்து வெளியேறிவிட்டோம் என்றால் வேலை செய்வது இலகுவாக இருக்கும். பல வழிகள் புதிதாகத் திறக்கப்படும். இன்னும் பல மடங்கு வேலை செய்ய முடியும். உங்களது பாடசாலைகளில் கூட 'நல்ல மாற்றுத் தீர்வு இஸ்லாமா அல்லது ஏனைய கொள்கைகளா' என்று ஒரு வாதவிவாத அரங்கை உருவாக்கி மாணவர்களைப் பேசவிடலாம். டிபேட் ஊடாக இஸ்லாத்தை கற்க வைப்பதற்கான ஒரு தூண்டலை அவர்களுக்கு அது வழங்கும். இந்தியச் சனல்களில் வரும் விவாத, அரட்டை அரங்குகளில் மிகச்சிறிய பிள்ளைகளைக் கூட பேசவைத்திருக்கிறார்கள். இது நாம் கலியாணம் முடித்து குழந்தை பெற்றதற்குப் பிறகும் கூட பேசத்தெரியாத, வாப்பாக்கு உம்மாக்கு முன்னிலையில் பயந்து கொண்டு நிற்கும் குடும்பஸ்தர்களைத்தான் காண்கிறோம். அந்தப் பேச்சு,

ஆளுமை எப்படி உருவாகிறது? பேசினால்தானே உருவாகும். நம்முடைய சமயத்தை ஒரு பொதுக்கல்வியாக கற்பிக்கும் நடைமுறை வரவேண்டும்.

அ.மார்க்ஸ் 'நான் புரிந்து கொண்ட நபிகள்' என்று எழுதித்தானே இருக்கிறார். நான் சும்மா கேட்கிறேன். இலங்கையிலுள்ள சில தெரிவுசெய்யப்பட்ட மத்ரஸாக்களில் ஐந்து பிற சமூகத்தைச் சேர்ந்த மாணவர்களை புலமைப்பரிசில் கொடுத்து எடுத்தால் என்ன? தொழும் நேரத்திற்கு, மௌசூராத், குர்ஆன் ஓதும் நேரத்திற்கு அவர்களுக்கு வேறு விடயங்களை கற்பிக்க முடியும். வகுப்பறையில் ஒன்றாக இருந்து இஸ்லாத்தைப் பொதுக்கல்வியாக படித்துவிட்டுச் செல்லட்டுமே. இஸ்லாத்தை தழுவவேண்டிய நிர்ப்பந்தமில்லாது படிப்பதற்காக அவர்களை இணைத்துக் கொண்டால் என்ன?. இது என்னவோ 'ரஹ்மத்தன் லில் ஆலமீன்' 'அல்ஹம்துலில்லாஹி றப்பில் ஆலமீன்' என்பதை மாற்றி 'லில்முஸ்லிமீனாக' அனைத்தையும் கட்டமைத்திருக்கிறோம். அல்குர்ஆனும் ரஸூலுல்லாஹ்வும் ஏக அருளாக முஸ்லிம்களுக்கு மட்டும் இறக்கப்பட்டதாகத்தான் அவர்களும் நினைத்துக் கொண்டிருக்கிறார்கள்.

தென்னிலங்கையில் இருக்கும் பிக்கு-ஹாமதுருமார்களில் நாற்பது சதவீதமானவர்களுக்கு இஸ்லாம் பற்றிய நல்ல பார்வை இருக்கிறது. இஸ்லாத்தின் பக்கம் வருவதற்கான விருப்பமும் இருக்கிறது. ஆனால் அவர்கள் பயப்படுவது உடல் உழைப்புச் செய்துதான் வாழவேண்டும் என்பதைத்தான். ராஜபோகத்தில் இருப்பவர்களுக்கு ரஸூலுல்லாஹ் சட்டியை, கோப்பையை விற்று கோடாரி வாங்கிக் கொடுத்ததுதான் நினைவுக்கு வரும். நாம் ஸகாத் நிதியிலிருந்து அவர்களது தேவைகளை கவனிக்க முடியுமா என்றுதான் இப்போது சிந்திக்க வேண்டும். ஒரு தலைமுறையினருக்கு அப்படிச் செய்துவிட்டால் அவர்களது அடுத்த சந்ததியினர் உடல்

உழைப்பைச் செய்து வாழ்பவர்களாக மாறிவிடுவர்.

**றமீஸ்:** அண்மையில் கொழும்பில் நடந்த ஸாக்கிர் நாயக்குடைய நிகழ்ச்சியில் கூட ஒரு ஹாமதுரு இஸ்லாத்தைத் தழுவிக் கொண்டார். ஹஸன் பரீட்டிடமும் இருவர் தழுவியதாக அறிந்தேன்.

**ஏபிஎம். இத்ரீஸ்:** இனிவரும் காலங்களில் தமிழர் தாயகம் என்ற ஒன்று இருக்கப் போவதில்லை. எல்லாவற்றிலும் கலப்பு வந்து எல்லைகள் மாற்றியமைக்கப் பட்டுவிடும். முஸ்லிம்கள் மாத்திரம் தனியாக வாழும் சூழல் இனி இருக்காது. எனவே அதற்கான தயாரெடுப்புகள் நம்மிடம் இருக்கவேண்டும். நம்மிடம் சக்திவாய்ந்த ஒரு கலாச்சாரம் இருக்கிறது. ஆனால் அவர்களிடம் அதற்கு பெரியதொரு வெற்றிடம் இருக்கிறது. விரக்தியடைந்த ஒரு மனநிலையில்தான் இருந்து கொண்டிருக்கிறார்கள். தற்கொலைகள் அதிகம் நிகழும் சமூகம் அது. நல்லதொரு மன தைரியத்தைக் கொடுக்கும் கொள்கை நம்மிடம் இருக்கிறது. அதை சந்தைப்படுத்தத் தெரியாத ஒரு சமூகமாக நாம் இருக்கிறோம். இந்தப் பாரம்பரிய ஆலிம்களுக்குள் இருந்து கொண்டும் அடிப்படைவாதம் பேசும் ஆலிம்களிடம் இருந்து கொண்டும் இஜ்திஹாத்தை உருவாக்க முடியாது. அதற்கு வெளியிலிருப்பவர்களின் எழுத்துகளை வாசிக்கும் போது நமது பார்வைக் கோணம் இன்னும் மாறுகிறது. எம்மிடம் குடியைப் பற்றி வித்தியாசமான வாசிப்பு இருக்கிறது. சீதனத்தைப் பற்றி வித்தியாசமான வாசிப்பு இருக்கிறது. உழைப்பைப் பற்றி வித்தியாசமான வாசிப்பு இருக்கிறது. இறுக்கமான நவீனத்துவ நோக்கு கொண்ட விக்டோரியா கால கல்வி முறை வாசிப்பிலிருந்து விலகிய இஸ்லாமிய வாசிப்பொன்று இருக்கிறது. அந்த சமூகங்களுடன் உறவாடுவதற்கு இவ்வாறான வாசிப்பொன்றைச் செய்யவேண்டிய அவசியத்திலிருக்கிறோம்.

'சமூகமாற்றத்தில் பெரும் பங்காற்றியவர் ரஸூலுல்லாஹ்வா

காந்தியா?' என்றொரு தலைப்பை மாணவர்களுக்கு கொடுங்கள். நீங்கள் எப்படி நினைக்கிறீர்கள் என்றால் மூத்திரம் கழுவாத காந்தியுடன் ரஸூலுல்லாஹ்வை ஒப்பிடுவதா என்று. அந்த மனப்பாங்குதான் இறுக்கமான விக்டோரியா கால கல்முறை மனப்பாங்கு. இன்னொரு தலைப்பில் 'சேகுவராவா ரஸூலுல்லாஹ்வா?' என்று கொடுங்கள். எனவே இரண்டையும் படிக்கும் சந்தர்ப்பம் மாணவர்களுக்கு கிடைக்கிறது. இப்படி கற்கும் நோக்கில் நாளா வட்டத்திற்கும் விவாதத்தை உருவாக்கினால், இதை ஒளிப்பதிவு செய்தால் நல்லதொரு டிவி நிகழ்ச்சி கிடைத்துவிடும். இதிலிருந்து நமக்கான மாற்று ஊடகம் ஒன்றுக்கான நிகழ்ச்சிகள், கலைஞர்கள், தயாரிப்பாளர்கள் உருவாகி வருவார்கள்.

**ஏபிஎம். இர்பான்:** இஸ்லாமிய சனல் தேவை என்று எல்லோரும் கதைத்தாலும் அதில் ஒளிபரப்ப இருக்கும் நிகழ்ச்சிகளைப் பற்றி யாரும் கவனிப்பதில்லை.

**ஏபிஎம். இத்ரீஸ்:** நமது றாக்கையில் நூற்றுக்கணக்கான நாடகமும், நூற்றுக்கணக்கான ஸமி யூஸுப் போன்ற அல்பமும் இருந்தால்தானே இஸ்லாமிய ஊடகம் ஒன்றை வெற்றிகரமாக நடத்தமுடியும். அவற்றை எங்கிருந்து உருவாக்குவது? இவ்வாறான நிகழ்வுகளைக் கொண்டுதான் உருவாக்கலாம். இஸ்லாமிய சனல் என்று சொல்லிக் கொண்டு இரவு பகலாக இருபத்தி நான்கு மணிநேரமும் பயானை ஒளிபரப்பிக் கொண்டிருக்க முடியுமா என்ன?

**றமீஸ்:** எமது பாடசாலையில் கலாச்சார விழா ஒன்றை நடாத்துவதற்காக ஒரு நிகழ்ச்சி நிரலை தயாரிக்க இருந்தோம். ஆனால் மனதில் இஸ்லாமிய நிகழ்ச்சி என்று ஒன்றுமே வரவில்லை. நான்கு தமிழ்பாடல்களை இஸ்லாமிய வசனங்களைப் போட்டு மாற்றி அந்த மெட்டில் மாணவர்களைப் படிக்க வைப்பது என்றுதான் இறுதியில் முடிவானது. அந்தளவு நம்மிடம் வறுமை இருக்கிறது.

**ஏபிஎம். இர்பான்:** தமிழ்ப் பாட்டின் மெட்டுக்காகத்தான் மாணவர்கள் அதைக் கேட்டுக்கொண்டிருப்பார்கள். இறுதியில் அவர்களுக்கு எஞ்சுவதும் அந்த மெட்டுத்தான். பாடல் வரிகள் அப்போதே மறந்துவிடும்.

**றிழா:** பாடசாலைகளில் மீடியாவுக்கான ஒரு குழு இருக்குமாக இருந்தால் தொலைத்தொடர்புகள் ஆணைக்குழுவால் ஒரு சனலை செய்வதற்கான எல்லா உபகரணங்களையும் இலவசமாக வழங்குவதற்கான ஒரு செயல்திட்டம் இலங்கையில் இருக்கிறது. ஏதாவது அலைவரிசை ஒன்றைப் பயன்படுத்தி காலைக்கூட்ட உரையிலிருந்து பாடசாலையின் அனைத்து நிகழ்ச்சிகள், அறிவிப்புக்களை அதன் ஊடாக ஒலிபரப்ப முடியும். ஆனால் இந்த வசதியை யாரும் பயன்படுத்திக் கொள்வதில்லை.

**ஏபிஎம். இத்ரீஸ்:** இலங்கையில் இனிவரும் காலம் கலாச்சாரங்களுக்கிடையிலான உரையாடலாகத்தான் இருக்கும். மதங்களுக்கிடையிலான, பண்பாடுகளுக்கிடையிலான உரையாடல் யுகம்தான் இது. இதை நிகழ்த்துவதற்கு அல்லாஹுதஆலா நல்லதொரு சந்தர்ப்பத்தை ஏற்படுத்தித் தந்திருக்கிறான்.

**ஸஜீத்:** உண்மைதான். யாருக்கும் பயந்து ஒதுங்கிக் கொள்ளும் சூழல் இன்று இல்லை. கருத்தியல் ரீதியாக மற்ற சமூகங்களுடன் உரையாடுவதற்கான காலம்தான் இது. முன்னரும் இதைச் செய்திருக்கலாம்தான்...

**ஏபிஎம். இத்ரீஸ்:** இப்போது அதனைச் செய்வதற்கான மனப்பயம் அகற்றப்பட்டிருக்கிறது. எண்பதுகளுக்குப் பிறகு இலங்கையில் இஸ்லாமிய புத்துயிர்ப்புவாத சிந்தனையில் பெரியதொரு பாய்ச்சல் நிகழ்கிறது. சாதனைகளை நிகழ்த்தக் கூடிய நளீமிக்கள் வெளிவருகிறார்கள். ஆனால் மேலுக்கிருந்தவர்கள் அதனைத் தடைசெய்து விடுகிறார்கள்.

அல்லது இஸ்லாமிய அணிகளின் வளவாளர்களாக தங்களை அவர்கள் குறுக்கிக் கொள்கிறார்கள். இன்று ஸாக்கிர் நாயக் போன்றவர்களை இலங்கைக்கு வெளியிலிருந்து அழைத்து வந்து மதங்களுக்கிடையிலான உரையாடலை நிகழ்த்த வேண்டிய நிலைதான் ஏற்பட்டிருக்கிறது. நூற்றுக்கணக்கான துறைகளில் ஆய்வுகளையும் பஹ்ஸ்களையும் செய்த மாணவர்களை ஒரு தனிநபருடைய பாடத்திட்டத்தை கற்கும் அல்லது கற்பிக்கும் மூளைகளாக மாற்றியதுதான் நாம் செய்த தவறு. ஒவ்வொரு மாணவனையும் அவனுடைய பஹ்ஸ்களுக்குள்ளால் அத்துறைகளுக்குரியவர்களாக மாற்றியிருந்தால் அல்லது இயங்கவிட்டிருந்தால் இன்று நாம் வேறு எங்கோ நின்றிருக்க முடியும். இன்று என்ன நடக்கிறது என்றால் எப்போதோ செய்த ஒன்றுக்காக இன்றும் அப்படிச் செய்தேம் இப்படிச் செய்தோம் என்று ஒரு நிகழ்வை வைத்துக்கொண்டு உயிர்வாழ முனைவதுதான்.

***ஆரிபீன்:*** உண்மைதான். நிறுவன மயப்பட்டு மட்டும்தான் இஸ்லாத்தைப் படிக்க வேண்டும் என்ற நிலையில் இல்லாமல் தபால் மூலமும் பருவகால வகுப்புகள், வெளியீடுகள் ஊடாகவும் இஸ்லாத்தைப் படிக்கவும் விளங்குவதற்குமான வசதிகளை உருவாக்க வேண்டும். அப்போதுதான் சிந்திப்பதற்கான மாற்றுச் சூழல்களும் உருவாக முடியும்.

***றமீஸ்:*** இத்ரீஸ் ஷேய்க் சொல்வது போல சில விடயங்களை நமக்கு ஏற்றதாக பட் பண்ணி உருவாக்க வேண்டியிருக்கிறது. நகர்ப்புறப் பாடசாலைகளில் கற்கும் மாணவர்களில் இஸ்லாத்தை ஒரு சுமையாக எண்ணுபவர்களும் இருக்கிறார்கள். தங்களுக்கு இஸ்லாம் சந்தோசத்தை வழங்கவில்லை என்றும் நினைக்கிறார்கள். தங்களைச் சுற்றி ஒரு கம்பிவேலி போன்று இஸ்லாம் இருப்பதாக நினைக்கிறார்கள். இஸ்லாம் பாட ஆசிரியர் என்றால் மாணவர்கள் விருப்பற்றுப் போய் இருக்கிறார்கள். ஒரு முறை சக ஆசிரியர்களுடன் உரையாடிக் கொண்டிருக்கும் போது

இஸ்லாம் பாட ஆசிரியை சொல்கிறார், இஸ்லாத்தை உண்மையில் பின்பற்றுபவர்களாக நாம் இருந்தால் இவ்வாறு நானும் நீங்களும் நேருக்கு நேர் கதைத்துக் கொண்டிருக்க முடியாது. உங்களுக்கும் எனக்குமிடையில் திரை இருக்க வேண்டும் என்று. நான் அக்கணமே அந்த இடத்தை விட்டு வெளியேறி விட்டேன். இதற்குமேல் அந்த ஆசிரியையுடன் என்ன பேச முடியும்? இவர்கள்தான் பாடசாலைகளில் இஸ்லாம் கற்பிக்கிறார்கள். பிள்ளைகள் எப்படி நினைக்கிறார்கள் என்றால் இஸ்லாம் என்றால் ஒன்றும் செய்யமுடியாது. எல்லாவற்றுக்கும் தடைவிதிக்கும் என்றுதான். தொழோனும், குர்ஆன் ஓதனும், வீட்ட இரிக்கனும் என்றுதான் அனேக பிள்ளைகள் நம்புகிறார்கள். (எல்லோரும் சிரிக்கிறார்கள்)

**ஏபிஎம். இத்ரீஸ்:** இஸ்லாம் புரிந்து கொள்ளப்படாமல் இருப்பதற்கான தடைகளைத்தான் உருவாக்கிக் கொண்டிருக்கிறோம். எனவே அந்தக் கருத்தியலை வழங்குபவர்களைத்தான் நாம் தகர்க்க வேண்டும். இஸ்லாத்தை அல்ல. அவர்களைக் கொண்டு இஸ்லாத்தை மீண்டும் வாசிக்க வைக்கவேண்டும்.

**ஆரிபீன்:** இந்த வாசிப்புத் தொடர்பாக எனக்கு சுயமாகத் தோன்றிய விடயம் என்னவென்றால், மேற்கத்திய நாட்டு மக்கள் தமக்குள் எந்தவிதமான தடைகளையும் இட்டுக் கொள்ளலாமல் சுதந்திரமான ஒரு வாழ்க்கையை அனுபவிக்கும் போது நாம் துனியாவை ஒரு வகை இறுக்கமானதாக மாற்றி எதையும் அனுபவிப்பதில்லை. ஈமானில் ஒரு பகுதியாக நாம் மறுமைநாளை ஈமான் கொண்டிருக்கிறோம் என்பதும் உண்மை. அதுபோல் நாம் எப்போதும் ஓதும் வசனம்தான் லாதன்ஸ நஸீபக்க மினத்துன்யா - உலகத்தில் உனது பங்கை மறக்காதே என்பதும். இந்தப் பகுதியை எப்படி பார்ப்பது?

இப்படி ஒரு வசனம் இருக்கும் நிலையில் ரஸூலுல்லாஹ் துனியாவை இவ்வளவு கட்டிறுக்கமான, அவநம்பிக்கை தரக்கூடிய ஒன்றாக பார்த்திருக்க வாய்ப்பில்லை. உலகத்தை நாம் அவநம்பிக்கையுடன் பார்ப்பது குர்ஆனுக்கு எதிரான சிந்தனையாகத்தான் இருக்க முடியும். உலகத்தில் என்னுடைய வகிபாகத்தை, நான் ஆற்ற வேண்டிய கருமங்களை, நான் அனுபவிக்க வேண்டிய விடயங்களை ஒரு வகையாக உடைத்துக் கொண்டு செல்வது மாதிரி இருக்கும் போது எங்கோ நாம் தவறாக விளக்கமளிக்கப் பட்டிருக்கிறோம் என்பதை நமக்கு விளங்க முடியும். ஷேய்க் அல் கஸ்ஸாலியும் இந்தக் கருத்தைச் செல்லும் போது, எனக்கு இப்போது விளங்கிக் கொள்ள முடியாதது எனக்குப் பின்னால் வரும் சமூகத்தினரால் இதனை விளங்கிக்கொள்ள முடியும் என்று சொல்வார்கள். ஹதீஸில் பிரச்சினை இல்லை. ஆனால் எனக்கு விளங்கத் தெரியவில்லை என்ற முடிவுக்கு வருவதுதான் அது. ஹதீஸின் தராதரத்தை நாம் தீர்மானிக்கவும் கூடாது. அதாவது நமக்கு விளங்கிக் கொள்ள முடியாத ஒரு ஹதீஸை ழயீபானது என்று கூறவும் முடியாது. இதன் அடிப்படையில் ஒருவர் இவ்வுலக வாழ்க்கையை அவருக்கு சந்தோசமானதாக அமைத்துக் கொள்வதில் எந்தத் தவறும் இருக்க முடியாது. புதிய வாகனம் ஒன்றை வாங்குவதோ, டவுனில் வீடுகட்டி வாழ்வதோ அவருக்கு இந்த உலகின் மீது இருக்கும் உரிமையின் ஒரு பங்காகத்தான் எடுத்துக் கொள்ள வேண்டும். அதைத் தடுப்பது அநீதியானது. நீங்கள் சொல்லும் போது இன்னும் இதைப் புரிந்து கொள்ள முடிகிறது. அதாவது நாம் மேற்கத்திய கல்விமுறைக்குள்ளால் வந்து ரஸூலுல்லாஹ்வை வித்தியாசமாக வாசித்து விட்டு உலகப் பற்றற்றவர்களாக மாறும் போது ஐரோப்பியர்கள் சரியாகப் புரிந்து கொண்டு உலகின் அனைத்தையும் வெற்றி கொள்வதற்கான முனைப்புடனும் வினைத்திறனுடனும் செயற்படுகிறார்கள்.

***றமீஸ்:*** ஐரோப்பியர்களின் வளர்ச்சிக்கு ஒரு காரணமாக இருப்பது சுதந்திர உணர்வும் அதேபோல மனிதர்களது

இன்றியமையாத தேவையாகிய உடல் தேவைக்கு முக்கியத்துவம் கொடுத்து கவனிப்பதும்தான். அது நிறைவு செய்யப்படும் போது மற்ற விடயங்கள் எல்லாம் வளர்ச்சியடைந்து கொண்டு செல்கின்றன. பியாஜேயின் தியரியும் அதைத்தான் சொல்கிறது என்று நினைக்கிறேன்.

**ஏபிஎம். இத்ரீஸ்:** இது என்னவென்றால் ஆதம் (அலை), ஹவ்வா (அலை) அவர்களின் யுகத்தில் உடல் தேவை, இன்பங்கள் என்பது மிகவும் யதார்த்தமான உடல்தேவையாக இருந்திருக்கிறது. வேட்டையாடுவது, தங்களுக்கான உணவை உற்பத்தி செய்து கொண்டு தங்களுக்கான உடல்தேவையையும் நிறைவு செய்து கொண்டார்கள். அது ஒரு பெரிய விடயமாக இருக்கவில்லை. சமூகம் வளர வளர, சனத்தொகை அதிகரிக்க அதிகரிக்க தேவைகளை வரையறுக்க வேண்டிய நிலை உருவாகிறது. மனிதன் நாகரிகம் அடைய அடைய ஆரம்பத்தில் இலை, தளைகளையும் மரப்பட்டைகளையும் மிருகங்களின் தோல்களையும் அணிந்து கொண்டு கம்பளி, நெசவு என்று வளர்ச்சியடைந்து செல்லும் போது மனிதனுக்கு ஆடை என்பது அழகியல் தேவையாக மாறுகிறது. தஹ்ஸீனியாத் - அழகியல் தேவை என்ற நிலையில் வைத்தே பார்க்கப்படுகிறது. எல்லா இமாம்களும் இந்தக் கருத்தைத்தான் பேசியிருக்கிறார்கள். உடை அணிவதென்பது அழகுக்குத்தான். ஐநூறு ரூபாவுக்கு விற்கப்படும் உடையும் ஒரு ஆடைதான். பிறகு ஏன் ஐயாயிரம், ஐம்பதாயிரத்திற்கு விற்கப்படும் ஆடைகளை நாடிச் செல்கிறோம்? அழகாக இருக்க வேண்டும் என்பதற்காகத்தான். அழகியல் தேவை எந்தளவுக்கு போயிருக்கிறது என்றால் முகத்தையும் மூடி, கை, கால்கள் எல்லாவற்றையும் மூடி மொத்தமாக மனிதனை மூடிவைக்க வேண்டிய ஒன்றாக மாற்றிவிட்டோம்.

இப்படி மொத்தமாக ஒரு பொருளை மூடும் போது என்ன நடக்கும் என்றால் அந்தப் பொருள் சுவாரஷ்யமானதாக மாறும். முன்னர் அடிப்படை உணர்வாக இருந்த ஒரு விடயம்

இப்போது மூட மூட உணர்வுகள் பெருக்கப்படுகின்றன. உடல் அழகு, உடல் பற்றிய புனைவுகள், காப்பியங்கள் என்று அதீதமான இலக்கியமும் அதற்கென்று ஒரு மொழியும் உருவாக்கப்பட்டு விட்டது. முன்னர் உடல் தேவை இருந்தது. அந்த உடல்தேவை முடியும்போது எல்லாம் முடிந்துவிடுகிறது. வேட்டை யுகத்திற்குப் பிறகு என்ன நடக்கிறது என்றால் உடலை மறைக்கும் விடயமும் உடல் பற்றிய மற்ற எல்லா விடயங்களும் கூடிக்கூடி அழகியலும் கூடி உடல் பற்றிய புனைவுகள் அதிகரித்து விட்டன. மற்றப்படி இந்த இரண்டு உடல்களும் சமமான உடல்கள்தான். அதில் பெரியளவு வித்தியாசம் ஒன்றுமில்லை. ஆனால் உடல் பற்றிய பிம்பம், உடல் பற்றிய படிமம் காப்பியங்கள் ஊடாகவும் மொழி ஊடாகவும் வந்து இப்போது இரண்டு வகையான காமம் உருவாகிறது. ஒன்று உடலுக்கான காமம். மற்றது மனசுக்கான காமம். இந்த படிமங்களும் குறியீடுகளும் மனதில் ஒரு காமத்தை உருவாக்குகின்றன. இன்று உடலுக்கான காமம் நிறைவேறினாலும் மனசுக்கான காமம் முடிவடைவதில்லை. இதில் நமக்கு நடந்த மிகப்பெரிய அபாயம் என்னவென்றால் மற்ற சமூகங்கள், கிறிஸ்தவம் எல்லாவற்றையும் உடைத்தெறிந்துவிட்டு சென்றுவிட்டது. நாம் சூபித்துவக் கலாச்சாரத்திற்குள்ளாலும் ஐரோப்பிய கல்வி முறைக்குள்ளாலும் வந்து குரங்கின் நிலையை ஒத்த ஒன்றை அனுபவித்துக் கொண்டிருக்கிறோம். நான்கு திருமணம் என்று பேசினாலும் அதனையும் அனுவித்துக் கொள்ள முடியாத நிலைதான் இன்று இருக்கிறது. முறைப்படி பார்த்தால் நாம் திரையில்லாமல் பேசமுடியாது என்று இஸ்லாம் பாட ஆசிரியை கூறுவது போன்று ஆழ்மனப்படிமம் ஒன்று நமக்குள் உருவாக்கப்பட்டு விட்டது. மேற்கத்தியனுக்குள்ள அவ்வளவு அபிலாஷைகளும் நமக்கும் இருக்கின்றன. உணர்வுகளில் யாரும் வித்தியாசப்படுவதில்லை. இங்கு என்ன நடக்கிறது என்றால் அவன் அந்த உணர்வு வரும் பொழுது அனுபவித்து விட்டு அடுத்த நிமிடம் அவனுடைய பிரதியை எழுதி நோபல் பரிசை எடுத்துச் செல்கிறான். இது நம்முடைய சமூகத்திற்குள்

நோபல் பரிசும் எடுக்க முடியாது. எழுதிக் கொள்ளவும் முடியாது. கலியாணம் முடிக்கவும் விடுகிறார்களில்லை. ஒன்றும் செய்ய முடியாத ஒரு நிலையில் வைத்துக்கொண்டு ஒரு சமூகமாற்றமுமில்லை. ஒன்றுமில்லை. பேசிப் பேசியே காலம்தான் செல்கிறது.

எனவே புதிய முறை வாசிப்பு என்பது தேவைப்படுகிறது. அதாவது ஒட்டுமொத்த மனித அறிவும், நாஸ்தீகம் உட்பட எல்லாம் அல்லாஹ்வில் இருந்துதான் மனிதனுக்கு பகிரப்பட்டிருக்கிறது. இப்போது மதவாதிகள் என்ன செய்கிறார்கள் என்றால் இந்த நாஸ்தீகவாதிகள் விஞ்ஞானரீதியாகக் கண்டுபிடித்த முடிவுகளைத்தான் அகீதா பாடத்தில் கற்பிக்கிறார்கள். யாரோ சொன்னது போல, நாஸ்தீகத்திலும் அல்லாஹ் இருக்கிறான் என்று, நாஸ்தீகத்தை படித்தால் இஸ்லாத்தை இன்னும் அழகாக விளங்கமுடியும். எல்லா தத்துவங்களையும் எல்லா இஸங்களையும் மறுவாசிப்புச் செய்ய வேண்டிய தருணம் இதுதான்.

**ஸஜீத்:** மார்க்ஸியம், பிரைடிஸம் என்று எல்லாவற்றையும் மீண்டும் மறுவாசிப்பு செய்ய வேண்டும்.

**ஏபிஎம். இத்ரீஸ்:** ரஸூலுல்லாஹ்வைப் போன்று ஒன்னாம் நம்பர் மார்க்ஸிஸ்ட் வேறுயாரும் இல்லை என்று அறபு மார்க்ஸியவாதி ஒருவர் கூறுவார். உண்மையில் ரஸூலுல்லாஹ்வைப் போல் ஒரு காந்தி உலகில் இல்லை. ரஸூலுல்லாஹ்வைப் போல் ஒரு சேகுவரா உலகில் இல்லை. சேகுவராவில் நிறைய பலவீனங்கள் இருக்கின்றன. ரஸூலுல்லாஹ்வில் அந்தப் பலவீனங்கள் இல்லை. மக்களைப் புரிந்து கொள்ளாத ஒரு வறட்டுக் கோட்பாட்டில் நின்று கொண்டு ரஸூலுல்லாஹ் போராடவில்லை. ரஸூலுல்லாஹ் மக்களால் காட்டிக்கொடுக்கப்படவுமில்லை. அது என்ன வகையான ஆளுமை. நினைக்கவே அற்புதமாக ஒவ்வொரு கோணத்திலும் புதுமையாக இருக்கிறது. அந்த ஆளுமை

எங்கிருந்து வருகிறது? இதைத்தான் நாம் திருப்பிப்போட்டு வாசிக்க வேண்டும்.

நீங்கள் என்ன செய்கிறீர்கள் என்றால் சீறாவை, ரஸூலுல்லாஹ்வுடைய வாழ்க்கை வரலாறை அயன் குலையாத, மடிப்புக் குலையாத சோகேஸ் பெட்டிக்குள் ஆடைகளை அடுக்கி வைத்திருப்பது போன்று அவரது வாழ்க்கை வரலாற்றைக் கட்டமைக்கிறோம். அப்படித்தான் நமக்கு வரலாறுகள் சொல்லப்பட்டிருக்கின்றன. எல்லா மனிதர்களுக்குள்ளும் பலம், பலவீனம் என்ற இரண்டும் இருக்கின்றன. எல்லாவற்றையும் சேர்த்து அறிமுகப்படுத்தினால்தான் ஒருவருடைய ஆளுமையை மிகச்சரியாக மட்டிடுவதற்கு வாசகனால் முடிகிறது.

**ஆரிபீன்:** அபூபக்கர் ரழியின் பலவீனங்களைப் பற்றி யாராவது சொன்னால் அதை நாம் ஏற்றுக் கொள்ள மாட்டோம். யாரும் அறிமுகப்படுத்தாத இன்னொரு பக்கம் அவருக்கும் இருக்கிறது. அந்த வாசிப்பு நம்மிடமில்லை.

**ஏபிஎம். இத்ரீஸ்:** அந்தவாசிப்பு நம்மிடம் இல்லை என்றால் நூறுவீதம் ஒருவரை *Perfect* ஆன ஆளாக எண்ணி அவரை பின்பற்றிப் பின்பற்றிப் பார்ப்போம் நம்மால் முடியாமல் போய்விடும். ஏனென்றால் நாமும் மனிதர்கள்தானே. நம்மிடமும் அதே பலவீனங்கள் இருக்கத்தானே செய்யும். இஸ்லாத்திலிருக்கும் யதார்த்தம், யாதார்த்தத்தின் போக்குகள் சரியாக சொல்லப்படவில்லை. அபூபக்கரைப் பற்றிக் கூட சொல்லப்பட்டது என்ன வென்றால் அவர் வீட்டுக்குள் அல்லாஹ்வையும் ரஸூலையும் வைத்துவிட்டு அவ்வளவு செல்வத்தையும் செலவளித்தார் என்பது. ஆனால் அவருடைய மகளுக்கெதிராக அவதூறு சொல்லப்பட்ட போது அவர் நிறையப் பேருக்கு வழங்கிய சமுர்த்தியை நிறுத்தினார் என்பது யாருக்கும் தெரியாது. இந்த இடத்தில் நமக்கு விளங்கிக்கொள்ளக் கூடியது என்ன வென்றால் அவருடைய

மகள் விசயம் என்று வரும் பொழுது அவர் ஒரு சாதாரண மனிதராக மாறுகிறார். எனவே அவர் மனிதர். எதையும் புனிதமாக கட்டமைத்தோம் என்றால் அது தெய்வமாக மாறிவிடும். அது அமைப்பாக இருக்கலாம். தனிமனிதராக இருக்கலாம். எதுவாக இருந்தாலும் புனித நிலைக்கு எதையும் கொண்டுசெல்லக் கூடாது. அல்குர்ஆனும் அதைத் தடைசெய்கிறது. ஷிர்க்கின் நவீன வடிவம் புனிதம்தான். இத்ரீஸையும் புனிதமாக்கத் தேவையில்லை. எதையும் புனிதமாக்கத் தேவையில்லை. குழந்தைகளிலிருந்து உம்மாவிலிருந்து எல்லோருடைய சிந்தனைகளையும் கட்டியெழுப்புவோம். எல்லோரையும் உரையாட அனுமதிப்போம். அதிலிருந்து முடிவுகளை நோக்கிச் செல்வோம்.

**ஸஜீத்:** பலவீனமானவர்களையும் ஏற்றுக் கொண்டு சென்றால் மட்டுமே முழுமை காணமுடியும்.

**ஏபிஎம். இத்ரீஸ்:** அதனால்தான் எண்பதுகளில் இலங்கையில் இன்னொரு மாற்றுச் சிந்தனை வருகிறது. அதாவது ஜமாத்திற்குள்ளிருந்த நிலைப்பாடு என்னவென்றால் *Perfect* ஆன இஸ்லாமிய வாதிகளை வைத்தே *Perfect* ஆன இஸ்லாத்தைக் கட்டியெழுப்ப வேண்டும் என்று. ஆனால் இஹ்வான்களின் சிந்தனைப் போக்கு இன்னொரு விதத்திலிருந்து வருகிறது.

**ஸஜீத்:** இந்த இடத்தில் அடிப்படையான விடயங்களிலும் உழைக்க வேண்டியிருக்கிறதே. உதாரணத்திற்கு மது அருந்தும் ஒருவரை நேர்வழிப்படுத்த வேண்டிய பொறுப்பும் இருக்கிறதே. நீங்கள் மது பற்றிய வேறொரு வாசிப்பைச் செய்திருக்கிறீர்கள் என்று சொல்கிறீர்கள்.

**ஏபிஎம். இத்ரீஸ்:** நான் யாரையும் மது அருந்த வேண்டும் என்று சொல்லவில்லை. குடி பற்றி மிகக் குறைந்தளவு அறிவே

நம்மிடம் இருக்கிறது. குடி என்பதன் ஊடாக நீங்கள் எதை நாடுகிறீர்கள்? குடி என்பதற்கு நீங்கள் சொல்லும் வரைவிலக்கணம் என்ன? என்று பார்த்தால் மிகவும் மேலோட்டமான ஒன்றைத்தான் உங்களால் சொல்லமுடியும். குடி என்பது பல உட்பிரிவுகளைக் கொண்ட ஒரு சமூகப் பிரச்சினை. குடி விவசாயம், குடி அரசியல், குடிக் காலனியம், குடிப் பண்பாடு என்று குடியை இன்றைய சூழலில் இப்படிப் பிரித்துப் பார்க்க வேண்டியிருக்கிறது. குடிவிவசாயம் என்னவென்றால் குடிபானங்களை உற்பத்தி செய்வதற்கான விவசாய முறை ஒன்று இருந்திருக்கிறது. ஆரம்பத்தில் நம்மிடமிருந்த குடிபான வகைகளாக தானியங்களைக் கொண்டு செய்யும் குடிபான வகைகள், கூழ் வகைகள், இலைக்கஞ்சியிருந்து அரிசிக்கஞ்சி, நோன்புக் கஞ்சி என்று இன்று வரைக்கும் நமது உணவுப் பண்பாட்டில் இருக்கும் குடிபானங்களைக் குறிப்பிடலாம். இப்படி குடிபான வகைகள் நமது பண்பாட்டில் இருந்திருக்கின்றன. சோற்றை சமைத்து உண்பது போல, திண்மப் பொருட்களை உண்பது போல திரவப் பொருட்களையும் உண்டு வந்திருக்கிறோம். எனவே இந்தத் திரவப் பொருட்களுக்கு ஒரு வரலாறு இருக்கிறதா இல்லையா?

நமது பண்பாட்டில் குடிபான வகைகள் இருந்து வந்த மாதிரி ஐரோப்பாவுக்கும் ஒரு குடிபான வகையும் இருந்தது. இதை ஒரு நாள் பட்டறையாக செய்யுமளவுக்கு இந்த சப்ஜக்ட் விரிவானது. குடி பற்றிய உங்களுடைய கருத்து, இஸ்லாமிய கருத்து, மாற்று கருத்துக்கள் என்று எல்லாவற்றையும் உரையாட முடியும். அப்போதுதான் நல்ல தெளிவுக்கு நாம் வரமுடியும். அப்போதுதான் குடிபற்றிய நமது அணுகுமுறையில் சரியான மாற்றம் ஒன்று வரும். நாம் குடிக்க வேண்டும் என்ற நிலைக்கு வரமாட்டோம். ஆனால் நம்மிடம் குடிபற்றி இருக்கும் மிகக் குறைந்த அறிவிலிருந்து விடுபட்டு ஒரு விரிந்த அறிவு நமக்குக் கிடைக்கும். ஒரே கோணத்திலிருந்து பார்க்காமல் அதன் மீதான ஒரு புதிய அணுகுமுறையை செலுத்த இது உதவும்.

தொண்ணூறு வீதம் குடியர்கள் வாழும் நாட்டிற்கு அந்த அணுகுமுறை இன்றியமையாதது. அவர்களுக்கு தேவையான இஸ்லாமிய அடிப்படையில் அங்கீகாரம் கொண்ட குடிபான வகைகளை உற்பத்தி செய்ய வேண்டும் என்ற நிலைக்கே நாம் வந்துவிடுவோம். நமது எல்லா வேலைகளையும் நிறுத்திவிட்டு இலங்கையிலிருக்கும் நானூற்றி ஐம்பது குடிபானங்களை உற்பத்தி செய்யும் கம்பனிகளை ஓட்டம் காட்டுவதற்காக நாம் களத்தில் இறங்கிவிடுவோம்.

நாம் குடியைப் பற்றி உரையாடினால் பத்து வருடங்களில் ஆரோக்கியமளிக்கக் கூடிய குடிபானங்களை தயாரித்து இந்த நாட்டு மக்களுக்கு வழங்க வேண்டும் என்ற முடிவுக்கு நீங்கள் வருவீர்கள். இதுவரை காலமும் நாம் எதைப் பேசிக் கொண்டிருக்கிறோம் என்றால் பத்வாவை மட்டும்தான். குடி ஹராமா ஹலாலா என்ற இரண்டுக்கும் இடையில்தான் பேசியிருக்கிறோம். எந்தவொரு பின்னணியும் இல்லாமல், வரலாற்று அறிவும் இல்லாமல், மார்க்கமும் தெரியாமல்தான் நமது குடி பற்றிய அறிவு இருக்கிறது.

இலங்கையின் காலனித்துவ ஆதிக்க வரலாறு தொடங்குவதற்கு முன்னோடியாக ஒரு வாய்மொழிக் கதை நம்மத்தியில் புளக்கத்திலிருக்கிறது. இலங்கை துறைமுகத்திற்கு முதன்முதலாக போர்த்துக்கீசர் வந்து இறங்கியதை சிங்கள மன்னனிடம் போய் ஒற்றர்கள் எப்படி விபரித்தார்கள் என்பது ஒரு சுவாரஷ்யமான கதையாக பாடப்புத்தகங்களில் இடம்பெற்றுள்ளன. மன்னனிடம் சென்று போர்த்துக்கீசர்கள் கல்லையும் தின்று ரத்தத்தையும் குடிக்கிறார்கள் என்று சொல்வார்கள். பானை கல்லாகவும் வைனை ரத்தமாகவும் கருதினார்கள் ஒற்றர்கள். எனவே போர்த்துக்கீசர் இலங்கைக்கு வரும் பொழுது பேக்கரியுடனும் வைன் உற்பத்தி செய்யும் சாதனங்களுடனும்தான் வந்திருக்கிறார்கள் என்பதை இதிலிருந்து விளங்க முடியும். முக்கியமாக இஸ்லாமியவாதிகள் இந்த பேக்கரிவரலாற்றை, குடிபான

வரலாற்றைப் படித்திருக்க வேண்டும். எதிர்காலத்தில் ரஸூலுல்லாஹ்வும் உணவும், ரஸூலுல்லாஹ்வும் மருத்துவமும் என்று பல தலைப்புகளில் தனித்தனியான பட்டறைகள் ஊடாக நாம் இவற்றைச் செய்ய எண்ணியுள்ளோம். இன்ஷா அல்லாஹ்!

இங்கு இந்தக் குடிவரலாறு எப்படித் தொடங்குகிறது என்று பாருங்கள், இலங்கைக்கு கிறிஸ்தவ போதனை, வர்த்தகம், காலனித்துவ ஆதிக்கம் என்று வருவது மாதிரி அவர்களது உற்பத்திப் பொருட்களுக்கான சந்தையை விரிவாக்கும் நோக்கத்திலும் வருகிறார்கள். எனவே இங்கு அவர்கள் தங்கியிருக்கும் எல்லா முகாம்களுக்கும் ஐரோப்பாவிலிருந்து வைனும் பான் உற்பத்தி செய்வதற்கான கோதுமை, பேக்கரி பொருட்கள் என்று எல்லாப் பொருட்களும் வந்திருக்க வேண்டும். காலப்போக்கில் உபரியாக வரும் உற்பத்தியை உள்ளூரிலேயே அவர்கள் விற்க வேண்டிய நிர்ப்பந்தம் இயல்பாகவே உருவாகியிருக்க வாய்ப்பிருக்கிறது. விற்று சந்தைப்படுத்தினால் மட்டுமே மகாராணிக்கு இங்கிருந்து பொருட்கள், செல்வங்களை அனுப்ப முடியும். எல்லா வைனையும் அவர்களே குடித்து முடிக்க முடியாதே! இதே காலப்பிரிவில் உள்ளூரிலும் பல குடிபான வகைகள் பாவணையில் இருந்திருக்கும்.

காலனித்துவ கல்விமுறைக்குள்ளால் வந்த நமது படித்த வர்க்கம் என்னமோ நம்முடைய மூதாதையர் உடம்பில் துணியில்லாமல் இலைகுழைகளைக் கட்டிக் கொண்டு திரிந்த மாதிரியும் கல்வியறிவற்ற, நாகரீகமற்றவர்களாகத்தான் கட்டமைத்திருக்கிறார்கள். இதன் மூலம் ஐரோப்பியர்கள் வந்துதான் எல்லோருக்கும் கல்வியளித்து நாகரீகமடையச் செய்தார்கள் என்று நினைக்கிறோம். நம்முடைய முன்னோர்களும் அக்காலகட்டத்திற்குத் தேவையான வளர்ச்சியை எல்லா மட்டங்களிலும் அடைந்தே இருந்தார்கள். மூலிகை வைத்தியத்திலிருந்து விவசாய, நீர்ப்பாசன

தொழில்நுட்ப வளர்ச்சி என்று அதன் மூலம் உணவு உற்பத்தியிலும் உச்சகட்ட வளர்ச்சியடைந்துதான் இருந்தார்கள். ஆனால் ஐரோப்பியர் மிக அபத்தமாக, உள்ளூர்வாசிகளை ஆடுமாடுகளை ஒத்த ஒரு சித்திரத்தை அவர்களது கல்விமுறைக்குள்ளால் உருவாக்கி நமக்கு அளிக்கிறார்கள்.

ஐயாயிரம் வருடங்களுக்கு முன்பே நவீன நீர்ப்பாசன முறைகளை விட மேலான நீர்ப்பாசன, விவசாய தொழில்நுட்ப முறை இந்தியாவில் இருந்திருப்பது இப்போது ஆராய்ச்சிகள் மூலம் தெரியவருகிறது. இது பற்றிய ஆவணப்படம் ஒன்றை அண்மையில் பார்க்கக்கிடைத்தது. ஐரோப்பியர் அல்லது அதற்குப் பிறகு வந்த இந்திய அரசு உருவாக்கிய நீர்ப்பாசன வழிகள் இன்று பாழடைந்து வரண்ட பூமிகளாக காட்சி தரும் பொழுது இவர்கள் கட்டமைக்கும் பண்டைய குடிகள் உருவாக்கிய நீர்ப்பாசன முறைகள் இன்றும் மக்களுக்கு பயன்படுகின்றன. கற்பாறைகளில் தொட்டிகளை செதுக்கி மழைநீரை தேக்கிவைத்து விவசாயத்திற்கும் வழிப்போக்கர்களுக்கும் பயன்படும் வகையில் செய்திருக்கிறார்கள். பருவகால மழையைக் கொண்டு நிலக்கீழ் நீரை அதிகரித்து விவசாயதிற்கு பயன்படுத்தி வெற்றி கண்டிருக்கிறார்கள். இந்திய ஆராய்ச்சியாளர்கள் இவற்றை இன்று மறுகண்டுபிடிப்புச்செய்து வெளியிடுகிறார்கள்.

எனவே உள்ளூர் அறிவு, உள்ளூர்த் திறன், உள்ளூர் சிந்திப்பு முறை என்று நாம் யோசிக்காமல் விக்டோரியாக் கல்விமுறைக்குள்ளால் வந்துதான் அனைத்தையும் பார்க்கிறோம். அவர்கள் பயணக்குறிப்புகளாக அங்குமிங்கும் கண்டு எழுதியவற்றைக் கொண்டுதான் நமது ஆய்வுகளுக்கான உசாத்துணையாக கொண்டிருக்கிறோம். இப்னு பதூதா பயணக்குறிப்புகளாக எழுதியவற்றை மாத்திரம் வைத்துக் கொண்டு எப்படி நமது பூர்வீகத்தை ஆராய முடியும்? இந்த ஆய்வாளர்களைத்தான் நமது நிறுவனங்களுக்கு பணிப்பாளராகவும் கொள்கை வகுப்பாளராகவும்

வைத்திருக்கிறோம். எனவே எப்படி ஒரு புதிய சிந்திப்பை, மாற்றத்தை இவர்களிடம் இருந்து எதிர்பார்ப்பது?

எனவே நம்மிடமிருந்த இலைக்கஞ்சியும் பான முறைகளும் உணவு முறைகளும் நிச்சயமாக காலனியவாதிகளுக்கு ஒரு சவாலாக அமைந்திருக்கும். அதை உடைத்துத்தான் அவர்களது பொருட்களைக் கொண்டுவந்து சந்தைப்படுத்தியிருக்க முடியும். நம்முடைய குடிபானங்கள் போதையை ஏற்படுத்தி, ஆடித்திரிந்து நம்முடைய மூத்தப்பா ஒரு கானுக்குள் விழுந்து கிடந்ததாக வரலாறு இல்லை (எல்லோரும் சிரிக்கிறார்கள்). இவர்களுடைய இந்தப் பானம் வந்ததற்குப் பிறகுதான் அப்படி நடந்திருக்கிறது. என்ன நடக்கிறது என்றால் காலப்போக்கில் உள்ளூர் குடிமக்களின் பான உற்பத்திகளை தடைசெய்து அதனை சட்டவிரோதமாக மாற்றி இருப்பார்கள். முன்னர் எங்காவது கள்ளு குடித்துக்கொண்டிருந்தால் பொலிசைக் கண்டு ஓடி ஒழிவதை கேள்விப்பட்டிருக்கிறோம். பொலிஸ் வருகிறதாம் என்றால் அவர்கள் எல்லாவற்றையும் அப்படியே போட்டுவிட்டு ஓடிவிடுவார்கள். அந்தப் பய உணர்வு நானூறு வருடங்களுக்கு முன்னரே உருவாக்கப்பட்டு விட்டது.

எனவே காலனியவாதிகள் உள்ளூர் வாசிகளுக்கு அவர்களது குடிபானங்கள் மீது அப்படி ஒரு பயத்தை உருவாக்கித்தான் தமது பானங்களுக்கான சந்தையை கையகப்படுத்தியிருக்க முடியும். அவர்களது கையிலிருந்த அதிகாரத்தின் ஊடாக, தமது மதத்தின் ஊடாக குடியைப்பற்றிய ஒரு போதனையை, தடையை முன்னெடுக்கிறார்கள். இதன் மூலம் போதைக்கெதிரான கருத்தை உள்ளூர் மக்களிடையே பரப்பி வைன்தான் மிகச்சிறந்த பானம் என்று அவர்களுடைய முக்கியமான வைபவம், சமயச் சடங்குகள், திருமண நிகழ்வுகள் என்று விநியோகிக்கிறார்கள். இதன் மூலம் நமக்குள் வைன் ஒரு குடிபானமாக மாற்றடைகிறது. காலப்போக்கில் உள்ளூர் தேவைக்கான வைன் அவர்களது

நாட்டிலிருந்து வருவது தடைப்படும் போது உள்ளூர் கசிப்பு முறையையும் சேர்த்து ஒரு புதிய இயந்திரம் உருவாகிறது, அழுகிய பழவகைகள், துருப்பிடித்த முட்கம்பி, சீமெந்து என்று எல்லாக் கழிவுப்பொருட்களையும் கொண்டதாக புதிய பானம் உருவாகிறது. வாடிக்கையாளரின் பெருக்கத்தினை ஈடுசெய்ய இப்படி ஒரு உபவழிமுறையை உருவாக்கிக் கொள்கிறார்கள். உள்ளூர் உற்பத்தியை பொலிஸ் போட்டு இல்லாமலாக்கி விட்டு அவர்களது குடிபானத்திற்கு தட்டுப்பாடு நிலவும் கட்டத்தில் இப்படியான உபவழி ஒன்று அவர்களுக்குத் தேவைப்படுகிறது. உள்ளூர் மக்களும் இவற்றுக்கு இயைபு கொள்வது சாத்தியமே. அவர்கள் நாட்டைவிட்டு வெளியேறியவுடன் உள்ளூர் மக்களே அந்த வைன், அரக்கு வியாபாரத்திற்கான முதலாளிமார்களாக வருகிறார்கள். இதுதான் இன்று உருவாகியிருக்கும் குடி அரசியல். இதற்கு எதிர்நிலையில் இருந்து உருவாகும் குடிக்காலனியம்தான் 'போதை ஒழிப்பு வாரம்' என்பது. எந்த போதையை என்றால் இந்த காலனியவாதிகள் விட்டுச் சென்ற போதையை. உள்ளூர் அரக்கை ஒழிப்பதற்கான திட்டத்தை முன்வைத்து அதனை உள்ளூர் மக்களிடையே கொண்டு செல்கிறார்கள். ஆனால் குடிக்காலனியம் முன்வைக்கும் புதிய வைன் என்வென்றால் இந்த மென்பானங்கள்தான். கொகாகோலா கம்பனியும் அதன் நூற்றுக்கணக்கான பானங்களும்தான் இன்றைய புதிய வைன் வகைகள். இந்தப் பானங்களின் ஆரோக்கியத்தைப் பற்றி தனியாக உரையாட வேண்டும். கொகாகோலா ஒன்றுக்குள் நீங்கள் பிடுங்கிய பல் ஒன்றை போட்டு வைத்திருந்தால் ஆறுமாதத்தில் கரைந்துவிடும் என்று மருத்துவர்கள் சொல்கிறார்கள். அந்தளவுக்கு அவற்றின் ஆரோக்கியம் இருக்கிறது.

இந்தப் பன்னாட்டு கம்பனிகளின் பெரும் முலீட்டுடன் வரும் இவ்வகை பானங்களுக்கு உள்ளூர் பானங்கள் மீண்டும் ஒரு சவாலாக மாறியிருக்கும் போதுதான் இந்த போதை ஒழிப்புத் திட்டங்களுக்கு அவர்கள் நிதி உதவியளித்து இயங்கும் அரச

சார்பற்ற நிறுவனங்கள் மூலம் மீண்டும் நவகாலனியத்தை தக்கவைத்துக் கொள்வதற்காக எத்தனிக்கிறார்கள் என்பதைப் புரிந்து கொள்ளலாம். இலங்கையில் புதிய காலனியம் என்பது இந்தவகையான என்ஜிஓக்கள்தான் என்பதை யாரும் மறுக்கமாட்டார்கள் என்று நினைக்கிறேன்.

யுத்த நிறுத்த காலத்தில் அரசுடன் பேசிய புலிகள் இந்த பன்னாட்டு கம்பகளின் குடிபானங்களை எதிர்த்ததாகவும் அதற்குப் பதிலாக உள்நாட்டு குடிபானங்களை சந்தைப் படுத்துவதற்கு வாய்ப்புக் கோரியதாகவும் வாசித்திருக்கிறேன். இந்தக் கோரிக்கையும் நான் முன்னர் குறிப்பிட்ட விடயத்துடன் இணைத்துப் பார்க்க முடியும். அரசாங்கம் புலிகளுக்கு அளித்த பதில் என்னவென்றால் இலங்கையில் உள்ள நாணூறுக்கும் மேற்பட்ட குடிபான கம்பனிகளின் விநியோகத்தை இல்லாமலாக்கினால் இலங்கையில் இயங்கும் அரசசார்பற்ற நிறுவனங்களின் எண்பது வீதமான நிதி தடைப்பட்டு விடும் என்றுதான். எனவே இந்தக் குடிபான கம்பனிகள் இங்கு ஈட்டும் வருமானத்தின் ஒரு பகுதியைத்தான் உள்ளூரில் இயங்கும் குழுக்களைக் கொண்டு தமக்கான சந்தையை தக்கவைத்துக் கொள்ள இது போன்ற பணிகளில் ஈடுபடுகிறார்கள். இந்த முக்கியமான விடயங்கள் கூட இங்கு மேற்கிளம்பாமல் போகிறது என்பது எவ்வளவு துரதிஷ்டமான விடயம்.

எனவே இன்றுள்ள மென்பானங்கள் நவீன குடி அரசியலாக, குடிக் காலனியமாக மாறுவதை நாம் இங்கு அவதானிக்கலாம். இங்கு வரும் பல்தேசிய கம்பனிகளுக்கு ஏற்கனவே உள்ளூர் சந்தையில் இருக்கும் சாராயக் கடைகள், அரக்குக் கடைகள் தடையாக இருக்கின்றன. எனவே இது உண்மையான போதையொழிப்பா? என்று கேட்டால் இல்லை என்றுதான் சொல்ல வேண்டும். எனவே இது ஒரு புதுவகையான குடியரசியல். அவர்களுடைய புதிய பானங்களை மீண்டும் மீண்டும் நம்முடைய பகுதிகளில் சந்தைப்படுத்துவதற்கு ஒரு

குடியரசியல் தேவைப்படுகிறது. இச்சந்தர்ப்பத்தில் நாம் இதனை எதிர்கொள்ள நமக்கான ஒரு குடியரசியலை உருவாக்க வேண்டாமா இல்லையா? அவர்களைப் போல் வைன் உற்பத்தி செய்து சந்தைப்படுத்த வேண்டும் என்று நான் சொல்ல வில்லை. நம்முடைய சூழலில் இருந்து ஏதோவொன்று, நமக்கு ஒரு ராஹத்தைத் தரக்கூடிய, அரோக்கியத்தைத் தரக்கூடிய ஏதோவொரு மென்பானம் ஒன்றை நாம் யோசிக்காமல் இருப்பது எவ்வளவு பெரிய தவறு. இது நமது குடிபான தேவைக்கான மாற்றீடாக அமைவதோடு நமது உள்நாட்டு விளைபொருளையும் சந்தையையும் தொழிலாளர்களையும் நாட்டின் பொருளாதாரத்தையும் ஒரே நேரத்தில் ஊக்குவிப்பதாகவும் அமையும்.

ஆனால் நாம் என்ன செய்கிறோம் என்றால், ஸ்கூல் பிள்ளைகள் சாராயம் குடிக்கிறார்கள், இளைஞர்கள் குடிக்கிறார்கள், மாப்பிள்ளைமார் தமிழ், சிங்கள பகுதிகளுக்குள் சென்று குடிக்கிறார்கள் அல்லது வாங்கி வந்து கட்டிலுக்கீழ் ஒழித்துவைத்துக் குடிக்கிறார்கள். பெருநாள் அன்று பிரிஜிலிருந்து எடுத்துக் குடிக்கிறார்கள். பொஞ்சாதிமார் அவர்களுக்கு ஐஸ் போட்டுக் கொடுக்கிறார்கள் என்று இப்படித்தான் நமது பயான்களையும் குத்பாக்களையும் ஓதிக் கொண்டிருக்கிறோம். இப்படி ஓதுவதிலேயே நமக்கு ஒரு சுகம். *(எல்லோரும் சிரிக்கிறார்கள்)*

நமது முன்னோர்களின் வாழ்க்கை முறையில் 'கள்' ஒரு சாதாரண குடிபானமாகத்தான் இருந்திருக்கிறது. அது போதையளிக்கக் கூடிய மதுவாக இருக்கவில்லை. அவர்களின் காலை உணவாக இருந்திருக்கிறது. ஒரு மரத்திலிருந்து ஒருவர் கள்ளை இறக்கிக் குடித்தால் போதை வராது. அது ஆரோக்கியத்திற்கு எந்தக் கெடுதலையும் ஏற்படுத்தாது. ஆனால் மரம் மாற மாற அல்லது பல மரங்களில் இறக்கியதை ஒன்றாக சேர்த்து அருந்தும் போது உடலில் தளர்வு ஏற்படுகிறது. அதேபோல இறக்கிய கள்ளை மூன்று நாட்களுக்கு மேல்

வைத்திருந்து குடித்தாலும் அல்லது பல மரங்களிலிருந்து இறக்கி அதில் மாற்றங்களைச் செய்து குடிக்கும் போதும் போதையும் உடல் தளர்வும் ஏற்படுகிறது. அப்படி பல நாட்களுக்கு வைத்திருந்து பின்னர் குடிக்கும் போதுதான் போதையேறி கானில் விழுந்து கிடந்த கதைகளை நாம் கேள்விப்படுகிறோம். இன்று மது உற்பத்தி செய்யும் தொழிற்சாலைகளை சென்று பார்த்தால் பெரும் பெரும் பீப்பாய்களில் நிறைத்து நிலத்துக்கு அடியில் புதைத்து வைத்து ஐந்து வருடம் பத்து வருடம் என்று லேபல் ஒட்டப்பட்டு சந்தைக்கு அனுப்புகிறார்கள். எத்தனை வருடம் முந்தியதோ அவ்வளவுக்கு போதையானதாகவும் அவை இருக்கின்றன. இவை முற்றிலும் உள்ளூர் குடிபான முறைக்கு எதிரான போதைக்காக மட்டும் செய்யப்படும் பானமாகும்.

**முஹம்மது ரஸீக்:** இங்கு கள்ளிலிருந்து சக்கரை செய்யும் ஒருவர் என்னிடம் சொல்லியிருக்கிறார், கள்ளை இறக்கியவுடன் குடித்தால் இனிப்பாக இருக்கும். வெயில் ஏற ஏற அது புளிப்பாக மாறிக் கொண்டிருக்கும் என்று.

**ஏபிஎம். இத்ரீஸ்:** என்னை நீங்கள் வேறுமாதிரியாக நினைத்துவிட வேண்டாம். நானும் எனது வாசிப்பு, உரையாடல் அனுபவங்களிலிருந்து இதனைச் சொல்கிறேன். குடியில் பலவகையான படிநிலைகள் இருக்கின்றன. குடியின் முதல் படிநிலையில் விறைப்பாக இருப்பவர் இளகத் தொடங்குவார். விறைப்பு படிப்படியாக உடலில் இருந்து இல்லாமல் போய் சற்று நெகிழ்வாக காணப்படுவார். பிறகு இரண்டாவது படிநிலையில் அசையத் தொடங்குவார். அருகில் இருப்பவரின் தோளில் கையைப் போடுவார். நேராக நிற்காமல் வளைவார். மூன்றாவது படிநிலையான பறத்தல்தான் உச்சகட்டம். மேகங்களுக்குள்ளால் பறப்பது போன்ற உணர்வை அடைவதோடு குடி உச்சகட்டத்தை அடைகிறது. இமாம் அபூஹனீபா சொல்கிறார் 'மதுவைப் பற்றி அல்லது போதையளிக்கும் ஒரு பொருளைப் பற்றி ஹராம் என்று

பத்துவா (மார்க்கத் தீர்ப்பு) வழங்கும் ஆலிம் கட்டாயமாக அது அப்பிரதேசத்தின் உணவுப் பொருளா அல்லது போதைப் பொருளா என்பதை கேட்டு உறுதிப்படுத்திக் கொள்ள வேண்டும்' என்கிறார். உள்ளூர் குடிபானங்கள் பற்றிய ஒரு தெளிவோடுதான் ஆரம்பகால இமாம்களும் பத்துவாக்களை வழங்கி வந்திருக்கிறார்கள்.

ஒரு காலை உணவாக கள் இருந்ததற்கு பல ஆதாரங்களைச் சொல்ல முடியும். கடும் உடல் உழைப்புத் தேவைப்படும் போது, விவசாய அறுவடை காலங்களில் போதை தராத கள்ளை அருந்திவிட்டு முழுப்பகல் காலமும் வேலை செய்திருக்கிறார்கள். அது ஒரு காலை உணவாகவே இருந்திருக்கிறது. அது எந்தவொரு பக்கவிளைவையும் ஏற்படுத்தவில்லை. சுறு சுறுப்பும் உற்சாகமும் அளித்திருக்கிறது. திடீர் உஷாரையும் ஏற்படுத்தவில்லை. எல்லா உணவைப் போன்றும் அதுவும் அவர்களது பண்பாட்டில் ஓர் உணவாகவே இருந்துவந்திருக்கிறது. காலப்போக்கில் என்ன நடைபெறுகிறது என்றால் இந்த குடிக்காலனியம், குடி அரசியல் எல்லாம் வந்து அரசியல் வாதிகளால் அது அரசியலாக்கப்படுகிறது. மக்கள் தங்களது உணவுக்கான உரிமையாக எடுத்து சரியாக போராட்டத்தைக் கொண்டு செல்லாததால் காலத்துக் காலம் வரும் அரசியல் தங்களுக்குச் சார்பான ஒன்றாக மாற்றி விட்டது.

எனவே நாம் இதுவரைக்கும் பேசத்துணியாத, பேசத் தயங்கிய எல்லா விடயங்களையும் உரையாடலாக மாற்ற வேண்டும். அது முடிவு சொல்வதற்காக அல்ல. இதனை சாதாரண மக்களும் உரையாடும் பொது விடயமாக மாற்ற வேண்டும்.

**றமீஸ்:** இதற்கு ஜும்ஆக்கள் நல்ல சந்தர்பத்தை கொடுக்கும். இல்லையா?

**ஏபிஎம். இத்ரீஸ்:** அதற்கு முன்னர் ஆலிம்கள் தங்களுக்குள்

வாதவிவாதங்களை நிகழ்த்த வேண்டும். இலங்கைப் பண்பாட்டையும் இங்குள்ள மக்களின் நெருக்கடிகளையும் கருத்திற் கொண்டு இதனை அணுக வேண்டும்.

**ஆரிபீன்:** சாதாரண மக்கள் மத்தியில் கொண்டு செல்வதற்கு முன்னர் இப்படியான கலந்துரையாடல்களைச் செய்வது முக்கியமானதுதான்.

**ஏபிஎம். இத்ரீஸ்:** இவற்றைப் பற்றி கட்டுரையாக எழுவதை நாம் விரும்பவில்லை. இதனை உரையாடல் மூலம் பலரிடமும் எடுத்துச் சென்று பொதுக்கருத்தை உருவாக்குவதுதான் எமது நோக்கமும். கட்டுரையாக எழுதுவதாக இருந்தால் எப்போதோ எழுதியிருப்போம். அது எமது தனிப்பட்ட கருத்தாக மாறி ஒரு சிலர் மாத்திரம் அறியும் ஒன்றாகப் போய்விடும்.

**ஸஜீத்:** உண்மைதான். புத்தகமாக வந்ததன் பின்னர் அதனை கிழித்து வீசும் நிலை இருக்கக் கூடாது இல்லையா?

**ஏபிஎம். இத்ரீஸ்:** இலங்கையில் கசிப்புக் காய்ச்சுவோர் ஒரு நாளைக்கு தலா பதினெட்டு போத்தல் கசிப்பு காய்ச்சுவதாக தரவுகள் கூறுகின்றன. பெருநாள், பண்டிகை காலங்களில் மதுபான நிலையங்களில் விற்கப்படும் சாராயத்தின் பெறுமதி பல ஆயிரம் கோடியைத் தாண்டுகின்றன. தென்னாசிய நாடுகளில் தமது மாத வருமானத்தில் நாற்பது வீதத்தினை குடிக்கு செலவிடும் குடும்பங்கள் இருக்கின்றன. இவற்றை எல்லாம் ஒட்டுமொத்தமாக நீங்கள் பார்க்கும் போது இது மிகப்பெரிய, யாரும் பேசாத துறையாக இருப்பதை அறியலாம். பன்னாட்டு கம்பனிகளின் கையில் இருக்கும் இத்தனை பெரியதொரு பொருளாதாரம் நாட்டை விட்டு வெளியேறுவதை அவதானிக்கலாம். இதற்கு நாம் முன்வைக்கும் தீர்வு என்ன?

உங்களிடம் நாட்டைத் தந்தால் எப்படி இவற்றை சமாளித்து கொண்டுபோவீர்கள்? இந்த அடிப்படை விடயங்களில் கூட நாம் தெளிவில்லாதவர்களாக, ஹராம் என்ற ஒரு வார்த்தையிலேயே அனைத்திற்கும் தீர்வு காண்பவர்களாக இருக்கிறோம். இன்றிலிருந்தே இதனைப் பற்றி நீங்கள் கற்கத் தொடங்கினால்தான் இரண்டு தலைமுறைக்குப் பிறகாவது இதற்கான பதிலீட்டைக் கண்டுகொள்ள முடியும். அல்லது நூறு வருடங்களுக்குப் பிறகு வரவிருக்கும் கிலாபத்திற்கு ஒரு பதிலீட்டை வழங்கலாம். காலா காலமாக இருந்து வரும் உங்களுடைய சமூகம் குடிப்பதில்லைதான். இரண்டு சமூகங்களுடனும் இணைந்து வாழும் இடங்களில்தான் நமக்குள் குடிப்பழக்கம் அதிகமாக இருக்கிறது. நூறுவீதம் முஸ்லிம்களாக வாழும் பகுதிகளில் குடி ஒப்பீட்டளவில் மிகக்குறைவு. ஆனால் இன்று எட்டாம் ஆண்டுப் பிள்ளைகள் வரைக்கும் சுற்றுலா ஊடாக குடிப்பழக்கம் வருகிறது.

சீனர்கள் தேனீர் குடிப்பதைப் பார்த்தீர்கள் என்றால், பெரியதொரு பளிங்கில் கிண்ணத்தில் வைத்துக் கொண்டு ஸம்ஸம் தண்ணீர் குடிக்கும் சிறிய பாத்திரத்தில் ஊற்றி உம்மா, வாப்பா, பிள்ளைகள் வளைத்திருந்து சிறிது சிறிதாக ஊற்றி ஒரு மணிநேரமாக கதைத்துக் கொண்டு குடிப்பார்கள். ஆனால் நாம் நாள் முழுக்க உழைத்து வந்து ஒரு உணவை அருந்த பத்து நிமிடமும் எடுத்துக் கொள்வதில்லை. 'அங்க பிரச்சினை, இங்க வேலை' என்று ஒன்றையும் உருப்படியாக ரசித்து சாப்பிடுவதில்லை. நாய் பிஸி. உணவு தொடர்பாக ரஸூலுல்லாஹ் எதைச் சொல்லியிருக்கிறார்கள், எதை முன்மாதிரியாக்கியிருக்கிறார்கள் என்பதை உரையாடினால்தான் உணவு பற்றிய ஒரு முழுப் பார்வையும் நம்மிடம் வந்துசேரும். நமது உணவுப் பழக்கவழக்கங்களும் மிக மோசமானவை. உணவுதான் ஆரோக்கியம் என்ற தெளிவின்மையே இதற்குக் காரணம். நாற்பது ஐம்பது வயதிற்குப் பிறகு, பல நோய்களும் வந்ததற்குப் பிறகுதான் நாம் இளமையில் உடலைக் கவனிக்கவில்லையே என்று

குறைபட்டுக் கொள்கிறோம்.

சில பாரம்பரிய உணவு வகைகள் இன்று நம்மிடமில்லை. அவை அருகிவிட்டன. ஆரோக்கியத்திற்கும் சூழலுக்கும் பொருந்தக் கூடிய உணவுகளை மீண்டும் ஹயாத்தாக்க வேண்டிய தேவை இன்று எழுந்துள்ளது. சிங்கள, தமிழ் சமூகங்களுக்குள் அதை இன்றும் பேணிவருகிறார்கள். நாம் நோயைத் தரும் உணவுகளைத்தான் வைத்திருக்கிறோம்.

**றமீஸ்:** பேராதனை பொறியியல் கண்காட்சிக்குச் சென்றிருந்த பொழுது அந்த மாணவர்கள் உருவாக்கியிருந்த புதுவகை அடுப்பில் அவர்களுடைய பாரம்பரிய உணவான 'ஹலப்பே'யைச் செய்து விற்றுக் கொண்டிருந்தார்கள். சர்வதேச முக்கியத்துவமுள்ள நிகழ்வுகளில் கூட பாரம்பரிய உணவை அவர்கள் பேணுவதைப் பார்க்கலாம். ஆனால் நாம் அப்படி இல்லை.

**ஏபிஎம். இத்ரீஸ்:** நாம் அதை தரக்குறைவாகவே காண்கிறோம். பாரம்பரியத்தை முன்னிருத்துவதில் நமக்கு ஒரு மனத்தயக்கம் இருக்கிறது. நாம் அது போன்ற நிகழ்வில் கோழி பிரியாணியைப் பற்றித்தான் யோசிப்போம். அது சமிபாடடைய கொக்காகோலாவையும் அருகில் வைத்து விற்போம்.

**ஆரிபீன்:** நீங்கள் சொல்வது நூறுவீதம் சரியானது. பேப்பரில் தடை செய்யச் சொல்லி எழுதுகிறோம். ஆனால் நடைமுறையில் நாம்தான் விற்பனையாளராகவும் பாவனையாளராகவும் இருக்கிறோம்.

**ஏபிஎம். இத்ரீஸ்:** இந்தப் பிரச்சினையை சுட்டிக்காட்டி எனக்கும் சில ஈமெயில்கள் வந்தன. நாம் நடாத்திய ஒரு இஸ்லாமிய கண்காட்சியிலும் இதுபோன்ற பானங்களை விற்றதற்காக சிலர் குறைபட்டு எழுதியிருந்தனர். இந்த விடயத்தில் நமது பெரும் ஆலிம்களுக்குக் கூட

தெளிவின்மைதான் காரணம்.

**றமீஸ்:** பல்கலைக்கழகங்களில் பயிலும் முஸ்லிம் மாணவர்களில் அரைவாசிப்பேர் அங்கு நடைபெறும் விழாக்கள், நிகழ்ச்சிகளில் கலந்து கொண்டு குடிப்பவர்களாகத்தான் இருக்கிறார்கள்.

**முஹம்மது ரஸீக்:** ஒரே மரத்திலிருந்து விளையும் பொருள் ஒரு வகையில் ஹராமாகவும் இன்னொரு வகையில் ஹலாலாகவும் இருக்கிறது. வெறிதரக்கூடிய கள்ளாக எடுத்தால் ஹராமாகவும் அதைப் பாணியாக எடுத்தால் சக்கரை, சீனி, வினாகிரி என்று ஹலாலான பொருளாகவும் மாறுகிறது. இதில் வித்தியாசம் அதை எடுக்கும் முறையில்தான் இருக்கிறது. நேரத்திற்கு அதைப் பயன்படுத்தும் போது எந்தப் பக்கவிளைவும் இல்லை. நீங்கள் சொல்வது போல அது ஒரு உணவுப் பொருளாகவே இருந்திருக்கிறது. காலையில் நேரத்தோடு குடித்தால் ஒரு போதும் அது வெறிக்காது. வெயில் ஏற ஏற அதில் மதுவம் வளர்கிறது. புளிப்பாக மாறுகிறது. சுண்ணாம்பை முட்டிக்கு வெளியில் தடவி அதில் உருவாகும் புளிப்பை தடைசெய்யும் முறையை நான் கண்டிருக்கிறேன். பின்னர் அதைப் பாணியாக உபயோகிப்பதையும் பார்த்திருக்கிறேன். சுண்ணாம்பு அந்த வெறித்தன்மையை நீக்கும் சக்தி பெற்றிருக்கிறது. ஒரு லீட்டர் பாணியிலிருந்து அரைக் கிலோ சக்கரை எடுக்க முடியும் என்று சொல்கிறார்கள். ஸ்ரீமாவுடைய அரசாங்கத்தில் என்று நினைக்கிறேன். 1974 ஆம் ஆண்டாக இருக்கும். அப்போது சீனி இறக்குமதி பெரியளவில் இல்லை. அதற்குப் பதிலாக இந்த சக்கரைக் கட்டியை கடித்துத்தான் நாம் தேனீர் குடிப்போம். அந்தக் காலத்தில் உள்ளூர்ப் பொருட்களுக்கு பெரும் மதிப்பு இருந்தது. நாம் தமிழ் பகுதிகளுக்குச் சென்று இந்த கறுப்பட்டியை வாங்கிவந்துதான் தேனீர் குடிப்போம்.

**ஆரிபீன்:** கெட்டுப் போன எந்த உணவையும் உண்பதற்கு இஸ்லாம் அனுமதிக்கவில்லை. கள்ளும் கெட்டுப்போன ஒரு

உணவுதான். நேரத்திற்கு அருந்தாமல் புளிக்கவைத்து, பழுதடைய வைத்து குடிக்கிறோம். பாலை எடுத்துக் கொள்ளுங்கள். நேரத்திற்கு குடிக்காமல் நேரம் சென்றால் திரைந்து பழுதாகிவிடுகிறது. அதைப் போலதான் இதுவும். எப்படிப் பாலை மோராகவும் தயிராகவும் வெண்ணையாகவும் மாற்றி உண்கிறோமோ அது போலத்தான் சக்கரையும் வினாகிரியும் இருக்கிறது.

**ஏபிஎம். இத்ரீஸ்:** எனக்கு இந்த விடயங்கள் நீங்கள் சொல்லும் போதுதான் தெரிகிறது. நாம் ஒன்றைப் பற்றி ஹராம் என்று சொல்வதற்கு முன்னர் எவ்வளவு கற்க வேண்டியிருக்கிறது! இலங்கையில் தெங்கு, பனை என்பன எத்தனையோ உபஉணவுகளைத் தரக்கூடிய பயிர்கள். பல தொழில் துறைக்கு மூலமாகவும் அவை அமைகின்றன. அவற்றைத் தமது வாழ்வாதாரமாகக் கொண்டுள்ள குடும்பங்கள் எத்தனையோ. அயலில் புலிகள் அதைப் பற்றி யோசித்திருக்கிறார்கள். ஆனால் இன்னும் இது பற்றிய முழுமையான எந்த ஆய்வும் செய்யப் படவில்லை.

நான் குடிக்கு ஆதரவாக இங்கு பேசவில்லை. குடியை ஒரு நோயாகவே பார்க்கிறேன். ஒன்றை மட்டும் சொல்ல முடியும். குடியை இந்த வரலாற்று அறிவுடன் பார்க்காது வெறுமனே போதையளிக்கக்கூடிய பானமாக மாத்திரம் பார்ப்பது நமது பிற்போக்குத்தனமாகவே கொள்ளப்படும். இது அடுத்த சமூகத்துடன் எப்படி உறவு கொள்வது என்பது வரை பாதிப்புச் செலுத்தக்கூடியது.

கஞ்சா, அபின் போன்றவற்றைக்கூட நாம் திருப்பி யோசிக்க வேண்டியிருக்கிறது. அதை எந்தக் கோணத்தில் நின்று மொத்தமாக ஹராமாக்கினோம் என்று. அதில் இருக்கும் நல்ல அம்சங்கள், அது பச்சிலை, மூலிகை வகையாக இருப்பதால், பக்கவிளைவுகள் குறைந்த ஔடதமாக இருப்பதை மறுக்க முடியாது. கஞ்சாவை அனுமதிக்க வேண்டும் என்று சொல்ல

வரவில்லை. அது ஒரு மூலிகையாகவும் இருந்திருக்கிறது என்பதை மறுக்க முடியாது என்றே சொல்கிறேன். அந்த மூலிகையை ஹராமாக்கும் செயற்பாடு என்ன அரசியலில் இருந்து வருகிறது என்பதை மீட்டுப் பார்க்க வேண்டும். நமது முன்னைய சித்தவைத்தியர்கள், மூலிகை வைத்தியர்கள் கஞ்சாவையும் வளர்த்து அதனுடன் பிற மூலிகையையும் கொண்டுதான் வைத்தியம் செய்திருக்கிறார்கள். இன்றளவும் அலோப்பதி மருந்துகளுக்கு அல்ககோல் சேர்க்கப்படுவதை யாவரும் அறிவர். உட்கொள்ளும் மருந்து செல்லுபடியாக வேண்டுமாக இருந்தால் அந்த நோயாளி சிலமணி நேரமாவது உறங்க வேண்டும். அந்தத் தேவையை எங்களுடைய மூலிகை வைத்தியர்கள் பாதிப்புக் குறைந்த ஒரு முறையைக் கைக்கொண்டு நிறைவேற்றியிருக்கிறார்கள். பிரசவத் தாய்மார்களுக்கு, வலிதரக்கூடிய நோவை உடையவர்களுக்கு இந்த முறையில் மருந்து தயாரிக்கப்பட்டு வழங்கப்பட்டு வந்திருக்கிறது. இன்று கொடுக்கப்படும் அல்ககோல் கலந்த இந்த அலோப்பதி மருந்து வகைகள் எங்களுக்கு வேறு பக்கவிளைவுகளை ஏற்படுத்துகின்றன. அந்த அல்ககோல் கலந்த பாணிமருந்துகளையே இன்று பாடசாலை மாணவர்கள் போதைப்பொருளாக உட்கொள்வதாக ஆய்வுகள் தெரிவிக்கின்றன. ஒரு மருந்து இன்னொரு நோயை உருவாக்கலாமா? இன்றைய பாமஸி மருத்துவம் என்ன செய்கிறது? இன்னொரு நோயைத்தான் உருவாக்கிறது. அதை எப்படி மருந்தாகக் கொள்ள முடியும். எங்களுடைய பச்சிலை, மூலிகை வைத்தியம் தானே சிறந்ததாக இருக்க முடியும்.


இந்த முறையில் ஒரு ஆலிம் சொல்வாராக இருந்தால் மருத்துவத்துறையிலுள்ள ஒரு மாணவனுக்கு இது ஒரு ஆய்வுப் பொருளாக மாறும். எனவே அங்கிருந்து எமக்கு ஆளணி கிடைக்கும். அல்லது கண்டுபிடிப்புக்கள் நடைபெறும். இப்போது இல்லாவிட்டாலும் இன்னும் பத்து வருடத்தில் நமது ஆரோக்கியத்திற்குப் பொருத்தமான உணவுகள், மருந்துவகைகள் பற்றிய ஒரு மாற்றம் நடைபெறும். இதைப்

பேசுவதற்கு யாரும் தயங்கத் தேவையில்லை. பகிரங்கமாக பேசுவதற்கு அனைவரும் முன்வரவேண்டும். றிஸ்வி முப்தியிலிருந்து நமது பள்ளி ஆலிம் வரை எல்லோரும் உரையாட வேண்டும்.

இவ்வகையாக வாசிப்புச் செய்வதைத் தடுத்துத் தடுத்தே இந்த சமூகத்தைச் சிந்திக்க விடாமல் மாற்றிவைத்திருக்கிறோம். முதலில் அதை உடைத்தெறிய வேண்டும். சிந்திப்பதற்கான சுதந்திரத்தை இறைவன் எல்லா மனிதனுக்கும் வழங்கியிருக்கிறான். இந்த மதரீதியாக இருக்கும் அதிகாரத்தை உடைத்தால்தான் தேவையானவர்களுக்கு இந்த வாசிப்பை வழங்க முடியும்.

என்னதான் பேசினாலும் இந்த நாட்டில் நாம் பத்து வீதமாகவே வாழ்கிறோம். தொண்ணூறு வீதமாக வாழும் மக்களில் பெரும்பாலானோர் குடிப்பவர்களாகவே இருக்கின்றனர். இந்த குடிக்கும் சமூகங்களுக்கிடையில் எப்படி இஸ்லாம் சென்று சேரமுடியும்? அதற்கொரு வித்தியாசமான அணுகுமுறையும் அறிவும் நமக்குத் தேவைப்படுகிறது. எனவே இப்படியான ஒரு அறிவுக்குள்ளால் பயணிக்கும் போதுதான் நாம் குடிபற்றிய தெளிவில் இருந்து கொண்டு அந்த சமூகத்திற்கு இஸ்லாத்தின் தூதைச் சொல்ல முடியும்.

❀





Rs. 300/=
ISBN 978-955-0697-06-9
9 789550 697069 >

pbd
612011180
KALAIPADUM MOWNAM
Rs. 300.00
19/07/2012